

ராணி முத்து

சுபா


ரூ.6

# மணல் மனிதன்

# முப்பாலும்... இப்பாலும்!



வாரியார்



ம.பொ.சி

திருத்தணி இலக்கிய மாநாட்டில் கிருபானந்த வாரியார் சொற்பொழிவாற்றினார். அவரிடம் அன்பர் ஒருவர் குவளையை நீட்டினார். வாரியார், "இது காப்பி. நான் சொல்வதோ அசல்" என்றார். அருகே அமர்ந்திருந்த ம.பொ.சி, "இது காப்பி அல்ல பால்" எனக் கூற–

வாரியார், "நான் முப்பாலும் கடந்து அப்பால் இருக்கிறேன். இதோ இப்பாலும் வந்துவிட்டது" என கூற, கூட்டத்தில் ஆரவாரம்.

–எஸ்.விஜயலட்சுமி, சென்னை.

## எண்ணெய்

தென் கிழக்கு ஆசியா, தென் அமெரிக்க நாடுகள், மேற்கிந்திய ...களில் தேங்காய் எண்ணெய்தான் சமையலில் பிரதானம். ...ராப்பாவில் ஆலிவ் எண்ணெய் இந்த இடத்தை பிடித்துள்ளது.

## காய்ச்சல்


...டலில் ஏற்படும் ஒரு நோய்க்கான வெளிப்பாடுதான் காய்ச்சல். உடல் ...னத் தானே காப்பாற்ற வைரஸ், பாக்டீரியாவை எதிர்த்து நடத்தும் ...ட்டத்தால் உண்டாகும் வெப்ப உயர்வுதான் காய்ச்சல்.



சுபா



# மணல் மனிதன்



1



நீங்கள் பிறந்தபோது உங்கள் வயது என்ன?

உங்கள் அம்மாவின் பாதுகாப்பான குகையைவிட்டு இந்தக் காற்றை நீங்கள் முதன் முதலாக சுவாசிக்கையில் உங்கள் வயது

என்ன?

ஒரே பதில்தான் தருவீர்கள். பூஜ்ஜியம்!

ஆனால், நான்!

பிறப்பெடுத்தபோது குறைந்தபட்சம் என் வயது இருபத்தி நான்கு.

ஆமா, இருபத்தி நான்கு குறைந்தபட்சம்!

எப்படி... எப்படி?

உங்கள் புருவங்கள் உயர்கின்றன. சந்தேகம் தொண்டைக் குழியில் பந்தாடுகிறது. மெல்லிய ஏளனம், கண் ஈரத்தில் மினுக்கிறது.

'யார் இந்தப் பைத்தியக்காரன்?' என்று மனதிற்குள் அலட்சியம் எழுகிறது.

என்னைப் பற்றி ஆரம்பத்தில் இருந்து சொல்கிறேன். தப்பு, ஆரம்பம் என்ற வார்த்தை நான் சொல்லும் தருணத்தைக் குறிப்பதற்கு சரியான– பொருத்தமான வார்த்தைதானா என்று கேட்டால், இல்லை!

உங்களைப் போலவே பூஜ்ஜிய வயதில் நானும் ஒரு முறை பிறந்திருக்கிறேன். ஆனால், அது பற்றி உங்களிடம் பேசுவதற்கு ஒரு விவரம் கூட என் நினைவில் இல்லை.

என்னுடைய இந்தப் பிறவி பற்றி மட்டும் பேசுகிறேன். கண் திறந்த முதல் தருணத்தில் இருந்து தெளிவாக, எந்தக் குழப்பமும் இல்லாமல் எனக்கு நினைவு இருக்கிறது.

கேளுங்கள்...

★★★

**எ**ன் நினைவின் முதல் தருணத்தில் நான் படுத்திருந்தேன்.

இடது பக்கம் வெள்ளைப் படுக்கையில் கை ஒடிந்த ஓர் இளைஞன்.

வலது பக்கம் இன்னொரு வெள்ளைப் படுக்கையில் கால்



முறிந்த மற்றொரு இளைஞன்.

மத்தியில் இருந்த வெள்ளைப் படுக்கையில், தலையில் பலத்த கட்டுடன் நான்.

அது ஒரு ஆஸ்பத்திரி என்பது எனக்கு அந்தக் கணத்தில் தெரியாது. சொல்லப் போனால் ஆஸ்பத்திரி என்ற வார்த்தை கூட அப்போது தெரியாது. வெள்ளை என்றும், படுக்கை என்றும், இளைஞன் என்றும் சொல்வதெல்லாம் பின்னால் நான் கற்றுக்கொண்டதை வைத்து.

கண் விழித்த அந்தத் தருணத்தில் நான் பூஜ்ஜியம்.

நினைவுகள் அத்தனையும் சுத்தமாக துடைக்கப்பட்டிருந்தவையே தவிர, அடிப்படையான சில உணர்வுகள், புரிதல்கள் ஒரு மிருகத்திற்குரிய அளவு என் மூளையிலும் பதிந்திருந்தன. பசி எடுக்கையில் உணவு வேண்டும் என்ற உணர்வும், பயம் வருகையில் பாதுகாப்பு தேவை என்ற உணர்வும் மிருக உணர்வுகளாக மேலோங்கி இருந்தன.

பீங்கான்களின் ஒலி என் உணவு வந்துவிட்டதை எனக்கு அறிவிக்கும். வெள்ளை உடையின் அண்மை, என் உடல் கவனிக்கப்படுவதைத் தெரிவிக்கும். ஸ்...ஸ் என்ற ஒலி குளிர்காற்றை இயந்திரம் வீசுவதை உணர்விக்கும்.

மனிதர்கள், மிருகங்கள், பறவைகள் என்ற வேறுபாடுகள் எனக்குப் புரிந்திருந்தன. என் மனதில் எண்ணங்கள் இருந்தன. வார்த்தைகளால் அமையாமல் உருவங்களாகவும், ஒலிக் குறிப்புகளாகவும் எண்ணங்கள் பதிந்திருந்தன. ஆண்கள், பெண்கள் என்ற வேறுபாடு புரிந்தது.

என்னால் பேச முடிந்தது. ஆனால், என் மொழிக்கு எனக்கே அர்த்தம் புரியவில்லை. என்னைக் கவனித்த மற்றவர்களுக்கும் என் மொழி எதையும் தெரிவிக்கவில்லை என்பதை அவர்கள் முகங்களைப் பார்க்கும்போது தெரிந்துகொள்ள முடிந்தது.

நேரம் பற்றியோ, நாட்கள் பற்றியோ கூட எனக்கு பிரக்ஞை இல்லை. கண்கள் திறந்திருக்கும் நேரம் குறைவாகவே

இருந்தது.

ஒரு முறை என்னை நெருங்கி நின்ற வெள்ளை உடுப்புப் பெண், "பசிக்கிறதா?" என்றாள்.

"பசிக்கிறதா?" என்றேன், பதிலுக்கு. அவள் சொன்னதைத் திருப்பிச் சொல்லுவதற்கு எனக்கு கண நேரம் கூட ஆகவில்லை.

பீங்கான் தட்டில் ரொட்டித் துண்டு வைத்து, "சாப்பிடு" என்றாள்.

'சாப்பிடு' என்றால் என்ன உத்தரவு என்று உடனே புரிந்தது. ரொட்டித் துண்டு போதாதபோது வயிற்றைத் தொட்டுக் காட்டினேன்.

"பசிக்கிறதா?" என்றாள்.

சிரித்தாள். "நீங்கள் சொல்லும்போது 'பசிக்கிறது' என்று சொல்ல வேண்டும்" என்றாள்.

ஒரு வார்த்தைக்கூட எனக்கு விளங்கவில்லை.

"நீங்கள்"– என்னை நெஞ்சில் தொட்டாள்.

சொல்லும்போது – 'வாயைத் திறந்து பேசுவது போன்ற சைகை.

'பசிக்கிறது' – கூப்பிடும் நடிப்பு.

எனக்கு வார்த்தைகள் புரிந்தன.

"பசிக்கிறது" என்றேன்.

சந்தோஷமானாள். இன்னொரு ரொட்டித் துண்டு போட்டாள்.

"இது ரொட்டி. இது தண்ணீர். இது பால். இது தட்டு. இது தம்ளர். இது கட்டில். இது மெத்தை. நான் நர்ஸ். நீங்கள்?" – வார்த்தைகள் நுட்பமாகப் புரிந்தன.

"நான்... நான்..."– கண்களை மூடினேன்.

நான் யார்?

"என் பெயர் கீதா..."

"என் பெயர்..."– உதடுகளைப் பிதுக்கினேன். 'தெரியாது' என்று





# காந்தி உணவு



ஒரு நாள் ரெயிலில் பயணித்துக் கொண்டிருந்தேன். வண்டி ஒரு நிலையத்தில் நின்றது. தகர டின்னை கையில் வைத்துக்கொண்டு 'காந்தி உணவு' என்று ஒருவர் கூவிக்கொண்டே வந்தார். விசாரித்தேன். அவர் விற்றது நிலக்கடலைப் பருப்பு. மகாத்மா காந்தி விரும்பிச் சாப்பிட்டது என்பதால், அதற்கு அப்பெயர்.

அதோடு... நல்ல வியாபார உத்தி!

– அ. அப்துல் அஜீஸ், மதுரை.

# விதர்க்கம்

ஒரு விஷயம் குறித்து கருத்து சொல்வதில் 3 விதமான அணுகுமுறை உண்டு. அவை தர்க்கம், குதர்க்கம், விதர்க்கம்.இதில் தர்க்கம் என்பது விஷயம் எதுவென்றானாலும், அதைப் பற்றி தனக்கென ஒரு கருத்தை ஏற்படுத்திக்கொள்வது; குதர்க்கம் என்பது அந்தக் கருத்து சரியானதுதான் என்பதற்கான காரணங்களை அடுக்கிக்கொண்டே போவது; விதர்க்கம் என்பது, ஒரு பொருள் குறித்து மாறுபட்ட கருத்துகளைத் தானே அலசிப் பார்த்து, எது சரியானது என்று உணர்வது.

– சி.பி.செந்தில்குமார்,
சென்னிமலை.

சொல்லுவதற்கு உதடுகளைப் பிதுக்க வேண்டும் என்ற சைகை என் நினைவடுக்குகளில் எப்படியோ பதிந்திருந்தது.

கட்டில் பிடித்து– அன்றைக்கு மாலை எழுந்து நின்றேன்.

"டாக்டர் உங்களை அழைத்து வரச் சொன்னார்"– வார்த்தைகளுடன் அவள் செயல் குறிப்புகளையும் சேர்த்து பிரயோகித்து எனக்கு உணர்த்தினாள்.

நான்கு வெள்ளை உடுப்பு ஆசாமிகள் என்னை என்னென்னவோ கேட்டார்கள். 'சாப்பாடு, ரொட்டி, தண்ணீர்'– என்றெல்லாம் எனக்குத் தெரிந்த வார்த்தைகளைத் தவிர வேறெதுவும் அவர்களுக்கு என்னால் உருப்படியாக சொல்ல முடியவில்லை.

"இவருக்கு குண்டடி பட்டதில் எல்லா நினைவுகளும் அழிந்துவிட்டது டாக்டர். ஆனால், வார்த்தைகளைச் சொன்னால் சட்சட்டென்று கற்றுக்கொள்கிறார்!" என்றாள் சீதா.

என்னைப் பற்றி அவள் என்ன சொல்லுகிறாள் என்பது புரியாமல்– ஆனால், என்னைப் பற்றி ஏதோ சொல்லுகிறாள் என்பது புரிந்து, மந்தமாக அவளைப் பார்த்து சிரித்தேன்.

"நடிக்கிறான், ராஸ்கல்" என்றார், ஒரு வெள்ளை உடுப்பு.

மந்தமான சிரிப்பை அவருக்கும் தந்தேன்.

அறைக்குள் டக் டக் என்று பூட்ஸ் ஒலிக்க ஒருத்தர் நுழைந்தார். பூட்ஸ் என்றெல்லாம் இப்போது உங்களுக்கு சொல்ல முடிகிறதே தவிர, அன்றைக்கு வார்த்தைகளற்ற உருவங்களாகத்தான் புரிந்துகொண்டேன். அடர்ந்த பச்சை நிற உடைகள் அணிந்திருந்தார். கம்பீரமான முகம். நிமிர்ந்த உடம்பு. கணீரென்ற குரல்.

"இவனால் இப்போது நடமாட முடிகிறதா? என் விசாரணையை தொடங்கலாமா?" என்றார், டாக்டரைப் பார்த்து.

"விசாரணையைத் தாங்கும் அளவுக்கு உடம்பில் வலிமை வந்துவிட்டது. ஆனால், உங்கள் விசாரணையைப் புரிந்துகொள்ள இவனால் முடியாது. இவனுக்கு மொழி மறந்துவிட்டது..."

"நடிக்கிறான்!"

"இல்லை, கர்னல்... உண்மையிலேயே இவன் மூளையில் பலத்த அடிபட்டிருக்கிறது. நினைவு அடுக்குகளில் பெரும் பகுதி கலைந்துவிட்டது. அவன் பேசும் மொழிக்கு அர்த்தமே இல்லை. ஆனால், இவனுக்கு நல்ல நினைவாற்றல் இருக்கிறது. கற்றுக்கொள்ளும் ஆர்வம் இருக்கிறது. மொழியை இவனுக்கு சீக்கிரத்தில் பயிற்றுவிக்கலாம்."

"செய்யுங்கள்... முழு கவனத்துடன், எப்போதும் உங்கள் கண்காணிப்பிலேயே வைத்திருங்கள். சீக்கிரம் இவனை தயார் செய்யுங்கள். இவனிடம் கேட்க வேண்டிய கேள்விகள் நிறைய இருக்கின்றன..."

அவர் விருட்டென்று கிளம்பிப் போய்விட்டார்.

மறுநாள் கண்ணாடி போட்ட ஒரு இளைஞன் என்னத் தேடி வந்தான்.

"என் பெயர் ஜோஷி. உனக்கு 'பிரைவேட் டியூஷன்' எடுக்க வந்திருக்கிறேன்."

மந்தமான சிரிப்பு சிரித்தேன்.

"அ, ஆ"- என்று ஆரம்பித்தான்.

நான்கு வாரங்களில் என் மூளை நிரம்பிவிட்டது. எத்தனை வார்த்தைகள், எத்தனை விவரங்கள், எத்தனை எண்ணங்கள்!

என்னால் மற்றவர்களுடன் சரளமாகப் பேச முடிந்தது. அவர்கள் பேசுவதைப் புரிந்துகொள்ள முடிந்தது.

"இதோ... என் பெயர்?"– என்றேன், நர்சைப் பார்த்து.

"உங்கள் பெயர்?" அவள் சிரித்தாள். "நினைவுக்கு வரவே இல்லையா?"

"இல்லை..."

"எனக்குப் பிடித்த பெயர் சொல்லவா?"

"சொல்..."

"ஆதி..."

"சூரியனின் பெயர். எனக்குப் பிடித்திருக்கிறது..."

"இன்று முதல் நீங்கள் ஆதி..."



"ஆதி... உங்களை டாக்டர் கூப்பிடுகிறார். 'சீப் டாக்டர்' அறைக்கு வரச் சொன்னார்" என்றாள், இன்னொரு நர்ஸ் இடையில் புகுந்து...

"இதோ... உன்னை அப்புறம் பார்க்கிறேன்..." என்று டாக்டரின் அறைக்கு நடந்தேன்.

★★★

மூன்று டாக்டர்களுடன், அன்றைக்கு வந்த கர்னலும் இருந்தார்.

"இப்போது இவன் விசாரணைக்கு தயார்..." என்றார், பெரிய டாக்டர்.

கர்னல் என்னை ஏற இறங்கப் பார்த்தார்.

"உன் பெயர் என்ன?"

"ஆதி"

"என்னது?"

"ஆதி. இப்போதுதான் பத்து நிமிடத்திற்கு முன் முடிவானது."

"விளையாடாதே. நான் கேட்டது உன்னுடைய உண்மையான பெயர்..."

"உண்மையான பெயர், பொய்யான பெயர் என்று இரண்டு இல்லை. இருப்பது ஒரே பெயர்தான் ஆதி..."

"டாக்டர் இவனை நான் தனியே விசாரிக்க விரும்புகிறேன். எங்கள் இடத்திற்கு அழைத்துப் போகலாமா?"

"தாராளமாக! ஆனால், இவனுடைய படிப்பு முடியவில்லை. இன்னும் நாற்பது நாள் படித்தால், இவன் கல்லூரிப் படிப்புக்கு இணையாக படித்துவிடுவான். இவனுடைய கற்கும் வேகம் அபாரமாய் இருக்கிறது..."

"விசாரணை முடிந்து இரண்டு நாட்களில் கொண்டு வந்து விடுகிறேன்."

"கர்னல், கைதியை உங்கள் பொறுப்பில் அழைத்துப் போகும்

முன் இந்த ரிஜிஸ்தரில் ஒரு கையெழுத்து போடுங்கள்..."

"யெஸ், டாக்டர்."

என்னது?

கைதியா?

நானா?

## 2



அது ஒரு சிறிய அறை. மத்தியில் சிறிய வட்டமான மேஜை. அதன் மீது குவியலாக சில துணிகள். மேஜையின் மறுபுறம் ஒரு செங்குத்தான நாற்காலி.

நாற்காலியில் உட்கார்த்தி வைக்கப்பட்டேன்.

"கர்னல் என்றால் என்ன?" என்றேன்.

கதவு சாத்தி கர்னல் என் எதிரே வந்து, இன்னொரு நாற்காலியில் அமர்ந்தார்.

"ராணுவத்தில் உயர் பதவி..." என்றார். சிப்பாயில் இருந்து லெப்டினன்ட் ஜெனரல் வரை– பல பதவிகள் அமைந்திருப்பதை வரிசையாக விளக்கினார். எங்கள் குரல்கள் அந்த அறையில் அதிகமாக எதிரொலித்தன.

ஆர்வத்துடன் எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டேன்.

"இப்போது சொல், உன் உண்மையான பெயர் என்ன?"

"எனக்குத் தெரிந்த ஒரே பெயர் ஆதிதான். கர்னல், நான் எப்படி அந்த ஆஸ்பத்திரிக்கு வந்தேன் என்று சொல்லுங்கள்... என் நினைவைத் தட்டிப் பார்க்கிறேன்."

"இது இந்தியாவின் வட பகுதி என்பது உனக்குத் தெரியும்."

"சொன்னார்கள்."

"இங்கிருந்து அறுபது கிலோ மீட்டர் தொலைவில் இந்தியாவின் எல்லை இருக்கிறது. எல்லைப் பகுதியில் சில வாரங்களுக்கு முன்பு திடீரென்று பாகிஸ்தான் தாக்கியது. தாக்கியது என்றால்



சும்மா கும்மாங்குத்து தாக்குதல் இல்லை. ஒரு சிறிய போரே நடந்தது. வெடிகுண்டுகள் எறியப்பட்டன. டாங்கிகள் மோதின. இரண்டு போர் விமானங்கள் சுடப்பட்டன. இரு பக்கமும் வீரர்கள் வீழ்ந்தனர். இந்திய எல்லைக்குள் பாகிஸ்தான் ஊடுருவ முனைந்ததை வெற்றிகரமாகத் தடுத்துவிட்டோம்.

பதுங்கு குழியில் இருந்த எங்கள் வீரர்களை மீட்கப் போனபோது, அந்தக் குழியில் உன்னைக் கண்டெடுத்தோம். முதுகிலும், பின் மண்டையிலும் பலத்த அடிபட்டு மயங்கிக் கிடந்தாய். நீ இந்திய வீரனில்லை என்பதை உணர்ந்தோம். பாகிஸ்தான் வீரனாக இருக்க வேண்டும் என்று முடிவு செய்து, உன்னைக் கைது செய்தோம். போர்க் கைதியாக நீ இந்தியாவில் சில காலம் கழிக்க வேண்டும் என்று தீர்மானித்தோம்."

"அப்படியானால் நான் பாகிஸ்தானைச் சேர்ந்தவனா?"

"அப்படித்தான் இருக்க வேண்டும். ஆனால், ஒரு விஷயம் எங்களுக்குக் குழப்பமாய் இருக்கிறது..." என்றார், கர்னல்... என் கண்களை ஆழமாகப் பார்த்து.

"என்ன?"

"போர்முனையில் சிப்பாயாக இருப்பவன் என்று உன்னை நினைத்தால், சில சந்தேகங்கள் வந்தன."

"என்ன சந்தேகங்கள்?"

"நீ அணிந்திருந்த ராணுவ உடை! அது உன் அளவு உடை இல்லை. நீ ஆறரை அடி உயரம் இருக்கிறாய். அது உன் அளவிற்கு தைக்கப்பட்ட சட்டை இல்லை. ராணுவ பேன்ட்டும் உன் அளவிற்கு சிறியதாகத்தான் இருந்தது. பூட்ஸ்களும் சிறியன. உன் உள்ளாடைகள் கூட பொருத்தமில்லாமல் தெரிந்தன. போர்முனைக்கு அனுப்பப்படும் வீரனுக்கு சிறிய உடைகள் கொடுத்து, பாகிஸ்தான் ராணுவம் அனுப்பி இருக்குமா என்று புரியவில்லை. அதைவிட இன்னும் முக்கியமாக ஒரு தடயம் கிடைத்தது."

மேஜை மீதிருந்த துணிகளைப் புரட்டினார் கர்னல். நான் கண்டெடுக்கப்பட்டபோது இந்த உடைகளில்தான் இருந்தேன்

என்பதை உணர்ந்தேன். என் அளவிற்கு அந்த உடைகள் சிறியவைதான். ராணுவச் சட்டையை எடுத்தார். அதன் இடது பாக்கெட் அருகே திருப்பிக் காட்டினார்.

சட்டையில் ஒரு வட்டமான பொத்தல் இருந்தது. பொசுங்கிய பொத்தல்.

"இது என்ன தெரிகிறதா? தோட்டா துளைத்த அடையாளம். அப்படி இடது மார்பில் தோட்டா துளைத்திருந்தால், உன் மார்பில் அந்த இடத்தில் ஒரு காயம் இருக்க வேண்டுமே. அப்படி எந்தக் காயமும் இல்லை. பின் மண்டை, முதுகு தவிர உன் மீது வேறு காயம் இல்லை. இந்த உடைகள் யாருடையவை?"

அவரை வெறித்துப் பார்த்தேன்.

"சத்தியமாக எனக்குப் புரியவில்லை" என்றேன்.

"நன்றாக யோசி. தனிமையில் யோசி. இப்போது இந்த அறையை நான் பூட்டிக்கொண்டு போகப் போகிறேன். இங்கு இருட்டைத் தவிர வேறெதுவும் இருக்கப் போவதில்லை. நாற்காலி, மேஜையெல்லாம் கூட எடுத்துவிடப் போகிறேன். இருட்டில் யோசி. மறுபடி மறுபடி யோசி. மூளையைக் கசக்கி யோசி. மாலை நான்கரை மணிக்கு மீண்டும் வருவேன். அப்போது எனக்கு விடைகள் வேண்டும்."

கதவு பூட்டப்பட்டது. இருட்டு.

இருட்டு எனக்கு வித்தியாசமாய் இல்லை. ஆஸ்பத்திரியில் எத்தனையோ நாட்களாய் இருட்டில்தான் இருந்திருக்கிறேன். நினைவுகளற்ற நிலையில் பல வாரங்கள் செயலற்று கிடந்திருக்கிறேன்.

கண்களை மூடிக்கொண்டேன். தரையில் படுத்தேன். யோசித்தேன், யோசித்தேன். யோசிப்பது சுகமாக இருந்தது.

சில நிமிடங்களுக்குள் நினைவுகள் நழுவின. சுலபமாய்த் தூங்கிப் போனேன்.

★★★

கதவு திறக்கப்பட்ட சத்தம்தான் என்னை எழுப்பியது.



விளக்குகள் போடப்பட்டு, அறை திடீரென்று வெளிச்ச வெள்ளத்தில் அமிழ்ந்தபோது கண்கள் கூசின. எழுந்து உட்கார்ந்தேன்.

மேஜையும், நாற்காலிகளும் உள்ளே கொண்டு வரப்பட்டன.

தண்ணீர் கொடுக்கப்பட்டது. முகம் கழுவி, நாற்காலியில் அமர்ந்தேன். மந்தமாக சிரித்தேன்.

"பேசத் தயாராகிவிட்டாயா?" என்றார், கர்னல்.

"பேசத் தயார். ஆனால், பேசுவதற்குத்தான் எந்த விவரமும் என்னிடம் இல்லை" என்றேன். "யோசித்தால் எனக்கு சுலபமாகத் தூக்கம் வருகிறது..."

"தூக்கமா? ஏ.ஸி.யை கூட அணைத்துவிட்டேனே! காற்றில்லாமல் இந்த அறையே சூடாகி இருக்குமே. வியர்த்து ஊற்றி இருக்குமே. உன்னால் தூங்கக் கூட முடிந்ததா?" கர்னலின் குரலில் ஆச்சரியம்.

"எனக்கு வியர்க்கவில்லையே...?" என்றேன். குனிந்து பார்த்துக்கொண்டேன்.

"நன்றாக யோசித்துப் பார்த்தாயா? கடைசி கடைசியாக உன் நினைவுகள் எவ்வளவு தூரம் போகின்றன?"

"ஆஸ்பத்திரியில் நான் கண் திறந்து பார்த்தேனே... அதற்கு முந்தைய நினைவுகள் எதுவும் எனக்கு இல்லை."

அவர் கொண்டு வந்திருந்த சிறு பெட்டியை திறந்தார். அதில் இருந்து ஒரு 'புரொஜக்டர்' எடுத்து மேஜையில் வைத்தார். சில 'ஸ்லைடு'களை ஒவ்வொன்றாக செருகி 'ஆன்' செய்தார்.

சுவரில் வெவ்வேறு ஊர்களில் எடுக்கப்பட்ட முக்கியமான தெருக்களின் படங்கள் திரையில் விழுந்தன.

"கவனி... இந்த மசூதியைப் பார்த்தால் உனக்கு ஏதாவது நினைவுக்கு வருகிறதா? இந்த உயரமான கட்டிடம் பார்த்தால், பார்த்த ஞாபகம் வருகிறதா? இந்த படகுத்துறையைப் பார்த்தால், பழகிய இடம் போல் தெரிகிறதா?" – என்றெல்லாம் ஒவ்வொரு படத்தையும் குறிப்பிட்டு கேட்டார்.

எந்தப் படமும் என் நினை[illegible]களில் எந்த கிளர்ச்சியையும் ஏற்படுத்தவில்லை என்பதே உ[illegible]ம.

சொன்னேன்.

"அடுத்ததாக ஒரு 'ஹிப்னாடிஸ்ட்'டைத் தான் நாங்கள் நியமிக்க வேண்டியிருக்கும்."

"ஹிப்னாடிஸ்ட் என்றால்...?"

"உன்னுடைய மனதிற்குள் ஆழமாக ஊடுருவி, அங்கே உள்ள எண்ணங்களை எல்லாம் 'ஹிப்னாடிஸ்ட்'டால் புரட்ட முடியும். ஆனால், அது வெற்றி பெற உன்னுடைய முழு ஒத்துழைப்புதான் முக்கியம்..."

எனக்கு ஆனந்தமாக இருந்தது. என் மனதை வெளிக் கொண்டுவர வழிமுறைகள் இருக்கிறதா? நான் யார் என்று புரிந்துவிடப் போகிறதா?

"தேங்க்யூ கர்னல், என் ஒத்துழைப்பு முழுமையாய் இருக்கும்..." என்று கை குலுக்கினேன்.

★★★

மேலும் சில நாட்கள்.

மேலும் சில பாடங்கள்.

மேலும் சில அனுபவங்கள்.

என் அறிவு அகலமாகிக் கொண்டிருந்தது.

என்னுடைய சில திறமைகள் எல்லோருக்கும் மகா ஆச்சரியமாய் இருந்தன.

ஒரு புத்தகத்தைப் படித்தால், அதை வரி வரியாய் என்னால் திருப்பிச் சொல்ல முடிந்தது. என் மூளையின் சக்தி அபாரமாய் இருந்தது. உடனே உடனே எல்லாவற்றையும் கிரகித்து சேர்த்துக்கொண்டது.

சில ராணுவ அதிகாரிகள் என்னை வெவ்வேறு கோணத்தில் கேள்வி கேட்டு துளைத்தார்கள். வெவ்வேறு மருத்துவர்கள் என்னை வந்து சந்தித்தார்கள். மருத்துவமனையில் எல்லோருக்கும்



நான் அதிசயப் பிறவி போன்ற காட்சிப் பொருளானேன்.

ஒரு தலை சிறந்த 'ஹிப்னாடிஸ்ட்'டை சந்திக்க, இரண்டு நாட்களில் நான் அழைத்துப் போகப்படுவேன் என்று சொன்னார்கள்.

கர்னலை சந்தித்தேன்.

"கர்னல், ஆஸ்பத்திரியிலேயே என்னை இன்னமும் வைத்திருக்க வேண்டுமா? எனக்கு தனியாக ஒரு இடம் தரக் கூடாதா?"

"நீ கேட்பதற்கு முன்னாலேயே அதற்கான ஏற்பாடு நடந்துவிட்டது" என்றார் கர்னல்.

"இன்றில் இருந்து உனக்கு என் வீட்டிற்கு அருகில் ஒரு தனியறை பார்க்கப்பட்டு இருக்கிறது. அங்கே வந்து தங்கிக்கொள்ளலாம். ஆனால் ஒன்று. நீ பாகிஸ்தானின் உளவாளியல்ல என்று நிச்சயமாகும் வரை உன்னை சுதந்திரமாக விட முடியாது. உன் அறை வாசலில் இரண்டு பேர் காவலுக்கு இருப்பார்கள்..." - கண்களில் இரக்கம் மின்ன சொன்னார்.

"அதனால் என்ன?" என்றேன்.

★★★

எனக்கு கொடுக்கப்பட்ட அறை மிக அழகாக இருந்தது.

இரண்டு அறைகள். தனி குளியலறை.

மெத்தையில் பூக்கள் அச்சிட்ட பருத்தித் துணி விரிப்பு. ஜன்னல்களை மூடும் அலங்காரத் திரைகள். சுவரை அழகுபடுத்தும் இயற்கை ஓவியங்கள். ஒரு குட்டி டெலிவிஷன். ஒரு ஸ்டீரியோ சிஸ்டம்.

பாகிஸ்தான் கைதி என்று முத்திரை இடப்பட்டவனுக்கு இவ்வளவு சலுகைகள் கிடைத்தது சற்று ஆச்சரியம்தான்!

இரண்டாம் நாள் கர்னல் என் அறைக்கு வந்தார்.

"ஆதி, நாம் இன்னும் சற்று நேரத்தில் புறப்படுகிறோம்."

"எங்கே கர்னல்?"

"ஹிப்னாடிஸ்ட் மித்ராவைப் பார்க்க..."

# 3



ஜீப் பயணம் செய்துகொண்டிருந்தது. குதித்துக் குதித்து நகர்ந்தது. காரணம், சாலை அப்படி!

புதிதாக தோண்டப்பட்டு ஜல்லியும், தாரும் கொட்டி நிரப்பப்பட்டு எந்த பகுதியிலும் சீராக இல்லாமல் இருந்தது. கிட்டத்தட்ட நான்கு கிலோ மீட்டர் தூரத்திற்கு சாலை ராஜஸ்தானின் புகழ் வாய்ந்த பாலைவனத்தினூடே போடப்பட்டிருந்தது. காற்றில் மணல் அடித்து சாலையை மூடிவிடக் கூடாது என்பதற்காக, சாலை சற்று உயரத்தில் அமைக்கப்பட்டிருந்தது.

அந்தப் பாலைவன சாலையில் பயணம் செய்தபோதுதான் என்னைப் பற்றிய புதிய சேதி ஒன்று வெளிப்பட்டது.

பாதி தூரம் கடந்திருந்த நிலையில், எதிரே ஒரு ராட்சஸ லாரி வந்தது. குறுகலான சாலையில் எதிரெதிரே இரண்டு வாகனங்கள் கடக்க வேண்டும் என்றால், மிகவும் ஓரம் ஒதுங்கி, நிதானமாகத்தான் கடக்க முடியும். ஜீப்பைப் பார்த்ததும் லாரி வேகம் குறைத்திருக்க வேண்டும். ஆனால் குறைக்கவில்லை. முக்கால் சாலைக்கு மேல் ஆக்கிரமித்துக்கொண்டு லாரி அதே வேகத்தில் எதிரே வர, ஜீப் டிரைவர் மிரண்டு போய் வேறு வழியின்றி ஜீப்பை இடதுபுறம் அதிகமாக ஒதுக்க, சாலையின் கரையைத் தாண்டி ஜீப் சரேலென்று கீழே மணல் வெளியில் இறங்கிவிட்டது.

"அயோக்கியன்... எப்படி நிறுத்தாமல் போகிறான் பார்!" என்று கர்னல் உறுமினார்.

சரிந்த ஜீப்பில் இருந்து அவர் வெளியே வந்தார்.

நான் குதித்து இறங்கினேன். லாரியைப் பிடித்துவிடும் உத்வேகம் என்னுள் எழுந்தது. லாரி பயணம் செய்துகொண்டிருந்த திசையில் மணல் வெளியில் ஓட ஆரம்பித்தேன். முழு வேகத்துடன் மூச்சைப் பிடித்து ஓடினேன்.



ஐந்து நிமிடங்களுக்குள் லாரியை இணையாக 'ஓவர்டேக்' செய்து சாலையில் தாவி ஏறி, குறுக்கில் கை காட்டி நிறுத்தினேன்.

என் மீது மோதக் கூடாது என்ற பயத்துடன் டிரைவர் பிரேக் அடித்ததும், லாரிக் கதவைத் திறந்து அவனை வெளியே இழுத்தேன்.

கர்னலும், எனக்குக் காவலாக வந்த இரண்டு சிப்பாய்களும் துப்பாக்கிகளோடு மண்ணில் தடுமாறித் தடுமாறி ஓடி வந்துகொண்டிருந்தார்கள். ஒரு நிலையில் அவர்கள் சாலையில் ஏறி, அதிக வேகத்துடன் ஓடி வந்து சேர்ந்தார்கள். அதற்கே இருபது நிமிடங்கள் ஆயின.

கர்னலின் உடையைப் பார்த்ததும் டிரைவர் மிரண்டான். பெரிய சல்யூட்கள் வைத்தான்.

"ஜீப்பை நான் சரியாக கவனிக்கவில்லை. நேரத்துடன் சரக்கைக் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற அவசரத்தில் வேகமாக ஓட்டிவிட்டேன்" என்று கால்களில் விழுந்தான்.

லாரியை 'ரிவர்ஸ்' எடுத்து, அதில் கயிறு கட்டி– ஜீப்பை சரிவில் இருந்து மேலே ஏற்றி மீட்டோம். பல மன்னிப்புகளுக்குப் பிறகு லாரி விலகிப் போனது. அது பெரிதல்ல!

கர்னல் என்னை விநோதமாகப் பார்வையிட்டார்.

"என்ன கர்னல்?"

"மணல் வெளியில் உன்னால் வேகமாக ஓட முடியுமா?"

"ஏன் கேட்கிறீர்கள் கர்னல்?"

"ஓட முடியுமா?"

"எனக்குத் தெரியாது கர்னல்" என்றேன், தயக்கத்துடன்.

"ஓட முடியும்... நான்தான் என் கண்களால் பார்த்தேனே. என்ன ஒரு வேகம். என்ன ஒரு வேகம்!"

என்க்கு கெட்டியான சாலையில் ஓடுவதைவிட, மணலில் ஓடுவது சுலபமாக இருந்தது கர்னல்."

"அது எப்படி சாத்தியம்? மணலில் நாங்கள் புதைய புதைய, உன்னால் வேகம் வெகுவாகக் குறைந்து அல்லவா போகிறது?

எப்படி அவ்வளவு வேகமாக ஓட முடிந்தது? இன்னொரு தடவை அதைப் பண்ணிப் பார்க்க வேண்டும் போலிருக்கிறது எனக்கு...”

சிப்பாய்களில் ஒருத்தரைக் கூப்பிட்டார் கர்னல்.

“இரண்டு பேரும் அதோ அந்த விளக்குக் கம்பத்தின் நிழல் வரை மண்ணில் ஓடிவிட்டு வாருங்கள்... எவ்வளவு நேரமாகிறது என்று நான் பார்க்க வேண்டும்...”

“கர்னல், ஷூவைக் கழற்றிவிட்டால் என்னால் இன்னும் வசதியாக ஓட முடியும் என்று நினைக்கிறேன்.”

“வாட்! ஷூவைக் கழற்றுவதா? உனக்கென்ன மூளை பிசகிவிட்டதா? இப்போது மணி மதியம் ஒன்று. ராஜஸ்தான் பாலைவனம் இது. காற்றில் இருக்கும் அனலே தாங்க முடியாமல் உடம்பு தகிக்கிறது. ஷூவைக் கழற்றிவிட்டு இந்த மணலில் எப்படி கால் வைக்க முடியும்?”

“நான் முயற்சி பண்ணலாமா?” என்றேன்.

என்னை நம்ப முடியாமல் பார்த்தார். “சரி” என்றார்.

ஷூக்களையும், சாக்ஸ்களையும் கழற்றிவிட்டு மணலில் இறங்கினேன்.

“கால்களை மாற்றி மாற்றிக்கூட நிற்கவில்லை நீ”– என்று கர்னல், கண்களை அகலமாக்கிப் பார்த்தார். “மணலில் கால் பொறிந்துவிடும்.”

எனக்கு எந்த வித்தியாசமும் தெரியவில்லை.

சிப்பாய்களும் என்னை பேயைப் பார்ப்பது போலப் பார்த்தார்கள்.

நான் ஓட ஆரம்பித்தேன். கர்னல் குறிப்பிட்ட விளக்குக் கம்பத்தைப் போய்த் தொட்டுவிட்டு நான் திரும்பியபோதுதான்– என்னுடன் புறப்பட்ட சிப்பாய் நூறு மீட்டர் கடந்திருப்பான்.

“அதிசயம்” என்றார் கர்னல்.” மணலில் – அதுவும் கொதிக்கும் மணலில் எவ்வளவு வேகமாக ஓடுகிறாய். மூச்சிரைப்புக்கூட இல்லை. பாகிஸ்தானில் பாலைவனத்தில் வாழ்ந்தவனா நீ?”



“பாகிஸ்தானில் இருந்தவனா என்பதே தெரியவில்லையே கர்னல்.”

“எங்கே உன் பாதங்களைக் காட்டு... வெயில் மணலில் கொப்பளித்து இருக்கிறதா பார்ப்போம்...”

பாதங்களைக் காட்டினேன். சற்றே சிவந்து இருந்தனவே தவிர, வேறெந்த மாற்றமும் இல்லை.

கர்னல் இப்போது என்னைப் பார்த்த பார்வையில் மதிப்பு இருந்தது.

“சரியான நெருப்பு கோழி நீ! எப்படியும் மித்ரா உன்னைப் பற்றி – உன் கடந்த காலத்தைப் பற்றிச் சொல்லிவிடுவார்” என்றவர்– “உனக்கு ஆதி என்று சூரியனின் பெயர் வைத்தவள் தீர்க்கதரிசிதான்” என்றார்.

ஷூக்களை மாட்டிக்கொண்டு ஜீப்பில் ஏறி அமர்ந்தேன்.

உண்மையில் எனக்குள் ஆர்வம் கொப்பளித்துக்கொண்டு இருந்தது. ‘இன்றைக்காவது தெரியுமா – நான் யார் என்று?’

உண்மையில் நான் யார்?

எங்கிருந்து வந்தேன்?

★★★

நகரத்தில் பிரதானமான இடத்தில் இருந்தது பண்டித் மித்ராவின் ஆராய்ச்சியகம்.

கழுத்து உயரத்திற்கு கல்சுவர் பளிங்குக் கற்களில் பண்டித் மித்ராவின் பெயர் பொறிக்கப்பட்டிருந்தது. அலங்காரமான இரண்டு பந்து விளக்குகள் இருள்வதற்காகக் காத்திருந்தன.

பசுமையான தோட்டத்தினூடே சிமெண்டு பாதை.

தேக்குக் கதவுகள்.

திறப்பதற்கு வேலையாள்.

‘கார்ப்பெட்‘ அணிந்த வரவேற்பறை.

புன்னகை அணிந்த வரவேற்பாளினி.

எங்களை ‘குஷன்’ நாற்காலிகளில் உட்கார வைத்து, மித்ராவிற்கு

செய்தி சொன்னாள்.

உள்ளே அனுப்பச் சொன்னார்.

அந்த அறை வித்தியாசமாக அமைக்கப்பட்டு இருந்தது. வட்டமான பந்து போல சுவர்கள். நடுவில் ஏழடி நீளத்தி ஒரு மரக் கட்டில்... தலையணை இன்றி. அந்தக் கட்டிலி அமைப்பே தலைப் பகுதியில் சற்று உயர்த்தப்பட்டு இருந்த சுவர்கள் வெளிர் நிற சாம்பல் நிறம் அணிந்திருந்தன. அ குளுமைப்படுத்தப்பட்டு இருந்தது. மிக சன்னமான இ 'ஸ்பீக்கர்'களில் வழிந்தது.

புல்லாங்குழல் இசை இதமாய் நரம்புகளை வருடியது. மன அமைதிப்படுத்தியது.

பண்டித் மித்ரா, அறைக்குள் நுழைந்தார்.

குள்ளமாய் இருந்தார். அதிக பட்சம் ஐந்தடி நான்கு அங்குல தலைமுடியை சர்ர் என்று மேலே தூக்கி வாரி இருந்தார் புருவங்களிலும், மீசையிலும் ஒன்றிரண்டு நரை. துல்லியமா கண்ணாடிகளுக்குப் பின்னே சற்று சீரியஸான கண்கள். பற்கள் பளீர்.

சபாரி சூட்டின் பாக்கெட்டில் இருந்து பேனா எடுத்தார். ஒரு வெள்ளை அட்டையில் 'கேஸ் நம்பர்' எழுதி வட்டமிட்டார். அட்டையை என் பக்கம் தள்ளினார்.

"நிரப்பு" என்றார். கனத்த- உருவத்திற்கு தொடர்பில்லாத கம்பீரமான குரல்.

நிரப்பும் வரையில் அவரிடம் கர்னல் பேசிக்கொண்டிருந்தார்.

நிரப்பி முடித்து நீட்டினேன்.

என்னை புருவங்களை உயர்த்தி ஏறிட்டார்.

"பெயர்: ஆதி (இப்போது). வயது தெரியாது . பால் : ஆண். முகவரி: இந்தியா (இப்போது). தாய் மொழி: ஏதுமில்லை. நினைவில் நிற்கும் நாள் : கிடையாது. அப்பா : தெரியாது. அம்மா: தெரியாது. தொழில்: கிடையாது. பிரச்சினை: புரியவில்லை.



திருமணம்: இந்தப் பிறவியில் ஆகவில்லை."

நிறுத்திவிட்டு புன்னகை செய்தார்.

என்ன வசிகரமான புன்னகை!

"நீ பூமியைச் சேர்ந்தவனா, இல்லையா?" என்றார், சிரிப்பு மாறாமல்.

"உண்மையைச் சொன்னால், அதுவும் தெரியாது" என்றேன்.

"இந்திய ராணுவம் என்னை ஒரு பதுங்குக் குழியில் கண்டெடுத்து இருக்கிறது. மருத்துவ உதவிகள் செய்து என்னைப் பிழைக்க வைத்தது. காரணம், நான் பாகிஸ்தானியன் என்ற நம்பிக்கை. பாகிஸ்தானைப் பற்றிய விவரங்களை என் மூலம் தெரிந்துகொள்ளலாம் என்ற ஆசையோடு என்னைப் போர்க் கைதியாக அறிவித்தது. ஆனால், எனக்கோ என்னைப் பற்றித் தெரியாதபோது, நான் ராணுவக் கேள்விகளுக்கு என்ன பதில் சொல்ல முடியும்? என்னைப் பற்றி தெரிந்துகொள்வதற்காகத்தான் இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். நானும் ஆவலோடு காத்திருக்கிறேன்..."

அந்த நேரத்தில்– அந்த உருண்டை அறையின் இன்னொரு கதவு திறந்து– ஒரு பெண் நுழைந்தாள்.

"வா, நர்மதா..." என்றார், பண்டித். "நர்மதா என் மகள். என் ஆராய்ச்சிகளில் உதவியாய் இருப்பவள்..."

நர்மதா அந்த அறைக்கே புதிய வசீகரம் சேர்த்தாள். பண்டித்தை விட உயரமாய் இருந்தாள். நீண்ட முகம். பெரிய விழிகள். நேர்த்தியான நாசி. அமைப்பான உதடுகள். சற்றே நீண்ட கழுத்து. அகன்ற தோள்கள். பெரிய மார்புகள். குறுகிய இடை. நீண்ட கால்கள்.

"ஹலோ" என்று என் கை பற்றி குலுக்கினாள். மென்மையான நீண்ட விரல்கள். உறுதியான நம்பிக்கையூட்டும் பிடி.

"ஆதிக்கு ஒருவித அம்னீஷியா நோய்" என்றார், பண்டித்.

"போர்முனையில் ஒரு விபத்துக்குள்ளாகி இருக்கிறான். அதற்கு

முந்தைய நினைவுகள் அத்தனையும் அழிந்துவிட்டன. ஆனால் இந்த வயதிற்குரிய மூளை வளர்ச்சி இருக்கிறது. பார்ப்பதை புரிந்துகொள்கிறான். சராசரி மனிதனைவிட வெகு வேகமாய் கற்றுக்கொள்கிறான். இவனை நம் 'ரிவரிஸ் டெஸ்ட்'டிற்கு உட்படுத்தப் போகிறோம்..." என்றார், பண்டித் மித்ரா– தன் மகளிடம்.

"குட்"– அவள் என் கை பற்றி எழுப்பினாள். "இதில் ஏறிப் படுங்கள்" என்றாள்.

"கர்னல்...டெஸ்ட் நடக்கும்போது இந்த அறையில் வேறு யாரையும் அனுமதிப்பது இல்லை. நீங்கள் பக்கத்து அறையில் உட்கார்ந்து கண்ணாடித் தடுப்பு வழியே பார்க்கலாம்."

மற்றவர்கள் பக்கத்து அறைக்கு போனார்கள்.

நான் அந்த மரக் கட்டிலின் மீது ஏறிப் படுத்தேன்.

நர்மதா எனக்கு வெகு அருகில் வந்து நின்றாள். அவளிடம் இருந்து ஒரு சுகந்தமான வாசம் மிதந்து சூழ்ந்தது. அவளைப் பார்த்து புன்னகைத்தேன். படபட.வென்று என்னைப் பார்த்து கண்களைச் சிமிட்டினாள்.

எங்கேயோ ஒரு ஸ்விட்சைத் தட்டினாள்.

கூரையில் இருந்து ஒரு கண்ணாடி 'லேம்ப் ஷேடு' சர்ரென்று இறங்கியது. என் முகத்தில் இருந்து ஓரடி உயரத்தில் நின்றது. அதில் பொருத்தப்பட்டு இருந்த சிறிய ஆரஞ்சு பல்பு ஒளிர்ந்தது. மிக அடக்கமான ஒளி. ஒரு பெரிய ஆரஞ்சுப் பொட்டைப் பார்ப்பது போல்தான் இருந்தது.

"இந்த ஆரஞ்சு ஒளியையே பாருங்கள் ஆதி. உங்கள் வாழ்க்கையில் இப்போது நோக்கமே இல்லை. இந்த ஆரஞ்சு ஒளியைப் பார்ப்பது மட்டும்தான் குறிக்கோள்..."

பட் பட் பட் என்று அறையில் எல்லா விளக்குகளும் அணைந்தன. பண்டித் மித்ரா, நர்மதா இருவரும் கூட இருளோடு கலந்துவிட்டார்கள். நானும், ஆரஞ்சு ஒளிப் புள்ளியும் மட்டும்தான்!



நர்மதாவின் குரல் மட்டும் மென்மையாக ஒளிர்ந்தது.

உருண்டையான அந்த அறையின் அமைப்பு காரணமாக, அவள் குரல் சுவரில் பல்வேறு உள் மையங்களில் பட்டு, அறையின் மத்தியில் இருந்த என் மீது அந்த எதிரொலிகள் குவிந்தன. அப்படி தவியும்போது இந்தக் குரலுக்கு சக்தி கூடுதலாகிப்போனது.

"இந்த ஆரஞ்சு ஒளி உங்களின் தோழன். உங்கள் மூளையில் இருண்டிருக்கும் பகுதிகளுக்கும் இந்த ஆரஞ்சு ஒளி நுழைந்து ஊடுருவப்போகிறது. இருண்ட மூலைகளில் வெளிச்சம் போட்டுக் காட்டி, உங்கள் நினைவுகளைக் கிளறி எடுக்கப்போகிறது. ஆரஞ்சு ஒளியைப் பார்த்துக் கொண்டே மெல்ல இமைகளை மூடுங்கள். மூடிய பின்னாலும் உங்களால் அந்த ஒளியைப் பார்க்க முடிகிறது. கண்களுக்குள் இருந்து அந்த ஒளி மெல்ல மேலேறி உங்கள் புருவங்களுக்கு மத்தியில் நிற்கிறது. இப்போது அதன் இதமான சூடு, உங்கள் மண்டைக்குள் பரவுகிறது. ஒளியின் ஒரு முனை கூர்மையாகிறது. ஒரு ஊசி இறங்குவது போல அது உங்கள் மூளைக்குள் இறங்குகிறது கொஞ்சம் கொஞ்சமாக..."

அவள் சொல்லும்படியெல்லாம் எனக்குள் நிகழ்ந்தது என்பது வெகு ஆச்சரியமாக இருந்தது.

அந்தக் குரலின் சக்தியா, அந்த அறையின் அமைப்பா, அந்த இருண்ட சூழலின் உதவியா – எது என்று புரியவில்லை. ஆனால், எனக்குள் அந்த ஒளி இறங்கிவிட்டிருந்தது. என் மூளைக்குள் இதமான சூடு பரவியது.

"உங்களுக்குப் புரியாத, மறந்துவிட்ட பகுதிகளுக்கெல்லாம் இந்த ஒளி நகரப் போகிறது. தூங்கும் நினைவுகளையெல்லாம் ஒவ்வொன்றாக தட்டி எழுப்பப் போகிறது..."

ஒளிப் பொட்டு என் மூளைக்குள் இங்கும் அங்குமாக அல்லாடியது. அலை மோதியது. பந்தாடியது.

"இப்போது உங்கள் நினைவுகளின் முதல் கதவு திறக்கிறது..."

என் மூளைக்குள் எனக்கு மட்டும் புரிகிற ஒரு அசைவு.

"இப்பொழுது அங்கே என்ன பார்க்கிறீர்கள் ஆதி?"





"ஒன்றுமில்லை..."- வார்த்தை என் வாயில் இருந்து வெளிவந்ததா என்று கூட தெரியவில்லை.

ஆரஞ்சு ஒளி இப்போது இன்னும் உள்ளே நகர்கிறது. உள்ளே... உள்ளே... நினைவுகளின் அடுத்த கோட்டை நகர்த்துகிறது. திறக்கிறது.

"இப்போது என்ன பார்க்கிறீர்கள் ஆதி?"

சற்று நேரம் மவுனம். எனக்குள் ஆழமாய்ப் பார்த்தேன். புகைப் புகையாய் அடர்த்தியாய் ஒரு நீராவித் திரை எழுந்தாற் போலிருந்தது. அந்தத் திரையினூடே உயரம் உயரமான மனிதர்கள் சிலர் தெரிந்தார்கள். அவர்களுடைய உடைகள் வேறு விதமாக இருந்தன. அவர்கள் எல்லோரும் சேர்ந்து புகையினூடே நடந்து வந்தார்கள். பலமாக வாய்விட்டு சிரித்தார்கள். கைகளைக் கோர்த்துக்கொண்டு குதித்தார்கள். அவர்கள் காலடியில் இருந்து மணல் பறந்தது.

"என்ன பார்க்கிறீர்கள் ஆதி?"

"புகை. புகையினூடே உயரமான மனிதர்கள்..."

"அவர்கள் பேசுகிறார்களா?"

"சிரிக்கிறார்கள்..."

"பேசும் வரை கவனமாகக் கேளுங்கள்..."

கவனமாக இருந்தேன்.

"பேசுகிறார்களா?"

"ஆமாம்..."

"அந்தப் பேச்சை அப்படியே சொல்லுங்கள்..."

"ஏபியே... கள்ச்ச கொட்டேராப்பு மீன்டாப்பேரு... ஹாதியே பதப்டேரானு..."

"இந்த மொழிக்கு என்ன அர்த்தம் ஆதி?"

"தெரியவில்லை."

"அவர்கள் எதைப் பற்றி பேசுகிறார்கள்?"

"புரியவில்லை..."

"கவனியுங்கள்..."

கவனிக்க முயற்சி செய்தபோது ஆரஞ்சு ஒளிப் புள்ளி சட்டென்று அங்கிருந்து தப்பித்து, என் மண்டை வழியே வெளியேறிவிட்டது.

"எனக்கு எதுவும் புரியவில்லை. ஆரஞ்சு ஒளியும் வெளியேறிவிட்டது" என்றேன்.

"நூறு வரை எண்ணிவிட்டு மெல்ல கண்களைத் திறங்கள்" என்றாள்.

நூறு வரை எண்ணியபோது, இணையாக என் உள்மனம் நான் பார்த்த புகைக்காட்சி பற்றியே அசை போட்டது.

யார் அந்த உயரமான மனிதர்கள்? அவர்களுடைய முகங்கள் தெளிவின்றி மறைந்துவிட்டன! ஆனால், அவர்கள் குதித்தபோது காலடியில் இருந்து பறந்த மணல் நினைவில் இருந்தது.

கண்களை மெல்லத் திறந்தேன்.

கூரையில் இரண்டு விளக்குகள் விழித்திருந்தன. அந்த அடக்கமான வெளிச்சத்தில், நர்மதாவைப் பார்க்க முடிந்தது.

அவள் கண்களில் ஒரு அன்பு இருந்தது.

"எப்படி இருக்கிறது அனுபவம், ஆதி?"

"வித்தியாசமாக, ரொம்ப வித்தியாசமாக என்னிடமிருந்து விலகி நின்று நானே என்னை பார்ப்பது போல் இருந்தது. உயரமான மனிதர்களோடு மணல் வெளியில் எனக்கு தொடர்பு இருந்தது என்பது வரைதான் எனக்குத் தெரிகிறது... வேறு விவரங்கள் புரியவில்லை."

"தட்ஸ் ஆல் ரைட்! இதுவே ஒரு முன்னேற்றம்தான். எங்களுடைய அடுத்த டெஸ்ட்டில் இன்னும் அதிகமாக ஊடுருவிப் பார்ப்போம்."

மரப் படுக்கையில் இருந்து எழுந்தபோது வேறு உலகத்தில் இருந்து இந்த உலகத்திற்குள் பிரவேசிப்பதைப் போல் என் உடல் சற்று தடுமாறியது.

நர்மதாவின் தோளைப் பற்றிக்கொண்டேன். என் வேகம் தாங்காது, அவள் அப்படியே உட்கார்ந்துவிட்டாள்.



"ஸாரி!" என்றேன், பதறி.

"யப்பா. என்ன பலம்!" என்று கண்களை அகட்டி அபிநயித்தாள். எழுந்தாள்.

கதவு திறந்து கர்னலும் நுழைந்தார்.

குறைந்தபட்சம் பன்னிரண்டு மணி நேரம் இடைவேளை கொடுத்துதான் அடுத்த 'டெஸ்ட்' பண்ண முடியும்" என்றார் பண்டித் மித்ரா.

"அப்ப... நாளைக்குக் காலையில்தான் சாத்தியமா?"

"ஆமாம்... இன்றிரவு இன்ஸ்டிட்யூட்டில் நீங்கள் தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்து தருகிறேன்..." என்றார், மித்ரா.

## 4



பாலைவனத்தை அடுத்த நகரம் என்ற எந்த அறிகுறியும் இல்லாமல் தோட்டம் மிகப் பசுமையாக இருந்தது.

பிரம்பு நாற்காலிகளில் உட்கார்ந்திருந்தோம்.

சூரியன் தாழ்ந்துவிட்டாலும் இன்னும் ஆலயத்தில் வெளிச்சம் பாக்கி இருந்தது.

"எனக்கு இங்கே ராணுவ குடியிருப்பு வரை போக வேண்டியிருக்கிறது" என்றார், கர்னல்... சூடான டீயை உறிஞ்சியபடி.

"ஆதியை எங்கள் பொறுப்பில் விட்டுவிட்டு நீங்கள் தாராளமாகப் போகலாமே" என்றார், பண்டித் மித்ரா.

கர்னல் சற்றே தயங்கிவிட்டு, "இரண்டு சிப்பாய்கள் எப்படியும் காவலுக்கு இருப்பார்கள்..." என்றார்.

"கர்னல், இந்த ஆராய்ச்சிக் கூடத்தில் நினைவுகள் மறந்து போன எத்தனையோ 'அம்னீஷியா கேஸ்'களுக்கு ஞாபகத்தை வரவழைத்து இருக்கிறோம். ஆனால், ஒரு முக்கியமான நிபந்தனை இருக்கிறது. பாதிக்கப்பட்டவர்கள் இயல்பான மனநிலையில்

இருக்க வேண்டும். முதுகிலேயே இரண்டு பேர் காவலுக்கு நின்று கொண்டிருந்தால், உள் மனதில் ஒரு 'டென்ஷன்' இருக்கும். ஆராய்ச்சி கடினமாகிவிடும்" என்றாள் நர்மதா.

"ஆனால் இவன் போர்க் கைதியாயிற்றே...?"

"இவனுக்கு போரும் புரியாது. கைதும் விளங்காது. இவன் தப்பித்து எங்கே போவான், யாராக?"

"உண்மைதான், கர்னல்" என்று இடையில் புகுந்தேன். "என்னைப் பற்றி முழுமையாக தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வம் எனக்கே இருக்கும்போது, இப்போது நான் உங்களைப் போன்ற நண்பர்களை விட்டுவிட்டு, எங்கேயும் போய்விட மாட்டேன்..."

கர்னலின் கண்கள் திடீரென்று ஒளிர்ந்தன. "ஓ.கே." என்றார். "பண்டித்தின் பொறுப்பில் ஆதியை விடுகிறேன். நாளைக் காலை எட்டு மணிக்கு மறுபடி வருகிறேன். சிப்பாய்கள் தங்குவதற்கு மட்டும் வசதி செய்து கொடுங்கள் போதும். அவர்கள் ஆதி பின்னாலேயே சுற்றிக்கொண்டிருக்க மாட்டார்கள். ஏதாவது அவசரம் என்றால் கூப்பிடு தூரத்தில் இவர்கள் இருப்பது நல்லதுதானே?"

"நோ பிராப்ளம்..." என்றார் பண்டித் மித்ரா.

கர்னல் என் தோளை அன்பாக அழுத்திவிட்டு, புறப்பட்டுப் போனார். சிப்பாய்களுக்கு அவர்கள் தங்குவதற்கான அறைகள் காட்டப்பட்டன.

"அப்பா... நான் ஆதியை சினிமாவுக்கு அழைத்துப் போகலாமா?" – நர்மதாவின் கண்களில் ஆர்வம் துடித்தது.

"சினிமாவிற்கா?" – பண்டித் மித்ரா சற்றே தயங்கிவிட்டு, "போய் வா" என்றார்.

"வா"– நர்மதா என் கையைப் பிடித்து இழுத்தாள்.

"நீங்கள் ஓட்டுகிறீர்களா, நான் ஓட்டட்டுமா?" என்றாள். காரின் கதவைத் திறந்து பிடித்து.

"கார் ஓட்ட இன்னும் நான் கற்கவில்லை..."



"இன்றைக்கு கற்றுக்கொள்ளலாம். இது கியர்... ஒன்... டூ... திரீ... போர். இது ரிவர்ஸ் கியர்..."

"புத்தகத்தில் கார் மெக்கானிஸம் பற்றி படித்துவிட்டேன்." என்றேன்.

"இது கிளட்ச். அது ஆக்ஸிலேட்டர். இது பிரேக். நான் ஓட்டும்போது கவனியுங்கள்.... நீங்கள்தான் சட் சட் என்று புரிந்துகொள்கிறீர்களாமே!"

அவள் ஒயிலாக ஏறி அமர்ந்தாள். பக்கத்து இருக்கையில் நான் உட்கார்ந்தேன். காரை அவள் இனிமையாக எடுப்பதை கவனித்தேன். நான்கு தெருக்கள் திரும்பியது. "யூ வாண்ட் டூ டிரை?" என்றாள்.

ஒரு காரையே என்னை நம்பி உடனே ஒப்படைக்க அவள் தயாரானது என்னைத் தொட்டது.

இருக்கைகள் மாறினோம். கியரை மாற்றி, நான் கிளட்சை விடுவித்ததும், கார் குபீர் என்று பாய்ந்தது.

"மெதுவாக... மெதுவாக. திருப்பம் வந்தபோது வேகம் குறைத்து, ஸ்டீயரிங்கை எவ்வளவு தூரம் திருப்ப வேண்டும்?" என்றாள்.

நம்ப மாட்டீர்கள். ஐந்து நிமிடங்களில் கார் எனக்கு அடிமையாகிவிட்டது. என் விருப்பப்படி அது இயங்கியது.

நர்மதாவின் கண்களில் மின்னல்கள். "ரிமார்க்கபிள்" என்றாள்.

காரின் வேகம் காட்டினேன். ஜன்னலுக்கு வெளியே கடைசி தெருக்கள் 'விர் விர்' என்று பின்னோக்கிப் பாய்ந்தபோது, இதே போல் இதே போல் எங்கேயோ பார்த்திருக்கிறேன் என்று மூளையின் ஏதோ ஒரு 'செல்'லில் அரித்தது.

நர்மதாவிடம் சொன்னேன்.

"முன்னே கார் ஓட்டி இருக்கிறீர்கள்" என்றாள்.

"இல்லை... கார் இல்லை. வேறு ஒரு வாகனம். அதுவும் இதைப் போலவே... சொல்லப் போனால் இதைவிட வேகமாய்ப்

பயணம் செய்யும் என்று தோன்றுகிறது. வாகனத்திற்கு வெளியே இருப்பதெல்லாம் விறு விறு என்று பின்னோக்கிச் செல்வதைத்தான் பார்த்தது போல் உணர்கிறேன். தவிர, அந்த கடைத் தெருவை நான் இதற்கு முன் பார்த்த நினைவில்லை. இதைப் போன்ற அமைப்புகள் என் நினைவிற்கு புதிதாகவே இருக்கின்றன."

நர்மதா வழி காட்ட– இடது, வலது என்று திரும்பி– கடைசியில் அந்த கட்டிடத்தின் முன் கொண்டு நிறுத்தினேன்.

பெரிய ஓவியத்தில் ஒரு ஆணும், பெண்ணும் நெருக்கமாக நின்றிருந்தார்கள். 'SPACE MAN' என்றது ராட்சத அறிவிப்பு.

"ஆங்கிலப் படம்" என்றாள், நர்மதா.

கூட்டம் அதிகம் இல்லை. என்னுடன் கை கோர்த்து பெருமையாக நடந்தாள். டிக்கெட் வாங்கிக்கொண்டு, இருக்கைகளுக்குப் போனோம்.

"சினிமாவிற்கு வருவது இதுதான் முதல் தடவை. சினிமா என்றால் என்ன என்றே எனக்கு அனுபவம் கிடையாது" என்றேன்.

"அந்த வெள்ளைத் திரையைப் பாருங்கள்" என்றாள் நர்மதா.

புரொஜக்டரில் ஸ்லைடுகளை போட்டு, கர்னல் ஏற்கெனவே சில இடங்களைக் காட்டி இருந்ததால் விளம்பர ஸ்லைடுகள் வித்தியாசமாய் இல்லை. விளம்பரப் படம் முடிந்து ஆங்கிலப் படம் தொடங்கியது.

பெயர்கள் திரையில் தோன்றி பூதாகரமாய் வளர்ந்து மறைந்தன.

"கிராபிக்ஸ் பயன்படுத்தி இருக்கிறார்கள்" என்றேன்.

"கிராபிக்ஸ் பற்றித் தெரியுமா?"– நர்மதா வியந்தாள்.

"புத்தகங்களில் படித்தேன்" என்றேன்.

படம் ஓடியது.

எடுத்தவுடன் ஒரு விண்வெளி வாகனம் சீறிக்கொண்டு

பயணம் செய்தது. விண்வெளியில் எண்ணற்ற நட்சத்திரங்கள், ஒளிக்கோளங்களைத் தாண்டி அதன் வேகம் கூடியது.

நீல நிறத்தில் ஒரு கோளம். வாகனத்தின் வேகத்திற்கு ஏற்ப, கோளம் நெருங்க நெருங்க அதன் அளவு கூடிக்கொண்டே போனது.

"பூமிக் கோளம்" என்றாள், நர்மதா.

அவள் பேசியது எனக்குப் பதிவாகவில்லை. என் கவனம் திரையிலேயே இருந்தது.

சரேலென்று நர்மதாவின் கையை இறுகப் பற்றினேன். என் கையின் அழுத்தம் பார்த்து, அவள் அதிர்ந்து நிமிர்ந்தாள்.

அதற்கு அப்புறம் என்ன நடந்தது என்று எனக்கு தெளிவாக நினைவில்லை.

ஆனால், சினிமாத் திரைக்குள் நானே நுழைந்துவிட்டது போல் ஒரு சிலிர்ப்பு. பூமிக் கோளத்தைப் பார்த்து நான் அமர்ந்திருந்த வாகனம் விரைவது போல ஒரு உணர்வு.

இருக்கையோடு 'பெல்ட்' போன்ற அமைப்பு போட்டு கட்டியிருந்தேன். எனக்கு அருகில் இன்னும் நான்கு பேர்.

இரண்டு பேர் முன் இருக்கைகளிலும், மூன்று பேர் பின் வரிசை இருக்கைகளிலுமாக உட்கார்ந்து இருக்கிறோம்.

மாற்றி மாற்றி பேசுகிறோம்... மொழி எனக்கு பரிச்சயமானது. அதை வார்த்தைக்கு வார்த்தை அப்போது என்னால் திருப்பிச் சொல்ல முடியாது. ஆனால் அதன் அர்த்தமும், தொனியும் அப்படியே எனக்கு விளங்குகிறது.

"அதோ பார், இன்னொரு உயிர் கிரகம்..." என்கிறார் என் அருகில் உட்கார்ந்திருக்கும் சுனா. அவன் குரலில் மாபெரும் உற்சாகம்.

சுனா எங்கள் ஐவரில் தலைவன். அவனுக்குக் கீழேதான் மற்ற நால்வரும் இயங்குகிறோம். உற்சாகம் அனைவரையும் தொற்றுகிறது.

"வாகனத்தை இன்னும் கிட்டே கொண்டு போகட்டுமா?"



"வேண்டாம்! முதலில் உயிரினங்கள் எப்படிபட்டவை என்று பார்ப்போம். நம் கிரகத்தில் இருப்பது போன்ற உயிரினங்கள் இருக்கிறதா என்பதைப் பார்..."

திரையில் லென்ஸை ஜூம் செய்கிறேன். மிக சக்தி வாய்ந்த லென்ஸ்களின் அமைப்பால் ஆயிரம் கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும் பூமியின் பரப்பு தெரிகிறது.

பிரமாண்டமான கப்பல்கள் கடல் பரப்பில் ஊர்ந்து கொண்டிருக்கின்றன.

"தண்ணீர்! நீல நிறத் தண்ணீர் இந்த கிரகத்திலும் இருக்கிறது சுனா..." என்கிறேன், பரபரப்பாக.

"ஆனால், இங்கு அதிகப் பரப்பு தண்ணீரில் மூழ்கி இருக்கிறது. எவ்வளவு பெரிய கப்பல்கள் பார்!"– சுனாவின் குரலிலும் ஆச்சரியம் தொனிக்கிறது.

பின் இருக்கையில் உட்கார்ந்திருக்கும் மூவரும்கூட வெகு ஆர்வத்துடன் நேவிகேட்கர் திரையை உற்றுப் பார்க்கிறார்கள்.

பூமிக் கோளத்தை எங்கள் மொழியில் 'உயிர்க் கிரகம் இரண்டு' என்றுதான் அழைக்கிறோம்.

"இன்னும் நெருக்கமாக போகலாமா?"

"அரை மணி நேரத்தில் நாம் அந்தக் கிரகத்தையே தொட்டுவிடும் அபாயம் இருக்கிறது சுனா..."

ரிபா என்பது என் பெயர் என்று புரிகிறது.

"நம் கிரகத்தைவிட இங்கு பசுமை அதிகம். தண்ணீர் அதிகம் பார்த்தாயா...! மணல் வெளிகள் குறைவாக இருக்கின்றன. நம் ஆராய்ச்சி இயந்திரத்தில் அத்தனை விவரங்களையும் பதிவு செய்துகொள். தொண்ணூறு நாள் பயணத்தில் நாம் சந்திக்கும் முதல் உயிர் கிரகம் இது. உடனடியாக தலைமையகத்துக்கு விவரங்களை அனுப்ப வேண்டும்..."

ரேடியோ போன்ற சமாச்சாரத்தை சுனா இயக்குகிறான்.

ஆனால், ஒலித் தொடர்பு கிடைக்கவில்லை. ஒளித் தொடர்பும் அறுந்துவிட்டது புரிகிறது.

சுனா பதறுகிறான். "இப்போது என்ன செய்வது?"

"இன்னொரு பிரச்சினை" என்கிறேன், நான் கவலையுடன்.

"என்ன?"

"நம் தாய்க் கிரகத்துடன் தொடர்பு அறுந்தது மட்டுமில்லை, இந்த வாகனத்தின் மூன்றாவது எரிபொருள் பகுதி இயங்க மறுக்கிறது..."

"என்னது!"

"ஆமாம்... இன்னும் சற்று நேரத்தில், இரண்டாம் பகுதி எரி பொருள் தீர்ந்துவிடும். மூன்றாம் பகுதி எரி பொருள் திறக்கப்பட்டால்தான், வாகனம் செல்லும். ஆனால், அதன் கதவு இயங்க மறுக்கிறது. எங்கேயாவது இறக்கி அதை சீர் செய்ய வேண்டும்."

"இறங்கியா?"

"ஆமாம்... எரி பொருள் தீர்ந்துவிட்டால், அந்த உயிர்க் கிரகத்தின் விசையால் இழுக்கப்பட்டு நாம் போய் மோதுவோம் – துகள் துகளாகிவிடுவோம்..."

"அப்படியானால் அந்தக் கிரகத்திலேயே இறக்கு. ஆனால் மரங்கள் சூழ்ந்த பகுதியோ, தண்ணீர் நிறைந்த பகுதியோ வேண்டாம். சீதோஷ்ணம் நமக்கு ஒத்துக்கொள்ளாமல் போகக் கூடும். நம் கிரகத்தைப் போலவே மணல் வெளி தென்படுகிறதா பார்..."

"வெவ்வேறு திசைகளில் கேமிராக்களைத் திருப்புகிறோம். ஐந்து பேரும் மாபெரும் பரபரப்புடன் திரையில் தெரியும் பகுதிகளைக் கண்காணிக்கிறோம்.

"அதோ" என்கிறான், சுனா.

"ஆனால், அங்கே அமைதி இல்லையே, சுனா. மணல் வெளியில் திடும் திடும்மென்று ஒளிப் பிழம்புகள் தெரிகின்றன. எரிமலை ஏதாவது வெடிக்கிறதா?"

"இல்லை... அவற்றைப் பார்த்தால் ஆயுதங்களைப் போல் தெரிகின்றன. அங்கே ஓர் இனத்திற்கும், இன்னொரு இனத்திற்கும்



போர் நடக்கிறது."

"சுனா... எரிபொருள் தீர்ந்துவிட்டது. இறக்கியே ஆக வேண்டும்..."– என் குரல் பதறுகிறது.

★★★

"ரேஷ்ட்ட பேரப்பு சுனா மாலவ்யேரட்டிலா" என்று நான் அலறிக்கொண்டு கண் திறந்தேன்.

திகைத்தேன்.

நான் இருந்தது... தியேட்டரில் மானேஜர் அறையில்.

திரை அரங்கில் இருந்து நர்மதா வெளியே கொண்டு வந்திருக்கிறாள் என்று புரிந்தது.

ராணி முத்து சந்தா விவரம்

| | |
|---|---|
| இரண்டு ஆண்டு | ரூ. 275 |
| ஒரு ஆண்டு | ரூ. 150 |
| ஆறு மாதம் | ரூ. 80 |

வெளிநாடுகள்

| | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 1225 |
| ஆறு மாதம் | ரூ. 615 |

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

மேலாளர்,
'ராணி முத்து',
சென்னை–600 007.

என் வாயில் இருந்த சரளமாக என்னென்னமோ வார்த்தைகள் உச்சரிக்கப்பட்டிருக்கின்றன. அத்தனையையும் நர்மதா பரபரப்பாக குறித்துக்கொண்டிருக்கிறாள்.

பதறி நான் எழுந்ததும், என் உடம்பில் இன்னும் மெல்லிய அதிர்வுகள் ஓடுவதைக் கவனித்தேன்.

இத்தனை நேரம் நான் பார்த்தது சினிமாவா, பிரமையா, கனவா, பழைய நினைவா?

தியேட்டரின் சூழலும், மேலே சுழலும் மின் விசிறியும், கவலையுடன் என்னைப் பார்க்கும் நர்மதாவின் பார்வையும் என்னை இந்த உலகத்திற்கு இழுத்து வந்தன.

"ஆதி... என்ன ஆயிற்று உங்களுக்கு?"

"என்ன ஆயிற்று எனக்கு?" – நாற்காலியில் இருந்து கால்களைக் கீழே இறக்கி எழுந்தேன்.

உடம்பு தள்ளாடியது.

நர்மதாவைப் பிடித்துக்கொண்டேன்.

"நாம் வீட்டிற்குப் போகலாம்..." என்றாள், நர்மதா.

காரை அவள்தான் ஓட்டினாள்.

கொஞ்சம் கொஞ்சம் எனக்கு நினைவுகள் சகஜ நிலைக்குத் திரும்பின.

"சினிமா காட்சி போல ஒரு காட்சி மனத் திரையில் ஓடியது. நர்மதா, அதைச் சொல்லட்டுமா?" என்றேன், மெல்லிய குரலில்.

"சொல்லுங்கள், ஆதி..."

சொல்ல ஆரம்பித்தேன்.

## 5



"**அது** கனவு இல்லை" என்றார், பண்டித் மித்ரா.

மூவரும் ஆராய்ச்சிக் கூடத்தின் குளுமைப்படுத்தப்பட்ட தனி அறையில் அமர்ந்திருந்தோம். மேஜையில் உணவு வகைகள் ஆறிக்கொண்டிருந்தன.

"பழைய வாழ்க்கையில் ஒரு சம்பவத்தை நீ மீண்டும் வாழ்ந்து பார்த்திருக்கிறாய்..." என்றார்.

"ஆனால், இவர் வாயில் இருந்து உதிர்த்த வார்த்தைகளைக் குறித்து வந்திருக்கிறேனே, அதில் ஒரு வார்த்தைக்கூட பரிச்சயமாயில்லை. தமிழோ, கன்னடமோ, மராத்தியோ, இந்தியோ, உருதுவோ இல்லை. நமக்குத் தெரியாத வேறு மொழி இது. உலகத்தில் வேறு எங்காவது இந்த மொழி உபயோகத்தில் உள்ளதா என்று கண்டுபிடிக்க வேண்டும் என்று நான் நினைத்துக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில், ஆதி கனவாக சொன்ன சம்பவம் என்னைக் குழப்பிவிட்டது. அவன் சொன்னதைப் பார்த்தால், அவனோ பூமிக்கே புதியவன் போல் தோன்றுகிறது. அவனை மீறிய ஆழ்ந்த கற்பனையா அல்லது அதில் நிஜத்தின்



சாயல் உள்ளதா என்று புரியவில்லை."

அவர் இவர் என்று ஆரம்பித்து அவன், இவன் என்று நர்மதா முடித்தபோது சந்தோஷமாக இருந்தது. நெருக்கமாகிவிட்டேன்.

பண்டித் மித்ரா என்னை ஆழமாகப் பார்த்தார். "ஆதி சொல்வதை அப்படியே எடுத்துக்கொண்டால், இவன் இன்னொரு உயிர்க் கிரகத்தில் இருந்து வந்து இறங்கி இருக்கலாம். அப்படியானால் இவன் வந்த விண்வெளி வாகனம் எங்கே? இவனுடன் வந்த மற்றவர்கள் எங்கே?"

அவரை வெறித்தேன். "நான் சொன்னதெல்லாம் முற்றிலும் கற்பனையாக இருக்கலாம் அல்லவா?" என்றேன்.

"இருக்கலாம். நீ இரவும், பகலும் வெளிக் கிரகம் பற்றி ஆராய்ச்சி செய்பவனாகவோ, அதுபற்றியே சிந்திப்பவனாகவோ இருந்து அது பற்றிய புத்தகங்களை மறுபடி மறுபடி படித்துக்கொண்டு இருப்பவனாக இருந்தால், இதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால், உன் மூளையில் 'செல்'கள் வேற்று கிரக நினைவுகளால் நிரம்பியில்லை. சொல்லப்போனால் பெரும் பகுதி காலியாகவே இருக்கிறது என்பதால், இதை கற்பனை என்று சமாதானப்படுத்தி கொள்ள முடியாது..."

"நான் கர்னலுடன் பேச விரும்புகிறேன்..." என்றேன்.

"யெஸ்..." பண்டித் மித்ரா கர்னலுடன் போனில் தொடர்புகொண்டார். கர்னல் உடனடியாக வருவதாக சொன்னார். சொன்னபடியே அரை மணி நேரத்தில் வந்து நின்றார்.

நானும், நர்மதாவும் தியேட்டர் போனது பற்றியும்– அங்கு எனக்கு ஏற்பட்ட அனுபவம் பற்றியும் அவரிடம் சொன்னபோது ஆச்சரியம் மிகுந்தவராக அதைக் கேட்டார். நர்மதா குறித்து வைத்திருந்த வார்த்தைகளைப் படித்தார்.

"ரிபா என்பது என் பெயர். சுனா என்பது எங்கள் தலைவன் பெயர் என்பது மட்டும் இப்போது மனதில் ரீங்காரமாய் இருக்கிறது..." என்றேன்.

"ஒன்று செய்யலாம். போர் நடந்த இடம் எனக்குத் தெரியும். ஆதியைக் கண்டுபிடித்த பதுங்குக் குழி எது என்றும் தெரியும். அந்தப் பகுதியில் போய் இன்னும் தீவிரமாகத் தேடுவோம். வெளி கிரக வாகனம் ஏதாவது வந்திருக்க வாய்ப்பு இருக்கிறதா என்று பார்ப்போம். அப்படி வாகனம் ஏதாவது இறங்கி இருந்தால், அதைப் போர் முனையில் இருந்த வீரர்களில் யாராவது பார்த்திருக்கமாட்டார்களா? அவர்களையும் விசாரிப்போம்..."

கர்னலின் குரலில் ஏகப்பட்ட பரபரப்பு. என்னைப் பார்த்த பார்வையில் புதிய மரியாதையும், மதிப்பும் தெரிந்தன. போர்க் கைதி என்ற அலட்சியம் விலகி, என்னை வானிலிருந்து வந்து இறங்கிய தேவனைப் பார்ப்பது போல் ஒரு கவர்ச்சியோடு பார்த்தார்.

"நாளைக்குக் காலை இன்னும் சற்று தீவிரமான 'டெஸ்ட்'டில் ஆதியின் புதைந்து போன நினைவுகளைக் கிளறிப் பார்ப்போம். அதில் புதிதாய் இன்னும் அதிக தகவல்கள் கிடைக்கலாம்" என்றார், பண்டித் மித்ரா.

"இந்த ஆராய்ச்சிகளால் உனக்கு... ஸாரி, உங்களுக்கு தொந்தரவாய் இருக்கிறதா ஆதி?" என்றாள், நர்மதா.

"மரியாதை வேண்டாம். நாம் இணையான நண்பர்கள்" என்றேன்.

சிரித்தாள். என்னை அன்பாகத் தட்டிக் கொடுத்தாள்.

"இன்றைக்கு தியேட்டரில் நீ காற்று இழந்த பலூன் போல விழுந்துவிட்டாய். அதனால் கேட்கிறேன். பழைய நினைவுகள் வந்து புரளும்போது உனக்கு உடல் ரீதியாக களைப்பு இருக்கிறதா?"

"ஆமா... இரட்டை வாழ்க்கை வாழ்வது போல் ஒரு உணர்வு எனக்கு வருகிறது. இரு இடங்களில் ஒரே நேரத்தில் என் சக்திகள் செலவாவது போல் இருப்பதால், உடல் களைத்து விழுகிறது. காலையில் ஆராய்ச்சிக் கூடத்தில் 'டெஸ்ட்' பண்ணியபோதும் இந்தக் களைப்பு இருந்தது."

"அப்படியானால் இப்போது நன்றாக ஓய்வெடுத்துக்கொள் ஆதி. நாளைக்கு கொஞ்சம் தீவிரமான 'டெஸ்ட்' இருக்கிறது.



அதற்கு உன் உடம்பு தயாராய் இருக்க வேண்டும்..." என்றாள்.

"நர்மதா... அவனுடைய அறையைக் காட்டு..."

நர்மதா என்னுடன் கை கோர்த்து நடந்து வந்தாள். என் மார்பு உயரம்தான் இருந்தாள். பக்கத்தில் நடந்து வரும்போது அப்படியே அண்ணாந்து பார்த்து அவள் பேசிய வேளையில், பார்வையில் நட்பைத் தாண்டி ஒரு கிறக்கம் தெரிந்தது.

"ஆதி... எனக்கு ரொம்ப நாளாக ஆர்வம் உண்டு. உலகம் என்பது இவ்வளவுதானா? உயிர்கள் என்பது பூமியில் மட்டும்தான் சாத்தியமா? செவ்வாய்க் கிரகத்தில் உயிர் இருக்கிறது என்கிறார்கள்... இல்லை என்கிறார்கள். அது எவ்வளவு தூரம் உண்மை? இந்த பூமிக்கு அப்பாற்பட்டு பிரபஞ்சத்தில் என்னென்ன இருக்கிறது? ஐயோ, என் இதயம் படபடவென்று அடித்துக்கொள்கிறது. ஆதி, உன்னுடைய கிரகத்திற்கு என்னையும் அழைத்துப் போவாயா?"

சிரித்தேன். "என்னுடைய கிரகமா? அப்படி ஒரு கிரகம் இருக்கிறதா என்றே இன்னும் தீர்மானமாகவில்லையே, நர்மதா?"

"ஒருவேளை இருந்தால்?"

எனக்கு ஒதுக்கப்பட்ட அறை வாசலுக்கு வந்துவிட்டோம். உள்ளே போனதும் விளக்கை அணைத்தாள். அரை இருட்டில் அவள் கண்கள் பளபளத்தன. ஆர்வம், அன்பு, பதைப்பு, இன்னும் என்னென்னவோ அந்தப் பளபளப்பில் தெரிந்தன.

"அழைத்துப் போகிறேன், நர்மதா" என்றேன்.

அவள் கால் விரல்களில் தன்னை உயர்த்திக்கொண்டாள்.

என் முகத்தை அவளுடைய வாகான முகம் நெருங்கியது. எங்கள் இருவருக்கிடையில் புதிதாக மின்சாரம் உற்பத்தியானது. இருவரையும் பற்ற வைத்தது.

சரேலென்று அவளை அப்படியே அணைத்து இழுத்தேன்.

ஒரு நாளுக்குள், அதுவும் முழுமையடையாத ஒரு நாளுக்குள் இந்த நெருக்கம் சாத்தியமா?

என் மார்பில் மோதினாள். என் இடுப்பை இரு கைகளாலும் வளைத்துப் பிடித்தாள்.

அவளுடைய மூச்சு என் கழுத்தில் பட்டது.

முகம் குனிந்தேன்.

கவ்வினோம்.

ஹப்ப்பா! என்ன ஒரு சுகம்!

விண்வெளியில் நட்சத்திரங்கள் எங்களைச் சுற்றி உதிர்ந்தன. கோளங்கள் கரைந்து சூழ்ந்தன. புகையும், மணலும் சுற்றிப் பறந்தன.

சரேலென்று என்னிடம் இருந்து விலகினாள். "குட் நைட்" என்றாள். திரும்பிப் பார்க்காமல் விடுவிடுவென்று நடந்தாள்.

அறைக்குள் இருந்தேன். இனம் புரியாத உணர்வுகள் என்னை ஆட்டிப் படைத்தன.

கட்டிலில் விழுந்தேன். ரிபா... ரிபா... ரிபா...

ஆதி... ஆதி... ஆதி...

ரிபா... ரிபா... ரிபா...

*நீ யார்? ரிபா, உன்னை முழுவதுமாக வெளிக்காட்டு... நீ யார்? உன் உலகம் எது? உன் மக்கள் யார்? உன் உறவுகள் என்னென்ன? உனக்கு மனைவி உண்டா? குழந்தைகள் உண்டா? உன் உலகத்தில் கணக்கு, சரித்திரம், விஞ்ஞானம் எல்லாம் இதே போல்தான் முன்னேறி இருக்கிறதா? தயவுசெய்து வெளியே வா! உன் முகத்தைக் காட்டு!*

இத்தனை நாள் ஆஸ்பத்திரிக் கட்டிலில் படுத்திருந்ததைவிட, இந்தக் குளுமை செய்த அறையில் சொகுசான கட்டிலில் படுப்பது மனதிற்கு இதமாய் இருந்தது.

நர்மதா தீண்டிவிட்டுப் போன விநாடிகள், உதடுகளில் சொர்க்கமாக தித்தித்தன.

சொர்க்கம் என்பது இங்கே நான் இப்போது கற்றுக்கொண்ட வார்த்தை. புத்தகங்களில் படித்து, மற்றவர்களின் உச்சரிப்பில் கவர்ந்து கொண்ட வார்த்தை. அதன் உண்மையான உணர்வு



எனக்குத் தெரியாது. அதை அனுபவித்து உணர்ந்ததில்லை... இந்த உலகத்தில் இது வரை.

இரு, இந்த உலகம் என்று அதற்குள் பிரித்துப் பேச ஆரம்பித்துவிட்டாயா? உன்னுடையது வேறு உலகம் என்று நிச்சயம் செய்துவிட்டாயா? ஏன் இந்தப் பரபரப்பு? ஏன் அந்த அவசரம்? நாளைக் காலை வரை பொறுத்திரு.

தலையணையைக் கட்டிக்கொண்டு இமைகளை அழுந்த மூடினேன்.

## 6



**கா**லை எட்டு மணி.

குளித்து, குறைவான சிற்றுண்டி முடித்து ஆராய்ச்சிக் கூடத்திற்கு நர்மதா அழைத்துப் போனாள். முந்தின இரவு அவளிடம் இருந்த சலனமோ, நெருக்கமோ இப்போது இல்லை. ஒரு முழுமையான ஆராய்ச்சியாளராகத்தான் அவளைப் பார்க்க முடிந்தது.

பக்கத்து அறையில் கண்ணாடித் தடுப்பிற்குப் பின்னிருந்து கர்னல் என்னைப் பார்த்து கையசைத்தார்.

புற விரலால் நெற்றியின் மையத்தைத் தொட்டு எடுத்து "குட்மார்னிங்" என்றார் சைகையால்.

'குட்மார்னிங்'கைத் திருப்பினேன்.

இன்றைக்கு வேறொரு அமைப்பு. மரக்கட்டில் இல்லை. மெத்தென்ற ஒரு கட்டில் நகர்த்தப்பட்டது. ஒரு ராட்சஸ குழாயைக் குறுக்கில் வெட்டியது போல கட்டிலுக்கு மேல் ஒரு மூடி.

படுத்தேன். என் தலையில் 'ஹெட் போன்'கள் போன்றதொரு அமைப்பு பொருத்தப்பட்டது. அதில் இருந்து நிறைய ஒயர்கள் நீண்ட சின்னச் சின்ன வட்ட மானிகளில் முடிந்திருந்தன. அவை அனைத்தும் என் மண்டையின் வெவ்வேறு இடத்தில்

பொருத்தப்பட்டன.

கைகளை அசைக்க முடியாமல் தோல் பட்டைகள். கால்களை நகர்த்த முடியாமல் அங்கேயும் தோல் பட்டைகள்.

"எதற்கு இதெல்லாம்?" என்றேன்.

நர்மதா அன்பான புன்னகையுடன் என் உதடுகளைப் பிரித்து பற்களை நகர்த்தி, இடையில் ஒரு ரப்பர் துண்டத்தைச் செருகினாள்.

"உன் உடம்பில் கொஞ்சம் மின்சாரம் பாயலாம்... அப்போது உடம்பு தூக்கிப் போடக்கூடாது என்பதற்காகத்தான் இந்த முன்னெச்சரிக்கை எல்லாம். நாக்கைக் கடித்துவிடக் கூடாது என்பதற்காக ரப்பர் துண்டமே தவிர, உன்னால் பேச முடியாதபடி அது தடுக்காது. வார்த்தைகள் வெகு சுத்தமாக இல்லாமல் போகலாமே தவிர, உன்னால் பேச முடியும். ஏதாவது பேச வேண்டும் என்று உணர்வு எழுந்தால், கூச்சமின்றி பேசு... அங்கு பொருத்தியுள்ள சிறு 'மைக்' மூலம் அது வெளியே துல்லியமாகக் கேட்கும். அதே நேரம் ஒரு ரெக்கார்டரில் பதிவாகும்..." என்றாள்.

கண்ணாடி மூடி என் மீது கவிழ்ந்தது.

வெளியே பண்டித் மித்ரா பேசியது என் 'ஹெட்போன்'கள் வழியே எனக்குக் கேட்டது.

"ஆதி... கண்களைத் திறந்து வைத்திரு. விழிப்பாகவே இரு. உன்னுள் மின்சாரம் பாயும்போது என்னென்ன உணர்வுகள் தோன்றுகிறதோ, அவற்றை வெளிப்படையாகச் சொல். உனக்கு சில காட்சிகள் தோன்றினால், அவற்றை முடிந்தால் வர்ணி. இல்லையென்றால் அழுத்தமாக நினைவில் நிறுத்திக்கொள். வாயில் ஏதாவது வார்த்தைகள் தோன்றினால், அவற்றை நிறுத்தாமல் உச்சரித்து விடு. இப்போது மேலே இருக்கும் ஆரஞ்சுப் புள்ளியைப் பார்..."

தயாரானேன். கண்ணெதிரே இருந்த ஆரஞ்சுப் புள்ளியை வெறித்தேன்.

ஏதோ ஒரு ஸ்விட்சைத் தட்டினார்.



மண்டைக்குள் திடும் என்று ஒரு அதிர்வு. பார்வையில் இருந்து கண நேரத்திற்கு ஆரஞ்சு புள்ளி மறைந்தது. மறுபடி உருவானது. அதையே மறுபடி பார்க்கலானேன். ஆனால், என் பார்வையில் முன்பிருந்த தீவிரம் இல்லை. நினைவுகள் மசமசப்பாகிவிட்டன.

இன்னொரு முறை பண்டித் மித்ரா ஸ்விட்சைத் தட்டினார்.

மண்டைக்குள் மீண்டும் ஒரு திடும். இந்த முறை மின்சாரத்தின் வீரியம் கூடுதலாக இருந்தது.

ஆரஞ்சுப் புள்ளி சுத்தமாக மறைந்து போனது.

கண்களை மிக பிரயாசைப்பட்டுதான் திறந்தேன்.

ஆரஞ்சுப் புள்ளி, சின்ன ஆரஞ்சு வட்டமானது. அந்த வட்டம் கொஞ்சம் கொஞ்சமாக சதைப் பற்று கொண்டு சிறு கோலியானது. கோலி உருண்டை இன்னும் பெரியதாகி எலுமிச்சை அளவிற்கானது. அதன் நிறம் ஆரஞ்சில் இருந்து மாறியது. தேய்ந்து வெளுத்து வேறு நிறம் சேர்ந்தது.

எலுமிச்சை இப்போது டென்னிஸ் பந்தாகி, டென்னிஸ் பந்து கால் பந்தாகி–

அதை நான் வெளியே சொல்வதற்குள் –

அடுத்த தவணை மின்சாரம் என்னைத் தூக்கிப் போட்டது.

சடாரென்று அது இப்போது பூமிக் கோளமாகிவிட்டது. அதை நோக்கி எங்கள் விண்வெளி வாகனம் சீறிக்கொண்டு இறங்கியது. என் வாயில் இருந்து வார்த்தைகள் புரியாத மொழியில் உதிரத் தொடங்கின.

"ரேஷ்ட்ட பேரப்பு சுனா மாலவ்யேரட்டிலா..."

"சுனா... எரி பொருள் தீர்ந்துவிட்டது. இறக்கியே ஆக வேண்டும்"– என் குரல் பதறுகிறது.

"சரி, இறக்கு"– சுனாவின் உடல் விறைப்பதை பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் என்னால் உணர முடிகிறது.

"அங்கே மணல் வெளியில் போர் நடக்காத பகுதியில் மெல்ல இறக்கு..."

வாகனத்தை லாவகமாகத் திருப்புகிறேன். எரிபொருள் முடியும் தறுவாயில் இருக்கிறது.

போர் நடக்கும் இடம் மிகப் பரந்து இல்லாதது எனக்கு சவுகர்யமாய் இருக்கிறது. இது சிறிய போர். பெரும் போர் இல்லை. ஆயுதங்கள் உபயோகப்படுத்தும் இடத்தில் இருந்து போதிய இடைவெளிவிட்டு எங்கள் சிறிய வாகனத்தை இறக்குகிறேன்.

"யாரும் நம்மைப் பார்க்கவில்லையே?" – சுனா பதறுகிறான்.

"இரண்டு பேர் பார்த்தார்கள்" என்கிறான், பின்னால் உட்கார்ந்திருக்கும் துரா. "அதோ பார். நம் வாகனத்தை விழிகளை விரித்துப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்."

சுனா, வாகனத்தில் இருக்கும் ஒரு விசையைத் திருப்பி இழுத்தான்.

இரண்டு ஒளிக் கற்றைகள் அவர்கள் இருவரையும் சாட்டை நுனிகள் போலத் தொட்டன. அவர்கள் நின்றிருந்த இடங்களில் இப்போது கீழே இரண்டு தம்ளர் சாம்பல் மட்டுமே.

திடீரென்று பிரதேசத்தையே வெளிச்சமாக்கி ஒரு குண்டு வெடித்தது. எங்கள் வாகனத்தை அதிரடித்தது.

"சீக்கிரம்..."– என்று அவசரப்படுத்தினான், சுனா.

ஒரு விசையைத் தொட்டதும், வாகனத்தின் கதவு உயர்ந்து திறந்தது. வெளியே இறங்கினேன். வாகனத்தின் கால்களுக்கிடையில் குனிந்து எரிபொருள் பகுதியை நெருங்கினேன். அதன் கதவைத் தொட்டேன்.

'திடும்' என்று இன்னொரு மின்னல்.

எங்கள் வாகனம் தூக்கியெறியப்பட்டது.

ஒரு வெடிகுண்டு எங்களுக்கு வெகு அருகில் வெடித்து, என்னை ஒருபுறமும்... எங்கள் விண்வெளி வாகனத்தை இன்னொரு புறமும் விசிறியடித்ததைப் புரிந்தேன். எழுந்தேன். என் கணுக்கால் அருகே பிய்ந்துவிட்டது. ரத்தம் கொட்டியது.

தடுமாறி எழுந்தேன். என்னிடம் இருந்து வெகு தள்ளி விழுந்த



வாகனம், அந்த வேகத்திலேயே எரிபொருள் பகுதி இயங்க ஆரம்பித்தது. புகை கக்கத் தொடங்கிவிட்டது.

அதன் கண்ணாடிக் கதவு வழியே எட்டிப் பார்த்து சுனா கையை வீசிக் காட்டினான். 'வா... வா' என்று இரு கைகளையும் வீசி என்னை அவன் அவசரப்படுத்துவது புரிந்தது.

அதற்குள் இன்னொரு வெடிகுண்டு எங்களுக்கிடையில் விழுந்து வெடித்தது.

மணலுடன் நான் கெந்தி தூக்கி எறியப்பட்டேன்.

போய் விழுந்த இடம் ஒரு மரத்தின் உச்சி. அதன் கிளைகளில் சிக்கி ஊஞ்சலாடினேன். மரத்தின் மற்ற அடர்ந்த கிளைகள் என்னை முற்றிலுமாக மறைந்துவிட்டன. வாகனத்தை என்னால் பார்க்க முடியவில்லை. அவர்களாலும் என்னைப் பார்க்க முடியாது. வாகனம் இனியும் தாமதித்தால், அதற்கு ஆபத்து என்று சுனா முடிவு செய்திருப்பான். அது சீறிப் புறப்பட்டுப் போனதும் வெண் புகையை மட்டும் நான் பார்த்தேன். என் உடம்பில் அங்கங்கே காயம்.

ரத்தம் வழிந்தது.

★★★

**நா**ன் இந்த உயிர் கிரகத்தில் தனியே மாட்டிக்கொண்டதை உணர்கிறேன். இன்னும் சற்று நேரத்தில் கண்டெடுக்கப்படுவேன். மாற்றுக் கிரகத்து மனிதன் என்று தெரிந்தால் என்ன செய்வார்கள்? இவர்களே ஒருவருக்கு ஒருவருடன் ஒற்றுமையின்றி போரிட்டு அழித்துக் கொள்ளும்போது மாற்று கிரகத்து மனிதனான எனக்கு என்ன வரவேற்பு இருக்கும்?

முதன் முறையாக பயம் என்னைக் கவ்வுகிறது.

கீழே மரத்தடியில் இருந்து சற்று தள்ளி போரில் இறந்து கிடக்கும் மனிதர்களைக் கவனிக்கிறேன். எங்கள் உடை அமைப்புகளில், நாகரீகத்தில் வேற்றுமை இருக்கிறது. ஆனால், உருவத்தில், அடிப்படை நாகரீகத்தில், முகங்களில் நிறைய ஒற்றுமை இருப்பதைக் கவனிக்கிறேன். முகத்து முடியை மழித்து

எடுத்திருக்கிறார்கள். ஆனால், தலையில் முடி கொஞ்சம் இருக்கிறது. என் தலையோ முழு மொட்டை. பரவாயில்லை. உடைகளை உடனே மாற்ற வேண்டும்.

நான் அணிந்திருக்கும் விண்வெளி உடைகளை முற்றிலும் களைகிறேன். உள்ளாடையைக் கூட விலக்குகிறேன். அத்தனையையும் அப்படியே சுருட்டி மரக்கிளைகளுக்கு நடுவில் ஒளித்து வைக்கிறேன். மரத்தில் இருந்து இறங்குகிறேன். உடம்பில் அங்கங்கே ரத்தம். காயங்களில் வலி.

கீழே இறந்து கிடப்பவனின் உடைகளை உருவி அணிந்துகொள்கிறேன். உடைகள் எனக்கு சிறியன. இறுக்கமாக இருக்கின்றன. காலணியில் என் கால்கள் அழுத்தி நுழைக்க வேண்டியது இருக்கிறது.

எங்காவது ஓட வேண்டும்.

மணல் வெளியில் என் வேகம் அபரிமிதமானது. ஓடுகிறேன். வெகுதூரத்தைக் கடந்துவிடுகிறேன். இப்போது போர் நடக்கும் இடத்தில் நிறைய பேர் விழுந்து கிடக்க, போர் சற்று ஓய்ந்திருக்கிறது.

அப்படி நான் நினைத்தது முட்டாள்தனம் என்று அடுத்த கணம் என் பின்னால் விழுந்த வெடிகுண்டு சொல்கிறது.

அது வெடித்தபோது, மீண்டும் நான் தூக்கி எறியப்படுகிறேன்.

என் பூர்வ பந்தங்கள் அத்தனையையும் அறுத்து இந்த இரக்கமற்ற உயிர்க் கிரகத்தின் ஒரு பதுங்கு குழியில் போய் சேருகிறேன். அதன்பின் இருள். முழு இருள். கறுமை. எங்கும் கறுமை.

## 7



**வி**ழித்துவிட்டேன். சற்று நேரம் அப்படியே இருந்தேன். ஆரஞ்சுப் புள்ளி என் கண்களில் இதமாக ஒளி வீசியது.



உடம்பில் அதிர்வுகள் முடிந்து. ஒரு மரண அமைதி.

உதடுகள் உலர்ந்திருந்தன. நாக்கு வறண்டிருந்தது. தொண்டை காய்ந்திருந்தது.

"தண்ணீர்..." என்றேன், மிக மெல்லிய குரலில்.

'கிர்ர்' என்று இயந்திரம் இயங்கும் ஒலி.

என்னை மூடி இருந்த கண்ணாடி மூடி திறந்தது.

நர்மதா விரைந்து வந்து என் கைகளையும், கால்களையும் விடுவித்தாள். பற்களுக்கு இடையில் இருந்த ரப்பர் துண்டத்தை எடுத்தாள்.

"எப்படி இருக்கிறாய், ரிபா?" என்றாள்.

"ரிபா இல்லை, நான் ஆதி..."

சிரித்தாள். அவள் கை பற்றி எழுந்தேன்.

என்னை பண்டித் மித்ராவும், கர்னலும் விநோத மிருகத்தைப் பார்ப்பது போல் பார்த்தார்கள்.

என் கால்கள் பின்னின.

"ஆதிக்கு சற்று ஓய்வு தேவை. அவனை அறையில் விட்டுவிட்டு வருகிறேன்" என்றாள், நர்மதா.

எனக்கு பண்டித் மித்ராவையும், கர்னலையும் ஏறிட்டு பார்க்க விருப்பமில்லை.

நர்மதாவின் தோளை அணைத்தபடி நடந்தேன்.

கண்களைத் திறந்து வைத்திருந்தபோதிலும், இந்த ஆராய்ச்சிக் கூடம் காற்றில் உதிர்ந்து– இங்கு முற்றிலும் மணல் வெளி போல் ஒரு மாயை என்னைச் சூழ்ந்தது. சுற்றிலும் அங்கங்கே குண்டுகள் வெடிக்கும் சத்தங்கள் கேட்டன. மனிதர்களின் கூக்குரல்கள் துரத்தின.

என் தடுமாற்றம் பார்த்து நர்மதா இடுப்பை அணைத்துக்கொண்டாள்.

"அறை வரை நடக்க முடியுமா ஆதி?" – குரலில் பரிவு இருந்தது.

"ம்" என்றேன். சுவரில் ஒருகணம் சாய்ந்து

நிலைப்படுத்திக்கொண்டேன். 'விடு விடு'வென்று அவளுடன் என் அறை நோக்கி நடந்தேன்.

அறைக்குள் போனதும் கட்டிலில் விழுந்தேன்.

நர்மதா குனிந்து என் நெற்றியில், மூடிய கண்களில் முத்தமிடுவதை ஈரமாக உணர்ந்தேன்.

ஓய்ந்து போனேன்.

★★★

என் கன்னங்களில் மெல்லிய நீண்ட சில்லென்ற விரல்கள் வருடின. கண் திறந்தேன்.

நர்மதா.

"இரண்டு மணி நேரத்திற்கு மேலாகிறது. நீ தூங்கி. இப்பொழுது எப்படி இருக்கிறது? உன்னைச் சந்திக்க அவர்கள் காத்திருக்கிறார்கள்."

"எவர்கள்?"

"கர்னலைத் தவிர ராணுவத்தில் இருந்து இன்னும் இரண்டு பெரிய அதிகாரிகளும் வந்து ஹெலிகாப்டரில் இறங்கி இருக்கிறார்கள். பகல் பொழுதிலேயே வெளிச்சம் இருக்கும்பொழுதே சில விஷயங்கள் கவனிக்கப்பட வேண்டும் என்று நினைக்கிறார்கள்... உன் வசதி எப்படி?"

மலர்ந்து எழுந்தேன். "ஐ ம் ஆல் ரைட்" என்றேன்.

"ஆதி... நீ ரிபாவாக இருந்தாலும், என்னை மறக்கமாட்டாயே?"

திடீரென்று அவள் கண்களில் ஈரம்.

"என்ன இது பைத்தியக்காரத்தனமாய்?" என்றேன்.

"நேற்றுதான் சந்தித்தோம் என்று என்னால் நம்ப முடியவில்லை ஆதி. உண்மையைச் சொல்வதானால் பல ஜென்மங்களாக இந்த உறவு தொடர்ந்து வந்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. திடீரென்று எனக்கு உன் மேல் இப்படியொரு பிடிப்பு வந்திருக்க முடியாது."

"நான் யாரென்று தெரிந்த பிறகுமா இப்படிச் சொல்கிறாய், நர்மதா?"

"ஆமாம். போன பிறவி என்பதும், அடுத்த பிறவி என்பதும் இந்தப் பூமிக் கோளத்துடன் கட்டுப்பட்டதாக நான் நினைக்கவில்லை. பிரபஞ்சம் என்பது பூமி உருண்டையுடன் முடிந்ததாகவும் நினைக்கவில்லை. நீயும், நானும் ஏற்கெனவே தொடர்பு உள்ளவர்கள். இப்போது நம் தொடர்பு மறுபடி புதுப்பிக்கப்பட்டு இருக்கிறது என்றுதான் எனக்குத் தோன்றுகிறது."

என் கைகளை எடுத்து தன் கைகளுக்குள் பொத்திக்கொண்டாள். எனது புறங்கைகளை தனது இதழ்களால் ஈரம் செய்தாள்.

எனக்குள்ளும் ஏதோ திரி பற்றிக்கொண்டது. அவளை நெருக்கமாக இழுத்து அணைத்துக்கொண்டேன்.

"வா, என்னுடனேயே இரு... நான் எங்கு போனாலும், என்னுடனேயே வா."

இருவருமாக ஆராய்ச்சிக் கூடத்திற்கு நடந்தோம்.

அங்கு நாற்காலிகளில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்த ராணுவ அதிகாரிகள்– என்னைப் பார்த்ததும் சட்டென்று மவுனமானார்கள். ஆச்சரியமாகப் பார்த்தார்கள்.

"இவர் லெப்டினன்ட் கர்னல் சதுர்வேதி."

சதுர்வேதி ஐம்பதுகளில் இருந்தார். அடர்ந்த மீசை. அகலமான நெற்றி. கறுப்பு சணல்களாக புருவங்கள். உருண்ட கண்களில் தீவிரமான பார்வை.

"இது பிரிகேடியர் பார்த்தசாரதி."

பார்த்தசாரதி கூர்மையான புலன்களுடன், ஊடுருவும் பார்வையால் என்னை ஏறிட்டார். புன்னகைத்தார்.

"வெல்கம் ஜென்டில்மேன்" என்றார்.

"கர்னல், உங்கள் பெயர் கூட நான் இதுவரை கேட்டதில்லை" என்றேன்.

"கர்னல் ஆனந்த்..."

"உட்கார், ஆதி... நாங்கள் ஹெலிகாப்டரில் வந்திருக்கிறோம் – உன்னை அழைத்துப் போக..."





"என்னையா?"

"ஆமாம்..."

"எங்கே?"

"நீ கண்டெடுக்கப்பட்ட இடத்திற்கு... அந்த மணல் வெளியைப் பார்த்ததும், உங்கள் வாகனம் எங்கே இறங்கியது. நீ உடைகளை எந்த மரத்தில் ஒளித்து வைத்தாய் என்பதையெல்லாம் பார்க்கலாம்" என்றார், சதுர்வேதி.

"இப்போது அங்கே போர் இல்லையே?"

"போர் இல்லை என்பது மட்டுமில்லை. அந்த இடம் இப்போது இந்தியாவின் வசம்தான் இருக்கிறது. பாகிஸ்தானிடம் இருந்த அந்தப் பகுதியை மீட்டுவிட்டோம்..." என்றார், கர்னல்.

"நானும் உங்களுடன் வரலாமா?" என்றாள், நர்மதா.

"நீ கட்டாயம் வர வேண்டும்..." என்றேன், நான். "என்னை கவனித்துக்கொள்ளும் அவசியம் வந்தால், அது உன்னால்தான் முடியும்..."

"ஆமா... நீங்கள் உண்டு நர்மதா. பண்டித் மித்ரா விரும்பினால் அவரும் வரலாம்..." என்றார், கர்னல்.

"நர்மதா வந்தால் நான் வேண்டாம்" என்றார், பண்டித்.

நர்மதா தன் சிறிய மருத்துவப் பையை எடுத்துக்கொண்டாள்.

"போவோம்..." என்றார், சதுர்வேதி.

★★★

இரைச்சலுடன் ஹெலிகாப்டர் ராட்சத தும்பி போல தாழ்ந்தது. அதன் அசுர விசிறிகளால் சுழற்றப்பட்டு. மணல் எழும்பிப் பறந்தது. கீழே நின்றிருந்த பச்சைச் சீருடை மனிதன் கை வீசிக் காட்டி– இறங்கலாம் என்று சைகை செய்தான்.

"இங்கேதானா?" என்றார், சதுர்வேதி.

"இங்கேதான்" என்றேன். இந்த மணல்வெளியும், அந்தச் சில மரங்களும் சேர்ந்த பகுதியில்தான் எங்கள் விண்வெளி வாகனம் இறங்கியது. ஹெலிகாப்டரின் கண்ணாடி ஜன்னலில் மூக்கு

நசுங்க, முகத்தைத் தாழ்த்தி கீழே பார்த்தேன்.

ஹெலிகாப்டர், பூமியில் இறங்கியது. கால் பதித்தது.

இறங்கினோம். நர்மதா என் கையைத் தன் கையுடன் கோர்த்துக்கொண்டிருந்தாள்.

"அதோ அந்த மரம்" என்று ஒரு மரம் நோக்கி நான் நடக்கத் தொடங்க, நர்மதா என்னுடன் ஓடி வர வேண்டியது இருந்தது. என் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் ராணுவ அதிகாரிகள், மணலில் கால்கள் புதையப் புதைய பின் தங்கினர்.

"இந்த மரம்தான்" என்றேன், மறுபடியும். மரத்தை அடைந்ததும், "இதில்தான் நான் சிக்கிக்கொண்டேன்..." – நர்மதாவின் கையை உதறிவிட்டு, மரத்தின் மீது தாவி ஏறினேன். பரபரவென்று ஒரு குரங்கைவிட வேகமாக முன்னேறி, அதன் கிளைகளில் கால் பரப்பி தொற்றிக்கொண்டேன்.

"பார்த்து, பார்த்து" என்று நர்மதா பதறினாள்.

ராணுவ அதிகாரிகள், மரத்திற்கு வந்து சேர்ந்தபோது, அதன் உச்சியை நான் நெருங்கி இருந்தேன்.

"அங்கேயே இரு. எதையும் தொடாதே" என்று சதுர்வேதி கீழே இருந்து கத்தினார்.

ஒரு சிறு ஏணி கொண்டு வந்து மரத்தடியில் சாய்த்து நிறுத்தப்பட, ஒவ்வொருவராக அதில் ஏறி மரத்தின் பாதி உயரம் வந்ததும், பரந்திருந்த கிளைகளில் சவுகர்யமாக தங்களை நிறுத்திக்கொண்டனர்.

நிகழ்காலத்தின் நிஜத்தினூடே, எனக்கு பழைய நினைவு ஒரு சாயலாகத் தென்பட்டது.

இந்த மரத்தில் நான் தலைகீழாகத் தொங்கியபோது, என் பாரம் தாங்காது உடைந்த கிளை இதோ இன்னும் தொங்கிக்கொண்டிருக்கின்றன. மரத்துடன் அதன் தொடர்பு பலவீனமாகிப் போனதால், அக்கிளையின் முனை சற்று காய்ந்திருந்தது. அதோ அந்த அடர்ந்த பச்சை இலைகளினூடே வெளிர் மஞ்சள் நிறத்தில் கை அகலத்திற்கு தென்படுகிறதே,



அங்கேதான் என் உடைகளை முற்றிலும் சுற்றி வைத்தேன்.

சதுர்வேதி நான் நின்றிருந்த உயரத்திற்கு ஏறினார்.

"அதுதான் உன் துணி மூட்டையா?"

"ஆமாம், சார்."

"தொடாதே... அப்படியே அதை எடுத்துப் போவோம்... ஆராய்ச்சி கூடத்தில் சோதனை பண்ண வேண்டும்..."

கிளைகள் அகற்றப்பட்டு, அந்தத் துணி உருண்டை கீழே விழ, அதை இன்னொரு வெள்ளைத் துணியில் அப்படியே வாங்கி, சுருட்டிக்கொண்டார்கள்.

என் துணிகளைத் தொட்டுப் பார்க்க வேண்டும் என்று எழுந்த பேராவலை கஷ்டப்பட்டு கட்டுப்படுத்திக்கொண்டேன்.

மரத்தில் இருந்து இறங்கிவிட்டேன்.

நான் இறங்கிய பின்னரும்... ராணுவ வீரர்களும், அதிகாரிகளும் கிளைகளை நகர்த்தி என்னவோ தேடினார்கள்.

"ஆதி..."– நர்மதா என்னை நெருங்கி நின்றாள். "பழைய நினைவுகள் தெளிவாக இருக்கின்றனவா?"

"இல்லை. இந்த மரம் நினைவுக்கு வந்தது. எங்கள் வாகனம் இறங்கிய இடம் நினைவில் இருக்கிறது..."

"எங்கே?"

"இன்னும் சில நூறு மீட்டர்கள் நடக்க வேண்டும்."

"நீ மிக வேகமாக நடக்கிறாய், ஆதி – உன்னோடு ஈடுகொடுத்து நடப்பது கஷ்டமாக இருக்கிறது..."

"தூக்கிப் போகட்டுமா?"

"முடியுமா?"– என்று சிரித்தாள்.

"ஏன் முடியாது?" – அவள் பதறப் பதற சரேலென்று அவளை இரு கைகளிலும் தூக்கினேன்.

அங்கங்கே நின்றிருந்தவர்கள் திடுக்கிடலோடு எங்களைத் திரும்பி பார்த்தார்கள். நான் அவளைக் கடத்திப் போகிறேனா என்ற கவலை அவர்கள் கண்களில் பளிச்சிட்டது.

அந்தக் கவலையை உடைத்து நொறுக்குவது போல,

நர்மதா என் கழுத்தை இரு கைகளாலும் வளைத்து அணைத்துக்கொண்டாள்.

அவர்கள் என்னை சிறு ஏக்கத்துடன் பார்க்க, நான் என் முழு வேகத்தில் நடக்கலானேன்.

எங்கள் விண்வெளி வாகனம் இறங்கிய இடம் நோக்கி வேகமாக நர்மதாவைச் சுமந்தபடி நடக்க, ராணுவ அதிகாரிகள் பரபரப்பாக என்னைத் தொடர்ந்தார்கள்.

"இங்கேதான்" – நர்மதாவை மணல் வெளியில் இதமாக இறக்கினேன். "எங்கள் விண்கலம் இறங்கியது இந்த இடத்தில்தான்" என்றேன்.

ஆனால், விண்கலத்தின் கால்கள் பதிந்த அடையாளம் எதுவும் இப்போது இல்லை. காற்று வீசி வீசி மணலைப் புரட்டிப் புரட்டி அந்த இடத்தை முற்றிலும் மூடி– மற்றப் பகுதிகளோடு இணையாக மாற்றி இருந்தது.

"இந்த இடம்தானா?" என்றார், கர்னல்.

"ஆமாம்..."– காலால் ஒரு பெரிய வட்டம்– மணலில் சுற்றி நடந்து வரைந்தேன். "இந்த வட்டத்திற்குள்தான் எங்கள் வாகனம் இறங்கியது..."

"இவ்வளவு பரந்த மணல் வெளியில் உனக்கு எப்படி அடையாளம் புரிகிறது ஆதி?"

"எனக்கு உள்ளுணர்வு ஒன்று கூடுதலாக இருக்கிறது. அது இந்த இடம்தான் என்று உறுதிப்படுத்துகிறது" என்றேன்.

"முதலில் நான் தூக்கி எறியப்பட்டது இங்கே" என்று ஒரு தளர்ந்த மரத்தின் பின்னே காட்டினேன்.

வாகனம் இறங்கியதாக நான் வரைந்த வட்டத்திற்குள் யாரும் வராமல் சதுர்வேதி தடுத்தார். என் பின்னாலேயே ஓடி ஓடி வந்தார்.

மரத்தின் பின்னே நான் மணலில் விழுந்து காட்டினேன். "இப்படித்தான் முதலில் விழுந்தேன். அப்புறம் எழுந்து ஓடியபோது, அடுத்த வெடி என்னைத் தாக்கியது."



ராணுவத்தில் இருந்து இரண்டு நிபுணர்கள் வந்திருந்தார்கள். அவர்கள் தேர்ந்த திறமையுடன் அந்தப் பகுதியை ஆராயத் தொடங்கினர்.

"பிரிகேடியர் சார், இதைப் பாருங்கள்..." – கிளவுஸ் அணிந்த கையால் ஒரு நிபுணர் சாண் நீளத்திற்கு கறுப்பாக ஒரு பொருளை நீட்டினார். அது பிளாஸ்டிக் அல்லாமல், பாலிமர் போன்ற சமாச்சாரமும் இல்லாமல், அவர்களுக்கு புரியாத ஒரு வஸ்துவால் செய்யப்பட்டிருந்தது. அரை வட்டமாக வளைந்திருந்த அதன் இரு முனைகளில் மணல் நிறத்தில் சின்னத் தகடுகள்.

அதைப் பிடுங்கினேன்.

"இதைப் பார்த்திருக்கிறேன். பார்த்தது மட்டுமில்லை, உபயோகப்படுத்தி இருக்கிறேன். அடிக்கடி பயன்படுத்தி இருக்கிறேன்."

முகத்திற்கு நேரே உயர்த்திப் பிடித்தேன். உடனே புரிந்தது. தலையில் அணிந்தேன். 'ஹெட் போன்'களைப் போல அதன் முனைகள் இரு காதுகளிலும் பொதிந்தன.

உடனே என் காதுகளில் சத்தம் கேட்டது.

'ரீர்ர்ர்' என்ற கரகரப்பு. ரீங்கார ஒலி. அதனுடன் இரு குரல்களின் உரையாடல்.

'சிஞ்சாருட்டப்புல கடானு கேர மீலம்யாது...'

'ரேதூல பிராஞ்சுனா சாப்பல்ல முடாபிலா...'

பரபரப்பாக கழற்றி நர்மதாவிடம் நீட்டினேன். "இதைக் காதில் மாட்டிக்கொள். குரல்கள் கேட்கும்."

நர்மதா அதை வாங்கி அணிந்தாள். அவள் முகத்தில் உணர்ச்சிகள் வடிந்தன. வெறுமையான பார்வையால் என்னைப் பார்த்து உதடுகளைப் பிதுக்கினாள்.

"என்ன?" என்றாள்.

"உனக்கு கேட்கவில்லையா?" என்றேன்.

"எதுவும் கேட்கவில்லையே! நிசப்தமாகத்தானே இருக்கிறது."

"எங்கே கொடு"- அவளிடம் இருந்து பிடுங்கி நான் அணிந்தேன்.

துல்லியமாக ஒலி- எனக்குக் கேட்டது. என் நினைவில் இருந்து நழுவிவிட்ட மொழியில் அவர்கள் மாறி மாறிப் பேசுவது கேட்டது. "என்ன நர்மதா இப்படிச் சொல்கிறாய்? இரண்டு பேர், இல்லை மூன்று பேர் 'டிஸ்கஸ்' பண்ணுவது கேட்கிறதே. மொழி வேண்டுமானால் புரியாமல் இருக்கலாம். ஆனால், இவர்கள் பேசுவதாவது கேட்கிறதா... இல்லையா?"

எங்கள் உரையாடலால் ஆர்வமுற்று, ராணுவ அதிகாரிகள் எங்களைச் சூழ்ந்தனர்.

சதுர்வேதியிடம் அதைக் கழற்றி நீட்டினேன். "இது 'கார்டுலெஸ் ஹெட்போன்'. எனக்கு இதில் மூன்று பேர் பேசுவது கேட்கிறது. இவள் கேட்கவில்லை என்கிறாள். நீங்கள் அணிந்து பாருங்கள்..."

அவர் வாங்கி அணிந்துப் பார்த்தார். உதடுகளைப் பிதுக்கினார்.

அந்த 'கார்டுலெஸ் ஹெட்போன்' ஒவ்வொரு கையாக மாறியது.

அத்தனைப் பேர் முகத்திலும் வெறுமை. "ஒன்றும் கேட்கவில்லையே, ஆதி..." என்றார்கள், எல்லோரும் கோரஸாக. குழப்பத்துடன் அணிந்தேன். என் காதுகளுக்கு வந்ததும் எந்தப் பிரச்சினையுமின்றி ஒலிகள் கேட்டன.

"எனக்குக் கேட்கிறதே!"

"நீ அணிந்தால் மட்டும் இயங்குகிற மாதிரி அதில் ஏதாவது உள்ளே ரகசியமாக 'செட்டப்' செய்யப்பட்டிருக்கலாமோ?"

"இருங்கள்..."- ஹெட்போனை நர்மதாவின் தலையில் அணிவித்தேன். அவள் காதின் மீது என் காதை வைத்துக் கேட்டேன். சன்னமாக ஒலி கேட்டது.

"இல்லை... வேறு யார் அணிந்தாலும் கூட இயங்குகிறது. நீங்கள் ஏன் கேட்கவில்லை என்று சொல்கிறீர்கள் என்று



புரியவில்லை" என்றேன்.

"இது என் புத்திசாலித்தனத்திற்கு மீறிய விஷயம்" என்றார் சதுர்வேதி.

"இப்படி இருக்கலாம்" என்றார், வந்திருந்த ராணுவ ஆராய்ச்சி நிபுணர். "ஒலி அலைகளின் அலைவரிசை நம் காதுகளுக்கு கேட்காத அலைவரிசையாக இருக்கலாம். அவனுக்கு அந்த அலைவரிசையும் கேட்கிறதோ என்னவோ?"

"என்னது!"

"ஆமாம். காற்றில் எவ்வளவோ ஒலிகளின் அலைவரிசைகள் இருந்து கொண்டுதானே இருக்கின்றன. நம்முடைய நிர்வாணக் காதுகளுக்குப் புரியாத அலைவரிசைகள் இருக்கின்றன. 'அலட்ராஸானிக்' என்று சொல்வார்களே, அந்த அலைவரிசை அதையும் புகுந்துக் கேட்கும் திறன் இவனுக்கு இருக்கக் கூடும்."

"இந்த ஹெட்போனை பரிசோதனை பண்ணிப் பார்த்து விடுவோம்" என்றார் கர்னல்.

எங்கள் குழு ஹெலிகாப்டரில் மீண்டும் பயணம் செய்தது.

★★★

ஆராய்ச்சிகள் தொடர்ந்தன.

'ஹெட்போன்'களை ஒரு ஒலிக் கருவியில் இணைத்துப் பார்த்ததில், மனித செவிகளுக்குப் புலப்படாத அலைவரிசையில் ஒலியை அது வாங்கி இரு முனை 'ஸ்பீக்கர்'களிலும் ஒலிபரப்பியது நிச்சயமானது.

விட்டுவிட்டு ஒலித்த அர்த்தமில்லாத மொழியை ஒரு குழுவினர் பதிவு செய்ய ஆரம்பித்தனர்.

சங்கேத மொழிகளில் நிபுணர்களாக இருந்த ஒரு குழுவினர், அந்த மொழியை அர்த்தம் பண்ணிக்கொள்ள மண்டையை இரவும் பகலும் பிய்த்துக்கொண்டனர்.

எங்கள் விண்வெளி வாகனம் இறங்கியதாக நான் வட்டமிட்டுக் காட்டிய பகுதியில் இருந்து எடுத்து வந்த மணலை ஆராய்ந்து-

அதில் வெகு செழிப்பான பெட்ரோல் புகையின் கலப்பு இருப்பதாக அறிக்கை கொடுத்தார்கள். வாகனம் புறப்பட்டபோது வெளியேறிய புகையின் மிச்சம் என்று அதைச் சொன்னார்கள்.

என் உடைகள் புதுவிதமான இழையால் தயாரிக்கப்பட்டிருந்தது. நெருப்பால் பொசுக்க முடியாது. தண்ணீரால் நனைக்க முடியாது. ஆனால், அபரிமிதமான வேகத்தால் சற்றே சிதைக்க முடியும் வகையான இழை அது. வெடிகுண்டுகள் வெடித்தபோது மட்டும் சிதிலமாகி, என்னை குண்டுகள் தாக்க வழி பண்ணியது. அதனால்தான் உடையுடனேயே அமைந்திருந்த முகம் மூடும் பகுதியில், உயிர் வாழ்வதற்கு தேவையான ஆக்ஸிஜன் உற்பத்தியாவதற்கு ஏற்ப திரவ வடிவ அடர்ந்த ஆக்ஸிஜன் நான்கு பைகளில் சேமிக்கப்பட்டிருந்தது. இந்த அமைப்பு எல்லாமே பூமிக்கு புதியதாய் இருந்தன.

பூமியில் இறங்கி இங்கு வாழ வேண்டிய கட்டாயம் வந்த பின் என் தலையில் முடி வளர அனுமதித்துவிட்டேன். முகத்திலும் அடர்ந்த மீசை உருவாகிவிட்டது.

'இந்த மீசையை மட்டும் எடுத்துவிடாதே ஆதி... இதுதான் உனக்கு ரொம்ப அழகாக இருக்கிறது...' என்று நர்மதா காதில் கிசுகிசுப்பாள்.

ஆராய்ச்சிக் கூடத்து வெள்ளை எலி போல ஆகிப் போனேன் நான்.

பண்டித் மித்ராவின் ஆராய்ச்சிக் கூடத்தில் 'டபிள் ரிவர்ஸ்' ஆராய்ச்சிக்கு மறுபடி மறுபடி உட்படுத்தப்பட்டேன். மின்சார அதிர்வுகள் என் மூளையை உலுக்கின. ஆனால், நினைவுகள் அதிகபட்சம் பூமிக் கோளத்திற்கு நாங்கள் வந்து இறங்கிய தேதி வரைதான் பின்னோக்கி பயணம் செய்தது.

அதைத் தாண்டி அதற்கு முன் நான் பிறந்த இடம், வளர்ந்த இடம், வாழ்ந்த சூழ்நிலை, என் மனிதர்கள்– இவற்றைப் பற்றித் தெரிந்துகொள்ள நர்மதாவிற்கு மிகுந்த ஆர்வம். ஆனால், அவள் எவ்வளவோ முயன்றும் கூட, என் நினைவுகள் அந்தத் தேதி வரை போனதும்– அடைபட்டு நின்றுவிடும்.





திடீரென்று நர்மதாவிற்கு ஒரு கவலை வந்துவிட்டது. நான் அவளை விட்டுவிட்டு என் தாய் கிரகத்திற்கு திரும்பிவிடுவேனோ என்று பயம் வந்துவிட்டது. அவள் கவலை அர்த்தமற்றது என்று அவளுக்குப் புரிய வைக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றியது.

அதனால்–

இரண்டு வாரங்களுக்கு முன் எனக்கும், நர்மதாவிற்கும் இந்திய முறைப்படி கோவிலில் திருமணம் நடந்தது.

அவள் என் உல்லாச மனைவியானாள். ஆறு நாட்கள் தேனிலவு சென்று வந்தோம்.

தேனிலவில் இருந்து திரும்பியதும் உங்கள் எல்லோரையும் சந்திக்க ஏற்பாடு செய்திருப்பது பற்றி கர்னல் ஆனந்தும், லெப்டினன்ட் கர்னல் சதுர்வேதியும் சொன்னார்கள்.

உண்மையை சொல்கிறேன்.

நான் பிறந்தது எங்கே...? தெரியாது!

இத்தனை வருடங்கள் வாழ்ந்தது எங்கே?... தெரியாது!

நான் இங்கு வரும் முன் கற்றது என்ன?... தெரியாது!

நண்பர்களுடன் இந்தப் பூமிக் கோளத்தை நான் தேடி வந்தது எதற்காக?... தெரியாது!

என் தாய் மொழி என்ன, என் கூட பிறந்தவர்கள் யார், யார்? எங்கள் தாய் கிரகத்தில் விஞ்ஞானத்தின் வளர்ச்சி என்ன? நான் உயிரோடு இருப்பது என் மனிதர்களுக்கு தெரியுமா?

எந்தக் கேள்விக்குமே எனக்கு பதில் தெரியாது!

கலைந்த போன இறந்த காலத்தை பெருச்சாளி போல தோண்டித் துருவிப் பார்ப்பதில் எனக்கு ஆர்வமும் இல்லை.

என் உடல் நிலைக்கு இந்த உயிர்க் கிரகம் சற்று குளுமையாக உணர்கிறேன். எங்கும் மணல் வெளியாகவும், இன்னும் சற்று கூடுதல் உஷ்ணமாகவும் இந்த உயிர்க் கிரகம் இருந்தால் எனக்கு அதிக ஆறுதலாக இருக்கும் என்று தோன்றுகிறது.

ஆனாலும்–

எனக்கு இந்தப் பூமி பிடித்திருக்கிறது. பசுமை



பிடித்திருக்கிறது.

என்னை இதயம் நனைய காதலிக்கும் நர்மதாவைப் பிடித்திருக்கிறது. இந்த வாழ்க்கை பிடித்திருக்கிறது.

தயவு செய்து என்னை விட்டுவிடுங்கள்.

நான் இப்படியே இருந்துவிட்டுப் போகிறேன்.

என்னை மேற்கொண்டு எதுவும் கேள்விகள் கேட்காதீர்கள்.

நர்மதாவுடன் என் வாழ்க்கை இயங்கட்டும். என் நாட்கள் இனிமையாகத் தொடரட்டும். கை கூப்பி கெஞ்சுகிறேன்.

என்னை தயவு செய்து விட்டுவிடுங்கள்!"

**(முதல் பாகம் முற்றும்)**

# மணல் மனிதன்



பாகம் இரண்டு

## 1

ஆதி களைப்பாக நாற்காலியில் சரிந்து உட்கார்ந்தான்.

அந்தக் கூட்ட அரங்கில் சில விநாடிகளுக்கு நிசப்தம் நிலவியது.

வெவ்வேறு நாடுகளில் இருந்து வந்திருந்த விஞ்ஞானிகள், அரசு அதிகாரிகள் தத்தம் இருக்கைகளில் அமர்ந்து அவனது சரளமான பேச்சைக் கவனித்திருந்தார்கள். பேசும்போது அவன் முகத்தில் வந்து வந்துபோன ஆச்சரியம், ஆவேசம், அசதி, அமைதி– எல்லாவற்றையும் அவர்கள் கவனித்து ரசித்திருந்தார்கள். வெவ்வேறு மொழிபெயர்ப்பாளர்கள் பின்னணியில் அமர்ந்து அந்தந்த நாட்டினருக்கு விளங்கும் மொழிகளில் ஆதி

சொன்னதையெல்லாம் மொழி பெயர்த்திருந்தார்கள்.

“இந்த நூற்றாண்டில் பறக்கும் தட்டு பற்றி அவ்வப்போது பலர் பார்த்ததாக சொல்லி இருக்கிறார்கள். வெளிகிரகத்து உயிர்கள் பூமியில் வந்து இறங்குவதாக கதைகள் எழுதி இருக்கிறார்கள். ஆனால், மனிதனைப் போலவே உருவத்துடன் வேற்று கிரகத்தில் இருந்து ஒருத்தன் வந்து இறங்கி இருப்பதும், நமக்குப் புரியும் பூமியின் மொழியில் பேசுவதும் இதுதான் முதல் தடவை...” என்றார் பிரான்ஸ் விஞ்ஞானி.

“சில ஆச்சரியங்கள் இருக்கின்றன...” என்று ஆரம்பித்தார், அமெரிக்க விஞ்ஞானி. “இன்னொரு கிரகத்தில் உயிரினம் இருக்கிறதா என்று வெகு நாட்களாகவே பூமியில் ஆராய்ச்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன. இதுவரை சரியான தகவல்கள் நமக்குக் கிடைக்கவில்லை. இத்தனைக்கும் மற்ற கிரகங்களைப் பற்றி எவ்வளவோ விபரங்களை நம் செயற்கைக் கோள்கள் தந்திருக்கின்றன. ஆனால், உயிரினங்கள் இருக்கும் இன்னொரு கிரகம் பற்றி இப்போது அழுத்தமான விபரம் கிடைத்திருக்கிறது...”

மற்ற விஞ்ஞானிகளை ஒரு முறை பார்வையால் மேய்ந்துவிட்டு அவர் தொடர்ந்தார். “நம் பூமிக் கோளத்தைப் போலவே அந்தக் கிரகத்திற்கும் வயதாகி இருக்க வேண்டும். பூமியில் இருக்கும் அளவிற்கு அங்கு பசுமை இல்லை. தண்ணீர் இல்லை. நிழல் இல்லை என்று ஆதி தனது நினைவுகளை அசை போட்டதில் இருந்து தெரிகிறது. அப்படியானால் அந்த உயிர்கிரகம் சூரியனுக்கு இன்னும் நெருக்கமாக இருக்கலாம் என்பது என் யூகம்.

மற்ற உயிரினங்கள் எப்படியோ! மனித இனம் அங்கும் தோன்றி இருக்கிறது. வேரூன்றி இருக்கிறது. பூமியில் இருக்கும் மனிதனின் பரிணாம வளர்ச்சி போலவே அங்கேயும் வளர்ச்சி நடந்திருக்கிறது. உடைகள் அணியும் நாகரீகம் அங்கும் தோன்றி இருக்கிறது. நமக்கு கொடுக்கப்பட்ட வாய்ப்புகள் போலவே அந்தக் கிரகத்து மனிதனுக்கும் வாய்ப்புகள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. அவனும் விஞ்ஞானத்தில் முன்னேறி இருக்கிறான்.



பெட்ரோலை எரிபொருளாகப் பயன்படுத்தக் கற்றிருக்கிறான். விண்வெளி வாகனத்தை இயக்க அறிந்திருக்கிறான்.

அவனுக்கும் இனப் பெருக்கம் பற்றித் தெரிந்திருக்கிறது... மனிதனுக்கு மனிதன் அடித்துக்கொள்ளும் போர்கள் பற்றி உணர்ந்திருக்கிறான். மொழியும், தொலைத் தொடர்பு சாதனங்களும் அங்கேயும் பிரமாதமாக முன்னேறி இருக்கின்றன...”

“மனிதனின் முயற்சிகளால் கிடைத்த முன்னேற்றங்கள் அவை. ஆனால், அந்தக் கிரகத்து மனிதனுக்கு இயற்கையே சில கூடுதல் திறமைகள் தந்திருப்பதைக் கவனித்தீர்களா?”– என்றார், ஜெர்மன் விஞ்ஞானி.

“நம்மால் குறிப்பிட்ட ஒரு அலைவரிசையில்தான் ஒலியைக் கேட்க முடிகிறது. ஆனால், ஆதியால் பூமியில் வழங்கும் அலைவரிசையும் கேட்க முடிகிறது. நமக்கு விளங்காத ‘சூப்பர் ஸானிக்’ அலைவரிசையையும் கேட்க முடிகிறது. இது இயற்கை அளித்த வரம்.”

“என் கவலை வேறு” என்றார், ரஷ்ய விஞ்ஞானி. “வேற்று கிரகத்தில் இருந்து மனித இனம் வந்தது. பார்த்தது, – அதைவிட முக்கியமாய் திரும்பிப் போயிருக்கிறது! இன்னொரு உயிர்க் கிரகம் எங்கே இருக்கிறது என்று நமக்குத் தெரியாது. ஆனால், அவர்களைப் பொறுத்தவரை மற்றொரு உயிர்க் கிரகம் இருப்பதை உணர்ந்துவிட்டார்கள். பார்த்துவிட்டார்கள். பூமி எங்கே இருக்கிறது என்பது கூட அவர்களுக்குத் தெரியும். ஆரம்பத்தில் ஆதி சொன்னதை வைத்துப் பார்த்தால், அவர்கள் கிரகத்தில் இருந்து பூமிக்கு வருவதற்கு தொண்ணூறு நாட்கள் ஆகி இருக்கிறது. இதை வைத்து அந்தக் கிரகத்திற்கும், பூமிக்கும் இடையில் உள்ள தூரத்தை யூகிக்க முயற்சி செய்யலாம்...”

“வெயிட்” என்று கையை உதறினார், லண்டன் விஞ்ஞானி. “விண்வெளிக் கப்பலில் பயணம் செய்து பூமியை நோக்கி வந்த காட்சியை விவரித்தபோது கிலோ மீட்டர் என்று தூரத்தைப் பற்றிச் சொன்னான் ஆதி. அரை மணி நேரம் என்று எல்லாம் நேரத்தைப் பற்றிப் பேசினான். அப்படியானால் அந்தக் கிரகத்திலும்

நம்மைப் போலவே தூரத்தை கிலோ மீட்டர்களிலும், நேரத்தை நிமிடங்களிலும் அளக்கிறார்களா? அப்படி இரு வெவ்வேறு கிரகங்களில் சாத்தியமா? உதைக்கிறதே...!"

"ஐம் ஸாரி ஜென்டில்மேன்" என்று எழுந்தார், பண்டித் மித்ரா.

"நீங்கள் ஆதியை சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. அவனுடைய கிரகத்து மொழி வேறு. அங்கு அளவுகளும் வெவ்வேறாக இருக்கலாம். அவர்களுடைய ஒரு நாள் என்பது இருபத்து நான்கு மணி நேரமாகத்தான் இருக்க வேண்டும் என்று அவசியமும் இல்லை. ஆனால், தன் பூர்வீக நினைவுகள் முற்றிலும் கலைந்த நிலையில்— பூமியில் கண்டெடுக்கப்பட்டான் ஆதி. அவனுக்கு பூமியில் இருக்கும் மொழியும், பாடங்களும் சொல்லித் தரப்பட்டன. பூமியில் வழக்கில் இருக்கும் முறையில்தான் நேரத்தைப் பார்க்கவும், தூரத்தை அளக்கவும் அவனுக்குக் கற்றுத் தரப்பட்டது. முந்தைய நினைவுகள் அவன் மூளையில் நிரடியபோதும், அவனால் அவற்றைப் பகுத்து உணர பூமியில் கற்ற அறிவுதான் பயன்படுகிறது.... அதனால் அதைப் பற்றிய சந்தேகம் வேண்டாம்."

பண்டித் மித்ராவின் விளக்கம் அத்தனை விஞ்ஞானிகளாலும் ஒரு மனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"ஆனாலும்..." என்று ரஷ்ய விஞ்ஞானி ஆரம்பிக்க— ஆதி எழுந்தான்.

நர்மதா அவன் அருகில் வந்து நின்றாள்.

"மன்னிக்க வேண்டும், அறிஞர்களே. உலகத்தின் அத்தனை முக்குகளிலும், சந்துகளிலும் என்னை பற்றியே பேச்சு நடந்து கொண்டிருக்கிறது. உலகத்தின் அத்தனை ஊடக இயந்திரங்களும் என்னை செய்தியாக்கி அச்சிட்டுத் தள்ளுகின்றன. அத்தனை கேமிராக்களும் என்னைத் துரத்துகின்றன. உங்களுடைய கோணத்தில் இருந்து நீங்கள் செய்வது நியாயமாக இருக்கலாம். ஆனால், என் கோணத்தில் இருந்து யோசித்துப் பாருங்கள். எல்லாம் எனக்கு சலிப்பாக இருக்கிறது.



என் தனி அமைதி கலைந்துவிட்டது. என் சுதந்திரம் கிழிந்துவிட்டது. எனக்கு சற்று ஓய்வு வேண்டும். நாளைக் காலை மறுபடி உங்களை சந்திக்கிறேன். என்னை மன்னியுங்கள்."

யாருடைய பதிலுரைக்கும் காத்திராமல் ஆதி— நர்மதா பின்தொடர, சரேலென்று அங்கிருந்த கதவு திறந்து காரிடாரில் நுழைந்தான். உடன் இன்னொரு கதவு திறந்து வேறு அறைக்குள் புகுந்து, அங்கிருந்து மற்றொரு அறைக்கு நகர்ந்தான்.

"நர்மதா, உன் காரை எடு... எங்காவது தனிமைக்குப் போவோம். உன்னிடம் நான் ஒரு முக்கியமான ரகசியத்தைச் சொல்ல வேண்டும்" என்றான்.

## 2



கிருஷ்ணர் கோயிலில் பளிங்குத் தரை சில்லென்றிருந்தது. சந்நதிக்கு பின்புறம் இருந்த மண்டபத்தில் நடமாட்டம் இல்லை என்று அந்த இடத்தைத் தேர்ந்தெடுத்திருந்தான் ஆதி. அப்படியே யாராவது தட்டுத் தடுமாறி அங்கே வந்தாலும், உடனடியாக அவன் முகத்தைப் பார்த்துவிடக் கூடாது என்று திரும்பி உட்கார்ந்திருந்தான். நர்மதா அவனுக்கு நெருக்கமாக அமர்ந்து அவன் கையை எடுத்து தன் கைகளுக்கு இடையில் வைத்து வருடிக் கொடுத்தாள்.

"ஸாரி ஆதி, உன் பிரச்சினை எனக்குப் புரிகிறது. உன் தனிமையைப் போக்கடித்துவிட்டோம். ஆனால் யோசி. உன்னைப் போன்ற ஒரு அபூர்வமான மனிதனை சந்திக்காமல் இந்த உலகம் தவற விட முடியுமா?"

ஆதி பதில் சொல்லவில்லை. அவள் கையில் அவன் அணிவித்த மோதிரம் மின்னியது. அவர்கள் மண வாழ்வின் சாட்சி!

"ரகசியம் ஏதோ சொல்வதாக சொன்னாய், ஆதி!"

"ஆமாம்"— ஆதி குரலைக் குறைத்துக்கொண்டான்.

"யாரிடமும் இதுவரை சொல்லாத விஷயம். உன்னிடம் கூட சொல்லலாமா... வேண்டாமா என்று ரொம்ப நேரம் யோசித்தேன்."

"என்னிடம் கூடவா?"

"நீ என் மனைவி. உனக்கும், எனக்கும் நடுவில் எந்த ரகசியமும் கூடாது என்பதெல்லாம் சரி. ஆனால், நீ மனைவி என்பதைவிட இந்தப் பூமியின் புதல்வி என்பதுதான் பெரிய விஷயம். நான் சொன்னதும் உடனே நீ அதை பெரிதுபடுத்தக்கூடும்."

"இல்லை, ஆதி... சொல்"– நர்மதா அவனை ஆர்வத்துடன் கவனித்தாள்.

"என்னுடைய பழைய நினைவுகளை நீ உசுப்பிவிட்டாயே! அப்போது என் மூளையில் சில அம்சங்கள் நினைவுக்கு வந்தன. முக்கியமாய் என்னுடைய தாய் மொழி. தெள்ளத் தெளிவாக வார்த்தைக்கு வார்த்தை என்னால் அர்த்தம் சொல்ல முடியாதே தவிர, அந்த மொழி வாக்கியங்களின் சாராம்சம் என்ன என்று என்னால் உணர முடிகிறது. என்னுடைய ஹெட்போனில் கேட்கும் குரல்கள் என்ன பேசுகின்றன என்று புரிந்துகொள்ள முடிகிறது."

"கிரேட்! இதை ஏன் முன்பே சொல்லவில்லை நீ?"

"சொல்லலாம். ஆனால், நான் எங்கிருந்து வந்தேன்? என்னைச் சுற்றி இருந்தவர்கள் யார்? என் உறவுகள் என்னென்ன என்பதை எல்லாம் முதலில் நான் புரிந்துகொள்ள விரும்பினேன்."

"புரிந்துகொண்டாயா?"

"முற்றிலும் புரிந்துகொண்டதாக சொல்ல முடியாது. ஆனால், சில விவரங்கள் பொதுவாகப் புரிந்துள்ளன."

"என்ன?"

"எங்கள் கிரகம் வெப்பமானது. மணல் வெளி அதிகம். தண்ணீர் குறைவு. பசுமை குறைவு, பூமியில் இருக்கும் உயிரினங்களில் பல– எங்கள் கிரகத்திலும் உண்டு. ஆனால், அங்கு பனிப் பிரதேசம் கிடையவே கிடையாது என்பதால், குளிர் தேசத்து



மிருகங்கள் எதுவும் கிடையாது. மிருகங்களைச் சாப்பிடும் வழக்கம் இல்லை. மாமிச உணவு மிக கற்காலத்து மனிதர்கள் மட்டுமே சாப்பிடுகிறார்கள். அங்கு ஜனத் தொகை குறைவு. இனப் பெருக்கத்தில் மக்களுக்கு ஆர்வம் குறைந்துவிட்டது. விஞ்ஞானத்தின் உச்சத்தைத் தொட்டுப் பார்த்து, அதற்கு மேலும் ஏதாவது செய்ய முடியுமா என்பதிலேயே அத்தனை பேரின் ஆர்வமும் இருக்கிறது..."– ஆதி செய்தி வாசிப்பவன் போல் பேசினான்.

"உணவு?"

"ஒரு மாத்திரையில் ஒரு நாள் உணவு அடங்கிவிடுகிறது. இயற்கையிடம் இருந்து உணவைச் சாறாக எடுத்து பயன்படுத்துகிறோம்..."

"அது எப்படி என்று கண்டுபிடித்துவிட்டால், பூமியில் பசிப் பிரச்சினைகள் தீர்ந்துவிடும் ஆதி."

"இருக்கலாம். ஆனால், எங்கள் உயிர்க் கிரகத்து மனிதர்களுக்கு அதில் திருப்தி வரவில்லை. தங்கள் ராஜ்ஜியத்தை மேலும் மேலும் விஸ்தரிக்க வேண்டும் என்ற வெறி வந்துவிட்டது. அதனால் ஒரு உயர் மட்டக் குழு அமைக்கப்பட்டது. இந்தப் பிரபஞ்சத்தில் உயிர் வாழக்கூடிய பகுதி வேறு எதுவும் இருக்கிறதா என்று முதலில் கண்டுபிடித்து– அந்தக் கிரகம் பற்றி குறித்துக்கொள்ள வேண்டும். பின்னர், அக்கிரகத்தின் மீது படையெடுத்துப் போக வேண்டும் என்பது எங்கள் குறிக்கோள். அப்படி ஒரு ஆய்வு செய்வதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முக்கிய குழுவில் நான் இருந்திருக்கிறேன் என்று நினைக்கிறேன். பூமியை வந்து பார்த்திருக்கிறோம். இங்குள்ள இயற்கை அழகும், கூடுதல் தண்ணீரும், குளுமையும் எங்கள் கிரகத்து மனிதர்களுக்கு மிகவும் பிடித்து போயிருக்கிறது என்று– அவர்கள் பேசுவதில் இருந்து தெரிகிறது."

ஆதி குரலில் கவலை தொனிந்தது.

"என்ன சொல்கிறாய் ஆதி? பூமியின் மீது உங்கள் கிரகத்து மனிதர்கள் படையெடுக்கக் கூடுமா?"

"அப்படியொரு ஆபத்து இருக்கிறது."

"படை எடுத்துத் தாக்கினால், நாம் என்ன பார்த்துக் கொண்டிருக்கப் போகிறோமா? ஆகாயத்திலேயே தாக்கவல்ல ராக்கெட் ஆயுதங்கள் இங்கேயும் உண்டு..."

ஆதி பரிதாபமான ஒரு புன்னகையை அவளுக்குக் காட்டினான்.

"நீங்கள் குறைந்தது நான்கைந்து நூற்றாண்டுகள் பின் தங்கி இருக்கிறீர்கள், நர்மதா. அங்கே விஞ்ஞான வளர்ச்சி அபரிமிதம். பல கிலோ மீட்டர் தூரத்தில் இருந்து ஒளிக் கற்றையைப் பாய்ச்சி மனிதனை ஒரு பிடி சாம்பலாக்கக் கூடிய ஆயுதம் அவர்களிடம் இருக்கிறது. இன்னும் நவீனமாக என்னென்ன வசதிகள் இருக்கின்றன என்று கூட நமக்குத் தெரியாது."

ஆதி, நர்மதாவின் கையை அழுத்திக் கொடுத்தான். "உன் பேரில் தப்பு இருக்கிறது. நீ ஏன் என்னை ஆராய்ச்சிக்கூடத்தில் வைத்து மின்சாரம் செலுத்தி, என் மூளையை சிலுப்பினாய்? என் கடந்த கால நினைவுகள் எனக்குத் திரும்பாமலேயே இருந்திருக்கலாம்."

"இந்தப் பூமியின் பேரில் உனக்கு அன்பு இருக்கிறதா ஆதி."

"அன்பு என்பது அற்பமான வார்த்தை. அதைவிட வீரியமான வார்த்தை இருந்தால் சொல்... அவ்வளவு தூரம் இந்தப் பூமியின் மீது எனக்குக் காதல் இருக்கிறது..."

"அப்படியானால் பூமியை நீ விட்டுக் கொடுக்கலாமா?"

"என்ன செய்ய வேண்டும் என்கிறாய்?"– ஆதி அவளை நிமிர்ந்து பார்த்துக் கேட்டான்.

"சொல்கிறேன், வா" – நர்மதா அவன் கை பற்றி எழுப்பினாள்.

## 3



கூட்ட அரங்கு.

பல தேசத்து விஞ்ஞானிகள்– அந்தத் காலை வேளையில் சுறுசுறுப்பாகக் கூடிவிட்டார்கள்.



சங்கேத மொழி நிபுணர்கள்– பல்வேறு சந்தர்ப்பங்களில் சொல்லப்பட்ட பல்வேறு வார்த்தைகளின் அர்த்தங்களை வைத்து ஆராய்ந்து– இன்னன்ன வார்த்தைக்கு இன்னன்ன அர்த்தம் இருக்கலாம் என்ற பட்டியல் ஒன்று தயார் செய்திருந்தார்கள்.

ஆதி, நர்மதா நுழைந்தார்கள்.

ஆதி வெள்ளை உடை உடுத்தி– சட்டையில் அன்று பூத்த ரோஜா ஒன்று செருகி இருந்தான்.

நர்மதா அவனுடன் கை கோர்த்து உள்ளே நுழைந்தாள்.

வெளிர் நீல நிறத்தில் சேலை அணிந்திருந்தாள்.

மைக்கை நெருங்கி வளைத்தான்.

"ஆதி, உங்கள் எல்லாரிடமும் பேச விரும்புகிறார் என்று சொன்னதும், நீங்கள் ஆர்வத்துடன் கூடி இருக்கிறீர்கள். ஆனால், செய்தியாளர்களும், வீடியோ கேமிராக்களும் இருந்தால் ஆதி சில விஷயங்கள் பற்றி பேச இயலாது என்று நினைக்கிறார். எனவே, கேமிராக்கள் வெளியேற வேண்டும். பத்திரிகையாளர்களும் சற்றுப் பொறுக்க வேண்டும். ஒரு மணி நேரம் கழித்து உங்களையெல்லாம் சந்திக்க ஆதி சம்மதித்துள்ளார். இப்போது விஞ்ஞானிகளிடம் மட்டும் பேச வேண்டிய விஷயங்கள் உள்ளன. தயவு செய்து ஒத்துழையுங்கள்."

சின்னச் சின்ன ஆட்சேபனைகளோடு, சொற்பமான முணுமுணுப்போடு பத்திரிகையாளர்கள் வெளியேறினர்.

ஆதி வாய் திறந்தான்.

"நர்மதாவும், நானும் நேற்று பேசினோம். என்னுடைய தாய் கிரகத்தில் பேசுவது என்னுடைய ஹெட்போனில் மற்றவர்களுக்கு விளங்காத அலைவரிசையில் எனக்குக் கேட்கிறது. அதைப் புரிந்துகொள்ள முடிந்தால், அவர்களுடைய பேச்சை உடனுக்குடன் உங்களிடம் பகிர்ந்துகொள்ளலாம் என்று எனக்குத் தோன்றியது. அதனால் நான் சங்கேத வார்த்தைகள் ஆராயும் நிபுணர் குழுவிடம்– வார்த்தைகளுக்கு அர்த்தம் கேட்டிருந்தேன்.

அந்த வார்த்தைகளையும், அவற்றின் அர்த்தங்களையும் மனதில் ஏற்றிக்கொண்டால்– என்னால் அந்த மொழியைப் புரிந்துகொள்ள முடியும் என்று நினைக்கிறேன்."

"ஆதி! ஏரகிக்கும் தன்மை பற்றி உங்களுக்கெல்லாம் தெரியும்" என்று அதை ஆமோதித்தாள் நர்மதா.

மொழியை விளங்கிக்கொள்ள முடிகிறது என்று உடனடியாக தெரிவிப்பதைவிட, சங்கேத மொழி நிபுணர்களின் தயவுடன் மொழியைப் புரிந்துகொண்டதாகக் காட்டிக்கொள்ள ஆதி முடிவு செய்திருப்பது அவளுக்குத் தெரியும்.

அடுத்த சில நிமிடங்கள்– மொழி வல்லுநர்களின் நேரம் ஆனது. ஏற்கெனவே ஆதி உச்சரித்திருந்த வார்த்தைகள் மற்றும் அவனுடைய ஹெட்போனில் ஒலித்த வார்த்தைகள் இவற்றை வைத்து அலசி, மொழிபெயர்ப்பதற்கு முயற்சி நடந்திருந்தது.

ஆதி ஒரு புன்சிரிப்புடன் அந்த அகராதியை மனதில் வாங்கிக்கொண்டான். ஏற்கனவே அவனுக்குத் தெரிந்த அர்த்தங்களை அவர்கள் மூலம் அவன் கேட்டுக்கொள்வதற்கான புன் சிரிப்பு அது என்று நர்மதாவிற்குத் தோன்றியது.

கார்டுலெஸ் ஹெட்போனை அணிந்தான்.

கண்களை மூடிக்கொண்டு பேசலானான்.

"எங்கள் உயர்மட்டக் குழுவில் இருப்பவர்கள் அணியும் ஹெட்போன்களில் ஒன்றுதான் இது. நாங்கள் எங்கிருந்தாலும், ஒருத்தருடன் ஒருத்தர் பேசுவதற்கு வசதியாக அமைக்கப்பட்டது. இப்போது அவர்கள் பேசுவதை என்னால் கேட்க முடிகிறது.

ஆதி முகத்தில் உணர்ச்சிகள் அவ்வப்போது மாறின. அரை மணி நேரத்திற்கு ஒரு முறை– கேட்டதைத் தொகுத்துச் சொன்னான்.

இரண்டு மணி நேரங்களில் அவன் உச்சரித்ததில் இருந்து...

"அவர்களுடைய கிரகத்திற்கு சுகுடா என்று பெயர்..."

"சுகுடா கிரகத்தில் இருக்கும் விண்வெளிக் கலங்கள் எல்லாவற்றையும் பழுது பார்த்துப் பயன்படுத்தத் தயாராக



வைத்திருக்கச் சொல்லி ஒரு உத்தரவு போடப்பட்டிருக்கிறது..."

"சுகுடா கிரகத்தில் புதிய விண்வெளிக் கலங்களும் தயாராகின்றன..."

"தாக்குதலுக்குத் தேவையான நவீன லேசர் ஆயுதங்களையும் தொடர்ந்து தயார் செய்யச் சொல்லி கிரகத்தின் தலைவர் உத்தரவிட்டிருக்கிறார்..."

"சுகுடா கிரகம் பூமியைவிட அளவில் சிறியது. பூமியின் பரப்பளவில் மூன்றில் இரண்டு பங்குதான் இருக்கும். அங்கிருக்கும் அத்தனை பேருக்கும் ஒரே தலைவர்தான். மிகப் பழமையான கற்கால மனிதர்கள், நாடோடிகள் போன்றவர்களைத் தவிர, மற்ற எல்லோரும் ஒரே இனமாகத்தான் செயல்படுகிறார்கள். அவர்களுக்குள் எந்த பாகுபாடும் இல்லை. வேறுபாடும் இல்லை."

"சுகுடா கிரகத்தில் பசி இல்லை. பட்டினி இல்லை. ஆனால், கிரகத்தில் அவர்களுடைய வளர்ச்சிக்குத் தேவையான அளவுக்கு தாதுப் பொருட்கள் இல்லை. புதிய தொழிற்சாலைகள் தொடங்க போதிய இயற்கை வசதி இல்லை..."

"பூமியின் மீது அவர்களின் பார்வை விழுந்துவிட்டது. பூமியில் இருக்கும் வளம் பற்றி அவர்கள் தங்கள் செயற்கைக் கோள்கள் மூலம் தகவல்கள் சேர்த்திருக்கிறார்கள். பூமியில் இருக்கும் இயற்கை வளத்தை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்த அவர்கள் பெரிதும் விரும்புகிறார்கள்."

"அவர்களுடைய நடவடிக்கைகள் யாவும் பூமியின் மீது படையெடுப்பதற்கான முன்னோடியாகத்தான் இருக்கிறது."

"பூமிக் கிரகத்தில் நான் வீழ்ந்ததும், வெடிகுண்டால் அழிக்கப்பட்டதாகவே அவர்கள் முதலில் நம்பி இருக்கிறார்கள்" என்று சுனாவும், அவன் தோழர்களும் பேசியதில் இருந்து தெரிகிறது. ஆனால், இப்போது பேசுவது வித்தியாசமாய் இருக்கிறது.

"நம்முடைய இணைப்பில்லாத ஹெட்போன்களை பூமியில் இயக்குகிறார்கள் என்பது புரிகிறது. அதில் ரிபாவின் குரல் கேட்கிறது.

அவன் பூமியில் இருக்கும் மொழியைக் கற்றுக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. ரிபாவை பூமியில் வாடவிடக்கூடாது. நமக்காகத்தான் அவன் இந்தப் பயணம் மேற்கொண்டான். நம் விண்கலத்தின் எரிபொருளை சரி செய்யத்தான் பூமி பரப்பில் இறங்கினான். அவனை அங்கேயே விட்டுவிட்டு வந்தது, நாம் அவனுக்கு செய்த துரோகம். அவனை எப்படியாவது மீட்க வேண்டும்" என்று தலைவர் ஆணையிட்டு இருக்கிறார்."

ஆதி, ஹெட்போன்களைக் கழற்றினான்... "ரிபா என்பது நான்தான் என்று உங்களுக்கெல்லாம் தெரியும். என்னை சுகுடா கிரகத்திற்கு மீட்டுப் போக வேண்டும் என்ற திட்டம் இன்று பேசப்படுகிறது" என்றான். அவன் முகத்தில் மெல்லிய கவலை.

அத்தனை விஞ்ஞானிகளும் அவனை வெறித்தார்கள்.

"ஆதி... உன்னை அவர்கள் மீட்பது பற்றிப் பேசினார்களே, அதைவிட கவலை தரக்கூடிய விஷயம் ஒன்று சொன்னாய். பூமியின் மீது அவர்கள் தாக்குதல் நடத்தப் போகிறார்களா?"

அமெரிக்க விஞ்ஞானி கேட்டார்.

"ஆமாம்" என்றான் ஆதி, மெல்லிய குரலில். "பூமியை அவர்கள் அழிக்கப் போவதில்லை. ஆனால், பூமியின் இயற்கை வளத்திற்கு ஆசைப்பட்டு அவர்கள் இங்கு வந்து ஆக்கிரமிக்கப் போகிறார்கள்..."

"இல்லை... அதை நாம் அனுமதிக்கக் கூடாது..." என்றார், ஜெர்மன் விஞ்ஞானி. உணர்ச்சிவசப்பட்டு இருக்கையில் இருந்து அவர் எழுந்தார்.

"எப்பொழுது வரப் போகிறார்கள் ஆதி?"

ஆயுதங்களும், விண்வெளி வாகனங்களும் தயாரானதும் எப்படியும் இன்னும் தொண்ணூறு நாட்கள் ஆகலாம்..."

"ஆதி... ஹெட்போனில் நீ கேட்பது எல்லாவற்றையும் சொல்லிவிட்டாயா? எதையோ மறைப்பது போல எங்களுக்குத் தோன்றுகிறது..."– என்றாள், நர்மதா.

ஆதி தலை குனிந்தான். "ஒண்ணுமில்லை" என்றான்.



"உனக்கு பொய் சொல்ல சரியாகக் கற்றுத் தரப்படவில்லை ஆதி."

அத்தனை பேருக்கும் நடுவில்– பொதுவில் அவள் கேட்டாள்.

ஆதி கண்களை மூடித் தன்னை நிதானித்துக்கொண்டான்.

ஹாலில் இருந்த அத்தனை பேரின் பார்வைகளும் அவன் மீது எய்யப்பட்டன.

"ஆமாம்... சொல்லி உங்களை அச்சுறுத்த நான் விரும்பவில்லை" என்றான்.

"அந்த மாதிரி நீ நினைக்காதே ஆதி... எந்த விவரத்தையும் சொல்லாமல் மறைக்காதே..." என்றார், ரஷ்ய விஞ்ஞானி.

"சொல்கிறேன். சுகுடா கிரகத்தில் இருந்து பூமியை கவனித்துக்கொண்டே இருக்கிறார்கள். நமக்கு வசதி செய்வதற்காகவே பூமி பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது, என்றாராம் தலைவர். பூமியில் வாழும் வெவ்வேறு நாடுகளுக்குள் ஒற்றுமை இல்லை. ஒருத்தருக்கொருத்தர் போரிட்டுக்கொண்டு, எப்போதும் மோதிக்கொண்டே இருக்கிறார்கள். வருடத்தின் எந்தத் தினத்தை எடுத்தாலும், ஏதாவது ஒரு நாடு இன்னொரு நாட்டின் மீது குண்டுகள் எறிந்துகொண்டுதான் இருக்கிறது.

பூமியை நாம் ஆக்கிரமிக்க இதைவிட வேறென்ன வசதி வேண்டும்? ஈரான் பகுதியில் போய் நாம் இறங்கினால் அதற்காக நமக்கு பாராட்டு விழாவே நடத்தும் அமெரிக்கா. இந்தியாவைக் கைப்பற்றினால், நமக்குக் கை கொடுக்கும் பாகிஸ்தான். அதனால் குறிப்பிட்ட தேதிக்குள் போய் இறங்க வேண்டும் என்ற கவலை நமக்கு இல்லை. எந்தத் தேதியில் போனாலும், பூமியில் பலகீனமான இடங்கள் இருக்கும் என்று பேசி இருக்கிறார்கள்..."

ஆதி நிறுத்திவிட்டு– அத்தனை முகங்களையும் பார்த்தான்.

ஒவ்வொரு முகத்திலும் மெல்லிய அதிர்ச்சியும், உண்மைக் கசப்பின் வெட்கமும் தொனித்தன.

ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள். லெப்டினன்ட்

கர்னல் சதுர்வேதி, தொண்டையை செருமிக்கொண்டார்.

"நம் குடும்பத்தில் அப்பாவுக்கும், பிள்ளைக்கும் சண்டை நடக்கும். ஆனால், பக்கத்து வீட்டுக்காரன் ஏதாவது பிரச்சினை கிளப்பினால் என்ன செய்கிறோம்? அப்பாவும், பிள்ளையும் தங்களுக்குள் இருக்கும் சண்டையை மறந்துவிட்டு, உடனே ஒன்று சேர்வதில்லையா? பக்கத்து தெருவுடன் சண்டை எனும்போது, இந்தத் தெருவில் இருப்பவர்கள் தமக்குள் இருக்கும் வேற்றுமைகளை மறப்பதில்லையா? பக்கத்து ஊருடன் சண்டை என்றால், எல்லாத் தெருக்களும் ஒன்று சேரவில்லையா? வேறொரு நாட்டுடன் போர் என்று வரும்போது, இங்கே ஊருக்கு ஊர் இருக்கும் வித்தியாசங்களை மறந்து நாமெல்லாம் ஒற்றுமை ஆவதில்லையா? இன்னொரு கிரகத்தில் இருந்து தாக்குதலுக்கு வந்தால், நாம் வேடிக்கை பார்த்துக்கொண்டா நிற்க முடியும்? நமக்குள் இருக்கும் வேற்றுமைகளை மறக்க வேண்டாமா?"

யாராவது குரல் கொடுக்க வேண்டும் என்பதற்காகக் காத்திருந்தது போல் அத்தனை பேரும் ஒரே குரலில் "யெஸ்" என்றார்கள்.

வெவ்வேறு நாட்டின் வெவ்வேறு குரல்கள் அப்படி ஒரே கணத்தில் ஒலித்த விதம்– அந்த அறையில் ஒரு திடீர் மின்சாரம் பாய்ச்சியது போல் இருந்தது.

குரல் கொடுத்ததோடு நிற்காமல் அத்தனை பேரும் ஒருசேர எழுந்து நின்றார்கள்.

அத்தருணத்தில் அவர்களின் உடைமைகளைத் தவிர வேறெதுவும் சப்தம் செய்யவில்லை. அந்தக் கண நேர நிசப்தம்– அறையில் ஒரு புது சக்தியைத் தோற்றுவித்தது.

உணர்ச்சிகள் சேர்ந்து நர்மதாவின் கண்களில் ஈரம் கொண்டு வந்தது.

"தேங்க்யூ..." என்றாள், உடைந்த குரலில்.

★★★



# 4



விரல்களைக் கோர்த்தது போல் கிளைகளைக் கோர்த்து நிழல் குடையாக கால் ஊன்றி நின்றிருந்தது– அந்த மாபெரும் மரம். முண்டும், குண்டுமாக அதன் வேர்கள் பூமிக்கு வெளியே புடைத்திருந்தன. நான்கு விரல் உயரத்திற்கு புல் அடர்ந்து வளர்ந்திருந்தது. தரையோடு வீசிய காற்று, புல்லை சிலிர்த்து சிலுப்பிவிட்டது.

அந்தக் காற்றில் பூவின் வாசம் இருந்தது. தண்ணீரைத் தொட்டு வந்த குளுமை இருந்தது.

சிமெண்டு பெஞ்சைத் தவிர்த்து புல் தரையில் அமர்ந்து, ஒரு கனத்த மரத்தில் முதுகு சாய்த்திருந்தான் ஆதி.

அவன் மடியில் படுத்திருந்தாள், நர்மதா.

இரண்டு கைகளையும் மார்புக்கு குறுக்கே கட்டிக்கொண்டான்.

"காற்று ஜம்மென்றில்லை?"– என்று கேட்டாள், நர்மதா.

"எனக்குக் குளிர்கிறது."

"என்னது! குளிர்கிறதா?"

"என்னம்மா செய்வது? நான் இந்த ஊர்க்காரனா? அயலூர்க்காரன். எங்கள் ஊரில் மணலும், பாலைவனமும், வெயிலும், அனல் காற்றும்தான் இந்த உடம்புக்குப் பழக்கம்..." –ஆதி போலியான சோகத்துடன் சொல்ல, நர்மதாவின் கை நீண்டது. அவன் மூக்கைத் தொட்டது. விரல் நுனிகளால் பற்றியது. நிமிண்டியது.

"அயலூர்காரன் என்று கண்டுபிடித்ததே நான்தானே? நீ வேண்டுமானால் சுகுடா கிரகம், பக்கோடா கிரகம் என்று உன் பூர்வீகத்தைப் பற்றி பெருமை அடித்துக்கொள்ளலாம். ஆதி... ஆனால், இந்தப் பூமி ஒரு ஆதியைப் பார்க்கப் போகிறது என்று தெரியுமா? குட்டி ஆதி..."

"என்னது!"

நர்மதா திருதிருவென்று விழித்த அவன் விழிகளை ரசித்தாள்.

"என்ன செய்வது. நீ பூமியில் பிறக்கவில்லை! அதுவும் இந்தியாவில் பிறக்கவில்லை. பிறந்திருந்தால் இப்படி நான் சொன்னதும், அடி கள்ளி என்று என்னைக் கட்டிப் பிடித்து என் கன்னத்தில் ஒரு முத்தம், வயிற்றில் ஒரு முத்தம் கொடுத்திருப்பாய். வயிற்றில் காதைப் பதித்து டாக்டர் போல நாடி கேட்டிருப்பாய்..."

"சத்தியமாக நீ சொல்வது புரியவில்லை..."

நர்மதா அவன் கையைப் பற்றி இழுத்து, சேலையைத் தளர்த்தி–தன் குழைந்த வயிற்றில் அந்த கையைப் பற்றி அழுத்தினாள்.

"இங்கே ஒரு குட்டி ஆதி வளர்கிறான் அல்லது வளர்கிறாள் என்று சொன்னேன்..."

ஆதி முகம் மலர்ந்தது.

குனிந்து அவள் நெற்றியில் அழுந்த முத்தமிட்டான். "எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது!" என்றான். "பூமியில் உணர்ச்சிகளைப் பரிமாறிக்கொள்கிற அளவுக்கு எங்கள் கிரகத்தில் நடந்ததில்லை, நர்மதா. சொல்லப் போனால் இந்த உணர்ச்சிகளால்தான் இந்த உலகம் பின்தங்கி இருந்தபோதும், இவ்வளவு உயிரோட்டத்துடன் இருக்கிறது..."

நர்மதா அவன் மடியில் சற்றே புரண்டு படுத்தாள்.

"கேமிராவில் இருந்து தப்பித்து வந்து பத்து நாள் ஆகிறது, ஆதி. அதுவே பெரும் நிம்மதியாக இருக்கிறது..."

"நாம் தப்பித்து வந்துவிட்டாலும், என்னைப் பற்றி அங்கே இன்னும் ஆராய்ச்சிகள் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. அந்த ஹெட்போனை ஆம்ப்ளிப்பையரில் பொருத்தி, டியூன் செய்து அதில் ஒலிபரப்பாகும் ஒலிகளை எல்லாம் குறித்துக்கொண்டு, அதில் ஒலிக்கும் வார்த்தைகளுக்கு எல்லாம் அர்த்தம் தேடிக்கொண்டுதான் இருக்கிறது... விஞ்ஞான உலகம்."

"ஆனால், ஆதி... உலகம் இவ்வளவு அமைதியாக, இவ்வளவு



ஒற்றுமையாக எந்த நூற்றாண்டிலும் இருந்ததில்லை. அத்தனை போர்களும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுவிட்டன. பகை நாடுகள் கூட தம் வேற்றுமைகளை உதறிவிட்டு, ஒரே இடத்தில் கூடி பூமியைப் பாதுகாக்க வழி என்ன என்று பேசத் தொடங்கிவிட்டன. சுகுடாவில் இருந்து வரும் விண்கலங்கள் பூமியை முதலில் எந்த திசையில் இருந்து நெருங்கப்போகின்றன என்பது தெரியாததால், அத்தனை நாடுகளிலும் பொதுவான தலைமையில் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. கேட்க எவ்வளவு சந்தோஷமாய் இருக்கிறது தெரியுமா?"

"இன்னொருத்தன் தாக்க வந்தால்தான் இப்படி ஒற்றுமையாய் இருக்க முடியும் என்பதுதான் துக்கமாக இருக்கிறது"– என்றான், ஆதி.

அவனைக் குனிந்து பார்த்த பார்வையில்... ஏதோ சேதி ஒளிந்திருந்தது.

★★★

அந்த ஆராய்ச்சி அறையில் ஏராளமான கம்ப்யூட்டர்களின் முன்னால், இளம் விஞ்ஞானிகள் உட்கார்ந்திருந்தார்கள். உலகை வலம் வரும் செயற்கைக் கோள்களில் இருந்து தருவிக்கப்படும் செய்திகளை உடனுக்குடன் ஆராய்ந்து குறிப்புகள் எடுத்தார்கள். இன்னொருபுறம், ஒலிபரப்பாகும் வேற்று மொழியை மொழிபெயர்க்கும் வேலை நடந்துகொண்டிருந்தது.

அந்த வேலையில் ஈடுபட்டிருந்தவர்களில் இளம் இந்தியப் பெண் எழுந்தாள். அவள் முகத்தில் பரபரப்பு. கையில் ஒரு தாளை எடுத்துக்கொண்டு தலைமை விஞ்ஞானியின் அறைக்கு ஓடினாள்.

"என்ன பூர்ணா, என்ன ஆயிற்று?"

– தலைமை விஞ்ஞானி ஆங்கிலத்தில் கேட்டார்.

"இப்பொழுது கடைசியாக வந்த செய்தியைப் பாருங்கள், சார்."

அவள் பரபரப்பு குறையாமல் காகிதத்தை நீட்டினாள்.

அதில் மொழிபெயர்த்து எழுதப்பட்டிருந்ததை விஞ்ஞானி

படித்தார்.

"ரிபா... ரிபா... இப்போது சொல்வதைக் கவனமாகக் குறித்துக்கொள். பூமியில் இருந்து நீ அனுப்பிய விவரங்கள் உபயோகமாக இருந்தன. பூமி மொழியையும் நீ கற்றுக்கொண்டதை தலைவர் மிகவும் பாராட்டுகிறார். ஆனால், அத்தனை நாடுகளும் போரைக் கைவிட்டு ஒற்றுமையாய் இருப்பதாய் நீ அனுப்பிய சேதிதான் கவலையாக இருக்கிறது. அவர்கள் ஒற்றுமையாய் இருக்கும் வரை தாக்குதலை முயற்சிக்க வேண்டாம் என்று தலைவர் நினைக்கிறார். இந்த ஒற்றுமை தற்காலிகமானதுதான். எப்படியும் நாடுகள் ஒன்றுடன் ஒன்று போர் தொடுக்கும். அப்போது தாக்குதலை மேற்கொள்ளலாம் என்பது எங்கள் எல்லோருடைய கருத்து.

பூமிக்கு நீ அனுப்பப்பட்ட வேலை முடிந்துவிட்டது. இனியும் நீ அங்கு தொடர வேண்டிய அவசியமில்லை. இங்கு வந்துவிட்டால், பூமியின் ஒலிபரப்புகளை மொழிபெயர்த்து எங்களுக்கும் சொல்ல வசதியாய் இருக்கும். உன்னை அழைத்து வர வாகனம் அனுப்பப்படுகிறது.

பூமியில் இருக்கும் 'ராடார்' கருவிகளுக்குப் புலப்படாத வேகத்தில், பூமியின் விஞ்ஞானத்தால் உணர முடியாத உலோகக் கலவையில் செய்யப்பட்ட அந்த வாகனம் நாம் ஏற்கெனவே குறித்த இடத்திற்கு இருட்டில் வந்து இறங்கும். நாம் முன்பே பேசிய நேரத்தில் அங்கே தயாராய் இரு.

மற்றவை நேரில்."

"மை காட்!" என்றார். "இதை மொழி பெயர்த்தது யார்?"

"நான்தான், சார். இடையில் புரியாத சில வார்த்தைகளும் இருந்தன. அங்கேயெல்லாம் எந்த வார்த்தை போட்டால் பொருத்தமாக இருக்கும் என்று நானே அனுமானித்துப் போட்டிருக்கிறேன் சார்."

"எக்ஸலன்ட் ஒர்க்... உடனே நான் மிஸ்டர் சதுர்வேதியைப் பார்க்க வேண்டும் என்று சொன்னதாகச் சொல்...."

★★★



சதுர்வேதி தீப்பிடித்த அவசரத்துடன் அந்த அறைக்குள் நுழைந்தார்.

"ஆதிக்கு செக்யூரிட்டி ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளனதானே?" – அமெரிக்க தலைமை விஞ்ஞானி கேள்வியைப் பொதுவாக எறிந்தார்.

"செய்யப்பட்டிருக்கிறது. ஆதிக்கும், நர்மதாவிற்கும் தெரியாமல் அவர்கள் எங்கே போனாலும், சிறிய இடைவெளி விட்டு அவர்களைக் கண்காணிப்பதற்கு மூன்று பேர் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய சுதந்திரத்தில் குறுக்கிடாமல், அதே நேரம் அவர்களைப் பார்வையில் இருந்து தவறவிடாமல் கவனிக்க ஏற்பாடு செய்திருக்கிறேன்."

"இதைப் படியுங்கள்."

சதுர்வேதி அந்த மொழிப்பெயர்ப்பைப் படித்துவிட்டு பதற்றத்துடன் நிமிர்ந்தார். "இது அக்கிரமம்... ஆதி நம்மை நன்றாக ஏமாற்றி இருக்கிறான். அவன் சுகுடா கிரகத்துடன் தொடர்பு வைத்திருந்தது பற்றி இதுவரை சொன்னதே இல்லை. அவனுடைய 'கார்டுலெஸ் ஹெட்போன்' நம்மிடம் இருக்க, அவனால் எப்படி தொடர்புகொள்ள முடியும்?"

"நமக்கு தெரியாமல் அவனிடம் வேறு 'டிரான்ஸ்மீட்டர்' இருக்க முடியாதா என்ன? ஆதியை கண்காணிப்பவர்களிடம் இருந்து ஒவ்வொரு மணி நேரத்திற்கும் 'ரிப்போர்ட்' வேண்டும் என்று சொல்லிவிடுங்கள். நம் ராடார்களின் பார்வையில் மண் தூவிவிட்டு அவர்களுடைய விண்கலம் இறங்கும் என்பதுதான் சற்று திடுக்கிடலாய் இருக்கிறது. உஷாராக இருக்கச் சொல்லி, கண்காணிப்பு மையங்களுக்கு நான் தகவல் அனுப்பிவிடுகிறேன்..." என்றார் விஞ்ஞானி.

சதுர்வேதி, பாதுகாப்பு ஆட்களுக்கு ஆணை கொடுக்க பரபரப்பாக ஓடினார்.

★★★

ஆதி எழுந்தான். கை கொடுத்து நர்மதாவையும் எழுப்பினான். காற்று குளுமையாக அவர்களுக்கு இடையில் புகுந்தது.

"ஆதி, திடீரென்று உங்கள் முகம் மாறிவிட்டது. எதையோ என்னிடம் மறைக்கிறீர்கள்..." என்றாள் நர்மதா.

ஆதி பதில் சொல்லாமல் அவள் தோளில் கை போட்டு, நெருக்கினான். அவளுடைய இளம் உடல் அவன் மீது படிந்ததும், அப்படியே அழுத்தி இறக்கினான்.

"என்னுடைய இத்தனை வருட வாழ்க்கையில் மிக சந்தோஷமாக இருந்த தருணங்கள் உன்னுடன் இருந்தவைதான். நான் எங்கே இருந்தாலும் அதை மறக்கமாட்டேன்..."

நர்மதா திடுக்கிடலுடன் பார்த்தாள். "எங்கே இருந்தாலும் என்று என்ன பேச்சு! நீ எங்கே இருக்க முடியும் – என்னுடன் இருப்பதைத் தவிர?"

ஆதி தர்மசங்கடமான புன்னகை ஒன்றை விரித்தான்.

"எங்கே இருப்பேன், உன்னுடன்தான்" என்றான்... உலர்ந்த – சமாதானப்படுத்தும் குரலில்.

ஆனாலும், அந்த வார்த்தைகளின் பின்னே ஏதோ சொல்லப்படாத ரகசியம் இருப்பதாகவே நர்மதாவிற்குத் தோன்றியது.

★★★

திடுக்கிட்டு கண் திறந்தாள் நர்மதா. இரவு நேரம் தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்துவிட்டு, எப்போது தூங்கிப் போனாள் என்பது புரியாமல் தூங்கியவளுக்கு திடீரென்று ஏன் விழிப்பு வந்தது என்று புரியவில்லை.

விழித்ததும், தன்னிச்சையாக கை பக்கத்தில் விழுந்தது. திடுக்கிட்டாள். ஓட்டல் அறையில் அவளை அடுத்துப் படுத்திருந்த ஆதி எங்கே? கழிவறைக்கு போயிருக்கிறானா?

பரபரப்பாக எழுந்தாள்.

கழிவறைக் கதவைத் திறந்தால், உள்ளே காற்று தவிர வேறு



எதுவும் இல்லை. "ஆதி!" என்று கூப்பிட்டுப் பார்த்தாள். பதில் இல்லை.

காரிடாருக்கு வந்தாள். காற்று வாங்க எங்காவது நிற்கிறானா?"

திடுக் திடுக் திடுக் என்று நெஞ்சு மோதியது.

ஆதி அவள் எதிர்பார்த்த இடத்தில் இல்லை.

எங்காவது வெளியில் போயிருக்கிறானா?

இன்டர்காமில் ரிசப்ஷனை அழைத்து இயல்பாக விசாரிப்பது போல், "என் கணவர் ஆதி எங்காவது வெளியில் போனாரா?" என்று கேட்டாள்.

"இல்லையே, மேடம்... உங்கள் கணவர் வெளியே வரவே இல்லையே!"

"தேங்க்யூ..."

ரிசீவரை வைத்தாள். தூக்கம் முற்றிலும் விடைபெற்றுவிட்டது.

'எங்கே இருந்தாலும்' என்ற வார்த்தைகளை ஆதி அழுத்திச் சொல்லாமல் இருந்திருந்தால் அவளுக்கு சந்தேகமே வந்திருக்காது. அவன் எதையோ அவளிடம் மறைத்திருக்கிறான்.

அறையில் விளக்கு போட்டு– அவளுக்காக தகவல் விட்டுப் போயிருக்கிறானா என்று தேடினாள். மேஜையில் சிறுகுறிப்பு கிடைத்தது.

நாம் திரும்பிச் சந்திக்கும் வரை

எப்பொழுதும் உன் நினைவுடன்...

– ஆதி.

ஆதி அவளை விட்டுவிட்டு காற்றில் கரைந்துவிட்டான் என்ற உண்மை அவள் மனதில் எரிகுழம்பாக இறங்கியது.

ரிசீவரை எடுத்தாள். "டெல்லிக்கு உடனே ஒரு போன் போட வேண்டும்" என்றாள்.

"பீ... பீ "– அழைப்பு, பண்டித் மித்ராவிற்கு..."

5



செய்தி பெட்ரோல் தீ போல் பரவியது!

## ஆதியைக் காணவில்லை!

"ஓட்டலின் வாசல் வழியாகவோ, பின்புறம் வழியாகவோ, ஜன்னல் வழியாகவோ அவன் வெளியே வரவேயில்லை" என்று வேவு பார்த்த மூன்று 'செக்யூரிட்டி' ஆட்களும் சத்தியம் செய்தார்கள். "ஓட்டலில் இருந்து எங்கள் பார்வையை மீறி ஆதி போயிருக்கவே முடியாது."

சதுர்வேதி ஓட்டலுக்கு தானே நேரில் வந்தார். ஆராய்ந்தார். "முட்டாள்களா!" என்றார்.

"வாசல் வழியே வரவில்லை. கொல்லைப்புறம் வழியே தப்பிக்கவில்லை என்று மட்டும்தான் சொல்கிறீர்கள். மொட்டை மாடி என்று ஒரு இடம் இருப்பது பற்றி உங்களுக்கு தெரியாதா? 'லிப்ட்'டில் மாடியேறிப் போய்" – சதுர்வேதி நிறுத்தினார்.

"மைகாட்... அவனை அழைத்துப் போக வந்த சுகுடா கிரகத்து விண்கலம், இந்த ஓட்டலின் மொட்டை மாடியில் இறங்கி இருக்கும். நம்முடைய கண்காணிப்பை எல்லாம் எப்படியோ தவிர்த்துவிட்டு அவனை அழைத்துப் போக சுகுடா விண்கலம் அனுப்பிவிட்டது!"

"ஆதி என்னை விட்டு எங்கேயும் போகமாட்டார்!" என்றாள், நர்மதா... அழுத்தமாக. அவள் குரல் நடுங்கியது. கண்களில் நீர் கோர்த்துவிட்டது.

"எல்லாம் உன்னால் வந்ததுதான்... நீதான் உங்களுக்கு தேனிலவு தனிமை வேண்டும் என்று அடம்பிடித்து இந்த மலைப்பிரதேசத்திற்கு அவனை அழைத்து வந்தாய்" என்றார், பண்டித் மித்ரா, சற்றே கோபமாக.

"ஆதி சுகுடாவிற்குப் போய்விட்டால், அவர்கள் பூமியின்



மீது படையெடுத்து வருவது என்பது உறுதியாகிவிடும். நாம் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து ஒற்றுமையாக இருக்கும் வரைதான் ஆபத்தில்லை" என்றார் சதுர்வேதி, முகமெங்கும் கவலை பரவ.

"எனக்கு ஆதி வேண்டும்... உடனே வேண்டும்..."– நர்மதா மெல்லக் குலுங்கி அழுது, பண்டித்மித்ராவின் தோளில் விழுந்தாள்.

"கிடைப்பான்... அவன் கிடைப்பான்" என்றார், பண்டித் மித்ரா, இயந்திரத்தனமாக.

அவர் பேசியது அவருக்கே நம்பிக்கையில்லை என்பது போல் இருந்தது அவர் குரல்.

★★★

**நா**ற்பது நீண்ட நாட்கள் நகர்ந்துவிட்டன.

ஆதி முகம் உலகமெங்கும் ஒளிபரப்பாகியது. பாலைப் பிரதேசங்களில் கூடுதலாக தேடும் முற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன.

ஆதி கிடைக்கவில்லை.

நாற்பதாவது நாள் புதிய பிரச்சினை ஒன்று வெடித்தது.

இத்தனை நாட்களாக இயங்கிக்கொண்டிருந்த 'கார்டுலெஸ் ஹெட்போன்' தடாவென்று நிசப்தமாகிப்போனது.

சுகுடா கிரகத்து செய்திகள் எதுவும் ஒலிபரப்பாகாமல் அது மவுனமாகிப் போனது ஏன் என்று விஞ்ஞானிகளுக்குப் புரியவில்லை. 'ஹெட்போன்' பழுதுபட்டிருக்கலாம் என்று அதே அலைவரிசையில் ஒலி வாங்கக்கூடிய பூமியில் தயாரான ரிசீவர்களையும் முயற்சித்துப் பார்த்தார்கள். பயனில்லை.

"ஆதி போய் சேர்ந்துவிட்டானோ? தன்னுடைய ஹெட்போனை வைத்து பூமியில் இருப்பவர்கள் சுகுடா கிரகத்து மொழியைப் புரிந்துகொள்கிறார்கள் என்பதை எடுத்துச் சொல்லி அவனே அதை இயக்கம் இல்லாமல் செய்திருப்பானா?"

ஜெர்மன் விஞ்ஞானி தன் சந்தேகத்தை ஒலிபரப்பினார்.

"ஆதி நினைத்திருந்தால் ஆரம்பத்தில் இருந்தே அந்த மொழி பற்றி ஏதும் சொல்லாமல் தவிர்த்திருக்கலாமே.... அவனுக்கு பூமியின் மீது பாசம் இருந்தது என்றுதான் எனக்கு தோன்றுகிறது" என்றார் ரஷ்யா.

"பூமியில் கண்டெடுக்கப்பட்டு- பூமியின் மீது ஒரு நன்றியும், பிரியமும் வந்திருக்கலாம். ஆனால், தன் கிரகத்தில் இருந்து அழைப்பு வந்ததும்... தாய்நாட்டுப் பற்றுதான் அவனுக்குப் பெரிதாகிவிட்டிருக்கிறது" என்றார், அமெரிக்கா.

"அவர்கள் பேசுவதை நம்மால் கேட்க முடிந்தால், அவர்கள் எப்போது தாக்க வருவார்கள் என்று நமக்குத் தெரிந்து தயாராகிவிடுவோம் என்பதால் அந்த ஹெட்போனை இயங்கவிடாமல் செய்திருக்கலாமோ? பூமியை அவர்கள் இப்போது எந்நேரமும் முன்னறிவிப்பின்றித் தாக்கக்கூடிய அபாயம் உருவாகிவிட்டது.

நாம் இருபத்து நான்கு மணி நேரமும், எட்டு திக்கிலும் கவனமாக இருக்க வேண்டியது இருக்கிறது. நமக்குள் எந்தப் பகையும் இல்லாமல், தகவல்களை மறைக்காமல் உடனடியாக ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்ளும் வரையில் நாம் அவர்களைவிட பலசாலிகள் என்று நினைக்கிறேன்."

"நானும் அதையே நினைக்கிறேன்... நம் ஒன்றுமை தொடர வேண்டும்."

"எனக்கும் இதுதான் ஒரே வழி என்று தோன்றுகிறது."

அனைவருக்குள்ளும் பயம் காரணமாக ஒற்றுமை மறுபடி விதைக்கப்படுவதை பண்டித் மித்ரா கவனித்துக்கொண்டிருந்தார்.

"நம்மைவிட அந்த சுகுடா கிரகத்து மனிதர்கள் விஞ்ஞானத்தில் முன்னேறி இருக்கிறார்கள். அவர்கடைய மூளையிலும், மரபணுவிலும் இந்த முன்னேற்றம் பதிந்திருக்கும். நம் மீது சுகுடா கிரகத்தவர்கள் ஒருவேளை படை எடுக்காமலேயே போய்விட்டால் கூட அவர்களுடைய விஞ்ஞான வளர்ச்சி நமக்கும் கைவர வேண்டும். அதற்கு இப்போது ஒரு வாய்ப்பு



வந்திருக்கிறது..." என்றார் அமெரிக்கர்.

"பூமியில் இருந்த நாட்களில் ஆதி மனதையும், உடலையும் ஆண்டவள் நர்மதா. இப்போது ஆதி விதை, நர்மதாவின் வயிற்றில் வளர்கிறது. நிச்சயம் அந்தக் குழந்தையின் மூளைத்திறன் சராசரி மனிதனைவிட அபரிமிதமாக இருக்கும். எதிர்காலத்தில் முக்கியமான ஆராய்ச்சிகளை மேற்கொள்ள அந்தக் குழந்தையால்தான் முடியும். நர்மதாவை நாம் மிக கவனமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். அவளுக்குப் பிறக்கும் குழந்தையை முதல் மூச்சில் இருந்து பாதுகாக்க வேண்டும். அது சாதாரண குழந்தை இல்லை. வேற்று கிரகத்து மனிதனின் பிரதிபலிப்பு என்பதை கவனத்தில் வைத்து, அதன் ஒவ்வொரு விநாடி வளர்ச்சியையும் ஆராய்ச்சியாளர்கள் கவனிக்க வேண்டும்.

அத்தனை பேரும் நர்மதாவைத் திரும்பிப் பார்த்தார்கள்.

"பூமியின் புதிய பொக்கிஷத்தை நீ சுமந்துகொண்டு இருக்கிறாய் நர்மதா" என்றார் ஜெர்மனி.

"அது உன்னுடைய குழந்தை என்று சுயநலமாக நினைக்காதே. அது எங்கள் குழந்தை. அதை சரியாகப் பராமரித்து, பெற்று எங்களிடம் ஒப்படைக்க வேண்டிய பெரிய பொறுப்பு உன்னிடம் வந்து சேர்ந்திருக்கிறது..." என்றார் ரஷ்ய விஞ்ஞானி.

நர்மதாவின் கண்களில் ஈரம் சேர்ந்திருந்தது.

எழுந்தாள். அனைவரையும் ஒரு முறை ஏறிட்டாள்.

பொதுவாகக் கைகூப்பி வணக்கம் சொன்னாள். மெல்ல வெளியேறினாள்.

★★★

நிலா கொஞ்சமாக நசுங்கி இருந்தது.

அதன் வெள்ளி வெளிச்சம் நீல வானத்திலும், அங்கு திரண்டிருந்த வெண் மேகங்களின் திட்டுகளிலும் பொழிந்து நனைத்தது.

பிரம்பு நாற்காலியில் நர்மதா உட்கார்ந்திருந்தாள். குளிர்காற்று சீறிக்கொண்டிருந்தது. அவள் போர்த்தி இருந்த கம்பளிச்

சால்வையின் நுனியில் இருந்த நூல் முடிச்சுகள், காற்றில் சிலிர்த்துக்கொண்டிருந்தன.

"நர்மதா..."– பண்டித் மித்ரா அவள் எதிரில் வந்து அமர்ந்தார். "இந்த நேரத்தில் குளிரில் நீ உட்காரலாமா? உனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பொறுப்பை மறக்கலாமா? உள்ளே வா..."

நர்மதா அவரைப் பார்த்தாள். பார்வையை நகர்த்தி நிலவைப் பார்த்தாள்.

"இன்னும் கொஞ்சம் நேரம் அப்பா..."

"நிலாவையே பார்த்துக்கொண்டிருப்பதால் என்ன லாபம், நர்மதா? ஆதி வந்து இறங்கப் போகிறான் என்று இன்னமும் நம்பிக்கொண்டிருக்கிறாயா?"

"வருவார், ஆதி கட்டாயம் வருவார்..."– நர்மதாவின் குரலில் நம்பிக்கையும், உறுதியும் இருந்தன. "நீங்கள் போய்த் தூங்குங்கள் அப்பா... இன்னும் அரை மணி நேரம் நிலாவைப் பார்த்துவிட்டு நான் வருகிறேன்."

பண்டித் மித்ரா எழுந்தார். அவள் உச்சந்தலையை அன்புடன் வருடிக் கொடுத்தார். வேறெதுவும் சொல்லாமல் உள்ளே நடந்தார்.

நிலாவுடன் மேகங்கள் விளையாடின. காற்று சிறுவதும், அடங்குவதுமாக போக்கு காட்டியது.

நர்மதா தன் வயிற்றில் அசைவை உணர்ந்தாள். குட்டி ஆதி தன் பிஞ்சுக் கால்களை அவள் வயிற்றுச் சுவரில் உதைத்து, தன் உயிர்ப்பைக் காட்டியது.

அவள் முகத்தில் பெருமிதமான புன்னகை பிறந்தபோதுதான், சன்னமாக அந்தக் குரல் கேட்டது.

"நர்மதா."

திடுக்கிட்டு எழுந்தாள். அந்தக் குரல் அவளுக்கு பரிச்சயமானது. ஒவ்வொரு இதயத் துடிப்புடனும் அவளுக்கு மானசிகமாகக் கேட்டுக்கொண்டிருக்கும் குரல். அவளுடைய ஆதி குரல்.



"ஆதி..."– கிசுகிசுப்பான குரலில் இங்கும், அங்கும் விழிகள் அலைபாய தேடினாள்.

"என் கண்மணி... வா. உன்னை அழைத்துப் போக வந்திருக்கிறேன்... உன்னை இல்லை, உங்களை..."

அவளுடைய ஆதி குரலேதான். குரல் வந்த திசை நோக்கி அடி எடுத்து வைத்தாள்.

சுகுடாவில் இருந்து அவளை அழைத்துப் போக அவன் ரகசியமாக வந்திருக்கிறானா?

"இங்கே வா..."

மர நிழல் இருளுக்குள் அவள் நுழைந்ததும், ஆதி வாசம் அவளுக்குப் புரிந்தது. அவளது தோளைத் தொட்டு, அருகே இழுத்தான். நடுங்கும் அவள் உதடுகளை அவனுடைய உதடுகளால் வருடினான்.

அவளுடைய நீண்ட விரல்களுடன் தன் கை விரல்களைக் கோர்த்துக்கொண்டான். காது மடலை வருடினான். கண்களில் முத்தமிட்டான். வயிற்றை இதமாகத் தொட்டுப் பார்த்தான். பின், மறுபடியும் சொன்னான்.

"வா..."

★★★

படுக்கையறையில் நர்மதாவைக் காணாமல் பதறி, விடியும் வரை வெளியேவா இருந்துவிட்டாள் என்ற பதைப்புடன் தோட்டத்திற்கு ஓடினார், பண்டித் மித்ரா.

தோட்டத்து நாற்காலியில் அவரை வரவேற்று, நர்மதாவின் குளிர்சால்வை மட்டும்தான் இருந்தது.

**(முற்றும்)**

முற்றும் போட்ட பிறகும்...

படிக்க விரும்பும் நண்பர்களுக்கு மட்டும்...

ஒரு முடிவுரை:

இந்தியக் கடலின் பரப்பில் வீசியெறியப்பட்டது போல் அந்தத் தீவுத் திடல். உயரமான தென்னைகள் காற்றில் தலை விரித்து ஆடின. அலைகள் செல்லமாக மோதித் திரும்பும் கரையோரம் அந்தப் படகு வந்து ஒதுங்கியது.

"பார்த்து இறங்கு" என்றான், ஆதி.

"இது என்ன இடம்?"– அவன் கைப்பிடித்து, நர்மதா மணல் வெளியில் மெல்லக் கால் வைத்தாள்.

"பூமிதான். பூமியிலும், உள் நாட்டைச் சேர்ந்த பெயரில்லாத தீவு இது..."

"இங்கே எதற்காக...?" – நர்மதா குழப்பத்துடன் அவனைப் பார்த்தாள்.

"இனி இதுதான் நம் பூமி. இதுதான் நம் சுகுடா"– ஆதி அவளை மணலில் நடத்திப் போனான். மரங்களுக்கு இடையில் அடக்கமாகக் கட்டப்பட்டு, ரகசியமாகப் பொதிந்திருந்த ஒரு சிறு வீட்டிற்குள் கதவு தள்ளி நுழைந்தான்.

"வா நர்மதா."

லெப்டினன்ட் கர்னல் சதுர்வேதி!

"உன் இதயம் படபடக்கிறது. உடனே அத்தனை விளக்கங்களையும் தேடி மூளை பரபரக்கிறது... உட்கார்..."

அவருக்கு எதிரில் இருந்த நாற்காலியில் அவள் ஆச்சரியம் விலகாமல் அமர்ந்தாள்.

"ஜீப், அப்புறம் சிறு விமானம், அப்புறம் இயந்திரப் படகு என்று வாகனங்கள் மாறியபோது கூட இறுதியில், சுகுடாவின் விண்கலத்தைத்தான் சென்றடையப் போகிறோம் என்று நான் நினைத்திருந்தேன்" – நர்மதா, ஆதியின் கையை விடவில்லை.

"சுகுடா என்று ஒரு கிரகம், அங்கிருந்து ஒரு விண்கலம், ஆதிக்கு மட்டுமே கேட்கக் கூடிய ஒலி அலைவரிசை – எல்லாமே ஒரு ஏற்பாடுதான், நர்மதா. எதுவும் உண்மையில்லை..."

"உண்மையில்லையா? இந்தப் பொய் ஏன்? ஏன்? ஏன்?"





"உலகம் அமைதி இழந்துவிட்டது. மனிதர்கள் ஒற்றுமை இழந்துவிட்டார்கள். போட்டி, பொறாமை, பகை– எல்லாவற்றையும் மறந்து மனித இனம் அத்தனையும் ஒற்றுமையாய் இருக்காதா என்று எனக்கு ஏக்கமே வந்துவிட்டது. தொடர்ந்து முடிகிறதோ... இல்லையோ, அட ஒரு மாதத்திற்காவது எந்த நாடும் இன்னொரு நாட்டின் மீது போர் தொடுக்காமல்– குண்டு பொழியாமல் இருக்க என்ன வழி?"

"ஒரு பொதுப் பகைவனை கற்பனையால் உருவாக்கினால் எப்படி இருக்கும்? மிக முக்கியமான நண்பர்களுடன் கலந்து பேசினேன். உலக அமைதி விரும்பும் நண்பர்களும், அரசின் உயர் அமைச்சர்களும் என் திட்டத்திற்கு பச்சை 'சிக்னல்' கொடுத்தார்கள்."

"சராசரி மனிதனைவிட உயரமாய் இருக்கும் ஆதியைக் கண்டுபிடிச்சோம். எங்கள் திட்டத்திற்கு ஒரு காசுகூட வாங்காமல் முழு ஒத்துழைப்பு தர அவன் முன் வந்தான். மணல் வெளியில் வளர்ந்து பழகியவன் என்பது போல் காட்டிக்கொள்ள அவனுக்கு பாலைவனங்களில் தொடர்ந்து பயிற்சி தந்தோம். சுகுடா மொழி ஒன்றை உருவாக்கினோம். புதிய இழைகளால் அவனுக்கு ஆடை தயாரித்தோம். ஒரு விண்கலம் வந்து இறங்கியது போன்ற தடயங்களைத் தயார் செய்தோம்.

ஆதி கண்டு பிடிக்கப்பட்டான். 'அல்ட்ரா ஸானிக்' அலைவரிசையில் 'ஹெட்போன்' கண்டெடுக்கப்பட்டது. இந்தத் தீவில் இருந்து ஒலிபரப்பான சுகுடா மொழியை அது வாங்கி ஒலி பரப்பியது. இங்கிருந்து நண்பர்கள் உதவினார்கள்.

"உலகம் ஒற்றுமையாக இருந்தால், தாக்குதல் இருக்காது என்ற எண்ணம் விதைக்கப்பட்டது. என்ன ஆச்சரியம்! அத்தனை நாடுகளும் ஒற்றுமையாய் இருந்தன. அற்ப காலத்திற்குத்தான் என்றாலும், அப்படி ஒற்றுமையாய் இருப்பதன் சுவை என்ன என்று அத்தனை நாடுகளும் அனுபவித்துப் புரிந்துகொண்டிருக்கின்றன. இது தொடரலாம் அல்லது தடங்கல் வரலாம்... அப்படி தடங்கல்



வரும்போதெல்லாம் இந்தத் தீவில் இருந்து சுகுடா மொழியில் மறுபடி மிரட்டல் கொடுக்கலாம் என்று எண்ணம்.

"முதலில் ஆதி மட்டும் இதில் பங்குகொள்வதாகத் திட்டம். உண்மையில் அவன் மீது குண்டு பாய்ச்சி காயப்படுத்தி போர்க்களத்தில் போட்டோம். இறுதியில் சுகுடாவிற்குத் தப்பிப் போய்விட்டதாக ஒரு 'செட்டப்' செய்து– அவன் இந்த தீவில் வாழ்நாளின் மீதியைத் தலைமறைவாகக் கழிக்கத் தயாராக இருந்தான்.

"ஆனால் உனக்கும், அவனுக்குமான உறவு– நாங்கள் யாரும் திட்டமிடாதது. இயற்கையாய் நடந்து வளர்ந்தது. உன்னைத் தனிமைப்படுத்த விரும்பாமல், ஆதி உன்னையும் இங்கு கொண்டு வர விரும்பினான். உன் அப்பா, படிப்பு, உலகத்துடனான உனது தொடர்பு இவற்றை நீ தியாகம் செய்ய வேண்டியது இருக்கும், பரவாயில்லையா? மற்றபடி இங்கு அத்தனை வசதிகளும் உண்டு."

நர்மதா நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

"இந்த உலகம் அமைதியாய் இருக்கப்போகிறது என்றால் அதற்காக எதையும் விட்டுக் கொடுக்கலாம், சார். அதுவும் என் ஆதி (வயிற்றைத் தொட்டு)– எங்கள் ஆதியும் எனக்கு துணை இருக்கும்போது வேறென்ன வேண்டும்? எனக்கு இந்த சுகுடா கிரகம் ரொம்பப் பிடித்திருக்கிறது... இதுதான் எங்கள் பூமி. இனிதான் எங்கள் இனிய வாழ்க்கை..."

சொல்லிவிட்டு நர்மதா ஆதியுடன் அழுத்தமாகக் கை கோர்த்துக்கொண்டாள். சதுர்வேதி இருப்பது பற்றிக் கூச்சமின்றி அவன் கன்னத்தில் தன் இதழ்களைப் பதித்து ஈர முத்திரை இட்டாள்.

தென்னை மரங்களின் ஊடே சூரியன் தகதகத்து எழும்ப ஆரம்பித்தது.

**(முடிவாக... ஒரு முற்றும்)**